# புதுமலர்

புதுமலர் பதிப்பகம்
ஈரோடு

| | | |
|---|---|---|
| புதுமலர் 11 | : | **ஜூலை - ஆகஸ்டு - செப்டம்பர் 2025**<br>திருவள்ளுவர் ஆண்டு 2056 |
| ஆசிரியர் | : | **கண.குறிஞ்சி** |
| இதழ் முகவரி | : | 6, முதல் வீதி, சக்தி நகர் மேற்கு,<br>திண்டல் (அஞ்சல்), ஈரோடு 638 012. |
| இதழ் தொடர்பு எண் | : | 9443307681 |
| மின்னஞ்சல் | : | gana.kurinji@gmail.com |
| அட்டை வடிவமைப்பு | : | **கண.குறிஞ்சி** |
| தனி இதழ் | : | ரூ. 130 ஆண்டுக்கட்டணம் : ரூ. 500<br>இரண்டாண்டுக் கட்டணம் : ரூ. 1000<br>மூன்றாண்டுக் கட்டணம் : ரூ. 15000 |


இதழுக்கான கட்டணம்
அனுப்பியவர்கள் உரிய தொகை
அனுப்பிய பிறகு, மறவாமல்
இதழின் தொடர்பு எண் மூலம்
அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு
கனிவுடன் வேண்டுகிறோம்
இல்லாவிடின், இதழை
அனுப்புவதில் சிரமம் ஏற்படும்

**புலனம் (வாட்ஸ்அப்) மூலம்
தகவல் தெரிவிப்பதை
உறுதியாகத் தவிர்க்கவும்**

ஆண்டுக்கட்டணம்
குறித்துத்தகவல் தெரிவிக்க
வேண்டிய தொடர்பு எண்:
94433 07681


**நெறியாளர்கள்**

- **வீ. அரசு**
- **பொதியவெற்பன்**
- **ஜமாலன்**
- **ரவி குமாரசாமி**


வங்கிக் கணக்கு விவரம்

**G. SHANMUGA SUNDARAM**

**INDIAN BANK, THINDAL BRANCH, ERODE**

**S/B A/c No. 7390 144 253 IFSC NO. IDIB000T202**

**G Pay - 94433 07681 - G. Shanmuga Sundaram**

# உள்ளடக்கம்


- இதழின் குரல் 4
- மேனாள் நீதிநாயகம் அரிபரந்தாமான் அவர்களின் விரிவான பேட்டி
  - **கண. குறிஞ்சி** 9
- பக்தி இயக்கங்களில் ஊடாடும் வைதிக எதிர்ப்பு: க.நெடுஞ்செழியன் ஆய்வுகளை முன்வைத்து...
  - **வே.மு.பொதியவெற்பன்** 54
- கி.ராவின் "தாப்பு"
  - **க.பஞ்சாங்கம்** 67
- குழப்பத்தில் குடிமக்கள் தேசம்
  - **க.பழனித்துரை** 72
- தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தோற்றப் பின்னணியும் சாதனைகளும்
  - **ப.பா.ரமணி** 79
- எனை ஆட்கொண்ட ஆதிமூலம்
  - **மு.சுந்தரன்** 96
- உயர்நீதிமன்றத்தில் தமிழுக்குத் தடையா?
  - **கோவை சுப்ரமணியன்** 107
- குலவை
  - **நந்தினி. மா.** 111
- நல்லோர் வட்டம் 121
- உங்கள் மனஓசை 126

# இதழின் குரல்

அண்மையில் மிகப்பெரும் பேசுபொருளாக அமைந்தது கீழடி அகழாய்வு அறிக்கை. சிவகங்கை மாவட்டம் கீழடியில் ஒன்றியத் தொல்லியல் துறையால் முதலில் அகழாய்வுகள் நடத்தப்பட்டன. 2014 முதல் 2016 வரை தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் இராமகிருஷ்ணன் அவர்களால் 292 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இரண்டு அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மிகவும் அக்கறையுடனும், தீவிரமாகவும் வினையாற்றி மிகச்சிறப்பாக அமர்நாத் அவர்கள் அப்பணியை மேற்கொண்டார்.

தான் மேற்கொண்ட இரு அகழாய்வுகள் குறித்த அறிக்கைகளையும் அவர் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் அவ்விரண்டு அறிக்கைகளும் இதுவரை வெளியிடப்படவில்லை. நாடாளுமன்றத்தில் இது குறித்துக் கேள்வி எழுப்பிய பொழுது அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று மட்டும் குறிப்பிடப்பட்டது.

இதற்கிடையில் மூன்றாவது அகழாய்வு தொடங்கப்பட்ட பொழுது அமர்நாத் இராமகிருஷ்ணன் அவர்கள் திடுமென அசாம் மாநிலத்திற்கு மாற்றப்பட்டார்.

அவரைத் தொடர்ந்து இராஜஸ்தானத்திலிருந்து ஸ்ரீராம் என்பவர் கீழடி .அகழாய்வுக் கண்காணிப்பாளராக ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டார். அவர் 2017 ஆம் ஆண்டு அகழாய்வைச் சனவரியில் தொடங்கி செப்டம்பரில் அவர் முடித்துக் கொண்டார். 400 சதுர மீட்டரில் 16 குழிகள் மட்டுமே தோண்டி, கீழடியில் உருப்படியாக ஏதுமில்லை என அறிவித்து ஆய்வை (?) முடித்துக் கொண்டார். (ஜெய் ஸ்ரீராம்) எனவே கீழடி

அகழாய்வில் உருப்படியாக ஒன்றுமில்லை எனக்கூறி ஒன்றிய அரசும் அம்முயற்சியைக் கைவிட்டுவிட்டது. நிதி ஒதுக்கீட்டையும் நிறுத்தி விட்டது.

அதன்பிறகு, தமிழக அரசு தொல்லியல் துறை சார்பில் மீண்டும் கீழடியில் அகழாய்வு தொடங்கப்பட்டது. புதிய புதிய பொருள்கள் அடுக்கடுக்காகக் கண்டறியப் பட்டன.

ஏறக்குறைய 13,000 கலைப் பொருள்கள் கண்டறியப் பட்டன. (The Times of India dated 24/05/2025) கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் அமெரிக்காவில் உள்ள பீட்டா பகுப்பாய்வுச் சோதனைச் சாலைக்கு அனுப்பப்பட்டு அறிவியல் வழியான விவரங்கள் வெளியாயின.

அந்தக் கண்டுபிடிப்புகள், இந்திய வரலாற்றையே புரட்டிப் போட்டன. இந்திய வரலாற்றைத் தமிழகத்திலிருந்துதான் தொடங்க வேண்டும் எனும் பல்வேறு அறிஞர்களின் கூற்றை அக்கண்டு பிடிப்புகள் மெய்ப்பித்தன.

மூன்றோடு முடிந்திருக்க வேண்டிய கீழடி அகழாய்வு, இன்று பத்தாவது முறையாகத் தமிழக அரசின் விடாமுயற்சியால் மறுபடியும் தொடர்கிறது.

முதலிரு அகழாய்வு அறிக்கைகளை 982 பக்கங்களில் அமர்நாத் அவர்கள் முழுமையாகச் சமர்ப்பித்து விட்டார். ஆனால் முழு அறிக்கை பெறப்பட்டு இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியத் தொல்பொருள் ஆய்வு இயக்குநர் ஹேமசாகர் ஏ. நாயக் என்பவர், அமர்நாத் அவர்களின் அறிக்கை பற்றிச் சில ஐயங்களைக் கிளப்பியுள்ளார்.

அமர்நாத் அவர்களின் அறிக்கை குறித்து இரண்டு "நிபுணர்களிடம்" கருத்துக் கேட்டதாகவும், அவரது அறிக்கை, "கூடுதல் நம்பகத்தன்மை" யுடன் இல்லை என அறிய வந்ததாகவும், எனவே அதில் "திருத்தங்கள்" மேற்கொண்டு திருப்பி அனுப்புமாறும். இப்பொழுது அமர்நாத் அவர்களுக்கு நாயக் தெரிவித்துள்ளார்..

ஆனால், அமர்நாத் அவர்கள் இதற்கு உடனடியாகப் பதிலளித்து விட்டார் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன. தனது அறிக்கை ஆவண வழியிலான சான்றாதாரங்களைக் கொண்டிருப்பதாகவும், கால வரிசைப்படி உள்ளதாகவும், இதற்கான ஆவணங்கள் ஏற்கெனவே சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாகவும், வரைபடங்கள், தட்டுகள், படங்கள் ஆகியவை தெளிவுடன் உள்ளதாகவும், எனவே கீழடியின் காலம் கி.மு.800 என உறுதி செய்யலாம் எனத் தெரிவித்ததோடு, முன்பே சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைத் "திருத்தம்" செய்ய வேண்டிய அவசியம் ஏதுமில்லை எனவும் உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் தமிழகம் வந்த ஒன்றியப் பண்பாட்டுத்துறை அமைச்சர் கஜேந்தர் சிங் ஷெகாவத், "அமர்நாத் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் அறிவியல் வழியிலான தரவுகள் போதுமான அளவில் இல்லை. தொழில்நுட்ப விவரங்கள் இன்னும் தேவைப்படுகின்றன" என அருளுரை வழங்கினார்.

தொல்லியல் ஆய்வாளர். அமர்நாத் அவர்களின் அறிக்கை குறித்துக் கேள்வி எழுப்பிய அந்த இரு "ஆய்வாளர்கள்" யார் என்பது பொது வெளியில் பகிரப்படவில்லை. மேலும் அமர்நாத் அறிக்கையை ஏன் முழுமையாகப் பொது வெளியில் வெளி யிடவில்லை என்ற கேள்விக்குப் பதிலும் இல்லை. அமர்நாத் அவர்களின் அறிக்கையைப் பொது வெளியில் பகிர்ந்தால் அது அறிவியல் ரீதியாக உள்ளதா இல்லையா என்பது தெரிந்து விடப் போகிறது அதை ஏன் ஒன்றிய அரசு மறைக்க வேண்டும்? நியாயமான இப்படிப்பட்டப் பலவகை ஐயங்கள் எழுகின்றன.

தொடக்கத்திலிருந்தே தமிழ் - தமிழர் - தமிழ்நாடு ஆகியவற்றின் தொன்மை குறித்துச் சங்பரிவாரத்திற்கு மிகப்பெரும் ஒவ்வாமை இருந்து வருவதை அனைவரும் அறிவர். சிந்து வெளி நாகரிகம், தமிழ் நாகரிகத்தோடு பற்பல தரவுகளின் மூலம் இசைந்து வருவதைச் சங்கிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சிந்து வெளி நாகரிகம், சரஸ்வதி நாகரிகம் என அவர்கள் புதுக்கதையைக் கட்டமைத்து வருகின்றனர். சமஸ்கிருதம் மற்றும் வேதகாலம்தான். "பாரதத்திலேயே" மிகவும் தொன்மை வாய்ந்தவை எனப் பிடிவாதமாகச் சாதித்து வருகின்றனர். ஆனால் அவர்களது புழுகுக்கெல்லாம் எவ்விதத் தரவுகளும் இல்லை. வெறும் புனைவுகளையும் புராணங்களையும்

வரலாறாக மாற்றும் கபட முயற்சிதான் உள்ளது. தமிழின் / தமிழகத்தின் தொன்மை, அவர்களின் தொண்டையில் முள்ளாகக் குத்திக் கொண்டிருக்கிறது இது அவர்கள் கட்டியமைக்க விரும்பும் ராஷ்ட்ரா பாஷா சமஸ்கிருதத்திற்கு வேட்டு வைக்கிறது. அதனால், சங்கிகள் பொறாமையால் வெந்து சாகின்றனர். அதன் வெளிப்பாடுதான் கீழடி அகழாய்வு அறிக்கையை முடக்கும் முயற்சி.

அது மட்டுமல்ல, 1904 ஆண்டு வாக்கில் தொடங்கப்பட்ட ஆதிச்சநல்லூர் அகழாய்வு அறிக்கையைக்கூட இன்று வரை முழுமையாக வெளியிடாமல் நீண்ட காலமாகக் கமுக்கமாக அழுத்தி வைத்துள்ளனர்.

ஆனால், உண்மையின் ஒளி, வலிமை மிக்கது. அது காவி இருளைக் கிழிக்கும் என்பதை அவர்கள் அறியாமல் இருக்கின்றனர். எனவே "காலிச்சாக்கு நிமிர்த்து நிற்க முடியாது" எனும் சீனப் பழமொழியைத் தற்பொழுது அவர்களுக்கு நினைவூட்ட வேண்டியுள்ளது.

இந்திய வரலாற்றில் நூற்றாண்டுகள் கடந்தும் நெடிதோங்கி ஒரு செய்தி நிலைத்து நிற்கிறது. எத்தனை குட்டிக்கரணம் போட்டாலும், சமஸ்கிருதத்தால் தமிழை ஒருக்காலும் வெல்ல முடியாது என்பதுதான் அந்த அழிக்க முடியாத செய்தி.

♦♦♦

## மேனாள் நீதிநாயகம் அரிபரந்தாமான் அவர்கள்



நன்றி - ஓவியர் சுந்தரன்

# மேனாள் நீதிநாயகம் அரிபரந்தாமான் அவர்களின் விரிவான பேட்டி

**கண. குறிஞ்சி**

● **தங்களது பிறப்பு, பெற்றோர், பள்ளிக்கல்வி குறித்த விவரங்களைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம்.**

நீதிபதி அரிபரந்தாமன் அவர்கள்

நான் பிறந்தது கொண்டஞ்சேரி என்ற சிறிய கிராமம். அது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது.

எனது குடும்பம் விவசாயக் குடும்பம். தந்தை துரைசாமி. அவர் பள்ளி சென்றதில்லை. ஆனால் அவருக்கு எண்ணும் எழுத்தும் தெரியும். மண்தரையிலும், ஓலைச்சுவடியிலும் படித்தவர். எனது அம்மா ராஜாம்பாள். அவருக்கு எண்ணும் தெரியாது, எழுத்தும் தெரியாது. அவரும் பள்ளி சென்றதில்லை.

எனது தம்பி ஒரு வருடம் நான்கு மாதத்தில் பிறந்ததால் என்னை வளர்த்தது எங்கள் வீட்டில் இருந்த விதவை அத்தை. அவரை அம்மா என்றே அழைப்பேன். அவர் பெயரும் ராஜாம்பாள். இவரும் கல்லாதவரே. எனக்கு ஒரு தங்கையும் உண்டு.

1959 ஆம் ஆண்டில் எங்கள் கிராமத்தில் அப்போதைய முதல்வர் காமராசர் அவர்களால் தொடக்கப்பள்ளி திறக்கப்பட்டது.

ஐந்து வயது நிரம்பாத என்னை ஐந்து வயது நிரம்பியதாகச் சொல்லி அந்தப் பள்ளியில் சேர்த்தனர். நானே எனது குடும்பத்தில் பள்ளிக்குச் சென்ற முதல் நபர்.

ஆறாம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை சென்னையில் உள்ள டாக்டர் குருசாமி முதலியார் தொண்டை மண்டல துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் 1964-65 முதல் 1969-70 வரை ஆறு ஆண்டுகள் படித்தேன். அது அரசு உதவி பெறும் பள்ளி. பிராட்வே அருகில் உள்ள கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் உள்ள மணலி விடுதியில் தங்கினேன். உணவும் அந்த விடுதியே அளித்தது. அது இலவச விடுதி. காங்கிரஸ் கட்சியில் இருந்த மறைந்த மணலி இராமகிருஷ்ண முதலியார் அதன் அறங்காவலர். அவரது மூதாதையர்கள் கட்டிய விடுதி. நீதிக்கட்சி தோன்றிய காலத்தை ஒட்டி அந்த விடுதி கட்டப்பட்டிருக்கும் என நினைக்கிறேன்.

● **சட்டக்கல்லூரி மற்றும் முற்போக்கு இயக்கங்களில் பங்கேற்ற அனுபவங்கள்.**

★ 1970-71 இல் புகுமுக வகுப்பும், 1971-74 இல் இளங்கலை கணிதமும், 1974-76 இல் முதுகலை கணிதமும் சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள ஜெயின் கல்லூரியில் படித்தேன்.

பட்டப் படிப்பு வரை கிண்டியில் உள்ள இலவச உணவு விடுதியில் தங்கியிருந்தேன். சென்னை மல்லீஸ்வரர் -கேசவ பெருமாள் கோயில் அறக்கட்டளை அந்த விடுதியை நடத்தி வந்தது. அந்த அறக்கட்டளையின் அறங்காவலரும் மறைந்த மணலி இராமகிருஷ்ண முதலியார் அவர்களே.

அந்த விடுதி மாணவர்களுக்கும் விடுதி காப்பாளருக்கும் இடையே இருந்த ஒரு கருத்து வேறுபாட்டை ஒட்டி முதுகலை படிக்கும் போது அங்கே எனக்கு இடம் கிடைக்காமல் போனது. எனவே ஜெயின் கல்லூரியின் விடுதியில் தங்கிப் படித்தேன்.

கிண்டியில் உள்ள மேற்சொன்ன இலவச உணவு விடுதி தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் பல தலைவர்களை உருவாக்கிய இடம். தோழர் அ. சௌந்தரராஜன், கோவையில் நாடாளுமன்ற உறுப்பினராக இரு முறை இருந்த தோழர் பி. ஆர். நடராசன் ஆகியோர் இந்த விடுதி மாணவர்களே.

செங்கல்பட்டில் முழு நேர ஊழியராகப் பணியாற்றி மறைந்த தோழர் இராதாகிருஷ்ணன் அந்த விடுதியில் படித்தவரே. மின்சார வாரியத்தில் சி.ஐ.டி.யு சங்கத்தின் மாநிலத் தலைவராக இருந்த தோழர் கே.விஜயன் படித்ததும் அந்த விடுதியில்தான். எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் தோழர் வீ.பா. கணேசன் படித்ததும் அந்த விடுதியில்தான். நான் அந்த விடுதியில் சேர்ந்த போது தோழர் சௌந்தரராஜன் அவரது பட்டப்படிப்பை முடித்துச் சென்று விட்டார் .மற்றவர்கள் அனைவரும் நான் படித்த போது படித்தவர்கள்.

இதில் மறைந்த தோழர் இராதாகிருஷ்ணன் அவர்களே நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வரக் காரணமானவர். அவசர நிலை காலத்தில் நான் முதுகலை கணிதம் படித்துக் கொண்டிருந்த போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரானேன்.

என்னுடன் அப்போது உறுப்பினரானவர் தோழர் அண்ணாமலை. அவரும் அந்த விடுதியில் இளங்கலை கணிதம் வரை படித்தவர். அவருக்கும் விடுதி காப்பாளருக்கும் நடந்த நேரடி வாக்குவாத நிகழ்வை ஒட்டி அவருக்கும் முதுகலை கணிதம் படிக்கும் போது விடுதியில் இடம் அளிக்கப்படவில்லை. நான் முதலாண்டு இளங்கலை கணிதம் படித்த போது அவர் மூன்றாம் ஆண்டு இளங்கலை கணிதம் படித்தார்.

தோழர் அண்ணாமலையைப் பற்றி குறிப்பிட்டாக வேண்டும். அவர் துணிகள் ஏற்றுமதி வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்தியவர். தோழர் இராதாகிருஷ்ணனுக்கு அனைத்து உதவிகளையும் செய்தவர். எனக்கும் அவர் செய்த பொருளாதார உதவிகள் எண்ணற்றவை. ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால் எனக்கு அவர் ஒரு வங்கி போலவே இருந்தார். அவரைத் தவிர வேறு எவரிடமும் நான் பொருள் உதவி கேட்டுச் சென்றதில்லை. ஆனால் இந்த வங்கி அளிக்கும் பணத்திற்கு வட்டி கிடையாது. நான் குடியிருக்கும் வீட்டை வாங்கியது, கட்டியது, எனது அலுவலகத்தைக் கணனி மயமாக்கியது, கார் வாங்கியது என எனது பல வளர்ச்சியில் அவரது பண உதவி மிக அடிப்படையானது. எந்தப் பயனையும் எதிர்பாராமல் செய்த உதவி அது. வள்ளுவனின் வார்த்தையில், அது கடலின் பெரிது.

நான் ஆசிரியராக விரும்பியே முதுகலை கணிதம் படித்தேன். மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்த பின்னர் சட்டம் படிப்பது என்று முடிவெடுத்தேன். அதற்குக் காரணமானவர் மறைந்த தோழர் இராதாகிருஷ்ணன். 1976-79இல் சட்டம் படித்தேன். சட்டம் படித்தபோது இந்திய மாணவர் சங்கத்தில் முழு வீச்சில் செயல்பட்டேன். மூன்றாம் ஆண்டு படித்தபோது சென்னை -செங்கை மாவட்டத்தின் (இப்போதைய செங்கை, காஞ்சி, திருவள்ளூர் மாவட்டம்)இந்திய மாணவர் சங்கச் செயலாளராக இருந்தேன். 1979ஆம் ஆண்டு பாட்னாவில் நடந்த இந்திய மாணவர் சங்கத்தின் அகில இந்திய மாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொண்டேன். 1979 ஆம் ஆண்டில் நடந்த சட்டப் படிப்பிற்கான இறுதி ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை.

**● வழக்கறிஞராகப் பணியாற்றியதும், அது சமயம் எதிர்கொண்ட வழக்குகளும்**

★ பள்ளிக்கே நான் முதல் தலைமுறை என்று குறிப்பிட்டேன். உயர்நிலைப் பள்ளி வரை படித்ததும் தமிழ் வழி .கல்லூரியிலும் கணிதம் படித்ததால் ஆங்கிலம் பெரிய அளவு அவசியம் இல்லை. ஆனால் சட்டம் படிப்பதற்கும் பின்னர் குறிப்பாக உயர்நீதிமன்றத்தில் தொழில் செய்வதற்கும் ஆங்கிலம் தவிர்க்க இயலாது என்பது தெரிந்தது. அரசியலில் 1975 இல் காலடி வைத்த போதே, அரசியல் ஆர்வத்தை ஒட்டி ஆங்கிலப் பத்திரிகை படிக்க முயற்சித்தால் அது மிகச் சிரமமாக இருந்தது. எனவே சுய முயற்சியில் ஆங்கிலம் கற்கத் தீர்மானித்தேன்.

1979 ஆம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத நிலையில், வழக்கறிஞர் தோழர் சிகரம் செந்தில்நாதன் அவர்களிடம் வழக்கறிஞர் தொழில் பழகச் சேர்ந்தேன். 1980 இல் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றேன். 3-9-1980இல் தமிழ்நாடு பார் கவுன்சிலில் வழக்குரைஞராகப் பதிவு செய்தேன். தோழர் செந்தில்நாதனின் முதல் ஜூனியர் நான்தான். தொழிலாளர்கள் சம்பந்தமான வழக்குகளில் பயிற்சி பெற்றேன்.

தோழர் செந்தில்நாதனுடன் தொழில் பழக ஆரம்பிக்கும் போதே சென்னையில் என்னை வளர்த்த அம்மா ராஜாம்பாள்

ஊரிலிருந்து வந்து என்னுடன் தங்கினார். 2008இல் அவர் மறையும் வரை என்னுடன் இருந்தார்.

1982 ஆம் ஆண்டு இறுதியில் பிரபல குற்றவியல் வழக்கறிஞர் திரு எம். வெங்கட்ராமன் அவர்களிடம் ஜூனியராகச் சேர்ந்தேன். அவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சம்பந்தப்பட்ட குற்றவியல் வழக்குகளைக் கட்டணம் இன்றி நடத்தி தருவார். அவரிடம் ஜூனியராகப் பயிற்சி பெற்றவர்தான் பின்னர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராக இருந்த தோழர் ஜி. ராமகிருஷ்ணன்.

எனது வழக்குரைஞர் தொழிலைச் செங்கல்பட்டில் செய்வது என்பதுதான் எனது திட்டம். செங்கல்பட்டில் தோழர் இராதாகிருஷ்ணனின் அரசியல் செயல்பாட்டிற்கு உதவியாக எனது வழக்குரைஞர் தொழிலை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம். செங்கல்பட்டில் தொழிலாளர் வழக்குகளை மட்டும் நடத்தித் தொழில் செய்ய முடியாது; அங்கு தொழிலாளர் நீதிமன்றமே கிடையாது. சென்னையில் உள்ள தொழிலாளர் நீதிமன்றத்தில்தான் செங்கல்பட்டு தொழிலாளர்கள் வழக்கு நடத்த வேண்டும். செங்கல்பட்டு அரசியல் செயல்பாட்டிற்குக் குற்றவியல் வழக்கு நடத்துவது மிக அவசியம். அதற்காகவே வழக்குரைஞர் எம் வெங்கட்ராமனிடம் ஆறு மாதம் ஜூனியராகப் பயிற்சி பெற்றேன். அந்த ஆறு மாதத்தில் அவர் ஆறு கொலை வழக்குகள் நடத்தினார்.

தோழர் இராதாகிருஷ்ணனுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஏற்பட்ட சில கருத்து வேறுபாடுகள் காரணமாக, என்னைச் செங்கல்பட்டுக்கு வர வேண்டாம் என்றும், சென்னை உயர்நீதிமன்றத்திலேயே தொழில் செய்யவும் அறிவுறுத்தினார்.

இந்த நிலையில் தொழிலாளர் வழக்குகள் நடத்துவதில் மிகப் பிரபலமான அலுவலகமான ராவ் அண்ட் ரெட்டியில் ஜூனியராகப் பணிபுரிய மூத்த வழக்கறிஞர் என்.ஜி.ஆர் பிரசாத் அவர்களை அனுகினேன். அந்த அலுவலகத்தில் தான் தோழர் சந்துரு( பின்னர் உயர் நீதிமன்ற நீதிபதியான சந்துரு

அவர்கள்) ஏழு ஆண்டுகள் ஜூனியராக இருந்தார். தற்சமயம் மூத்த வழக்கறிஞராக இருக்கும் தோழர் வைகையும் அந்த அலுவலகத்தில் சுமார் பத்து ஆண்டுகள் ஜூனியராக இருந்தார். துரதிஷ்டவசமாக என் ஜி ஆர் பிரசாத் அவர்கள் எனக்கு அந்த அலுவலகத்தில் பணிபுரிய வாய்ப்பு அளிக்கவில்லை.

இந்தச் சூழலில் தனித்து வழக்குரைஞராக 1983 ஜூனிலிருந்து செயல்பட்டேன். இந்த சூழலில் 1983 ஜூன் 5 இல் எனக்குத் திருமணம் நடந்தது.

பின்னர், குற்றவியல் வழக்கறிஞர் தோழர் விஜயகுமாருடன் சேர்ந்து வழக்கறிஞர் அலுவலகம் தொடங்கினேன். ராவ் அண்ட் ரெட்டியில் பணியாற்றிய தோழர்கள் அய்யாதுரை மற்றும் ராசாராம் ஆகியோர் அந்த அலுவலகத்தில் இருந்து வெளியே வந்த நிலையில் எங்கள் அலுவலகத்தில் இணைந்தனர். அந்த அலுவலகம் ஒரு கம்யூன் போல செயல்பட்டது. அதாவது வருவாயை அனைவரும் சமமாகப் பகிர்ந்து கொள்வது என்பதையே கம்யூன் என்றேன். அது தவறு என்பது எனது தற்போதைய கருத்து. தனிப்பட்ட திறமை சார்ந்த தொழில்களில் கம்யூன் முறை சரியானது அல்ல.

1989- 90 ல் நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு வெளியேறியவுடன் எனது அலுவலகத்தில் இருந்து தோழர் அய்யாதுரை வெளியேறினார். அதற்குப் பின்னர் கம்யூன் முறை கைவிடப்பட்டது. அலுவலகத்திற்கான வாடகையை மற்ற மூவரும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டு அவரவர் தனித்தனியே அலுவலகம் நடத்தினோம். எழுத்தரும் தட்டச்சரும் என்னுடைய அலுவலகத்தில் தொடர்ந்து பணி புரிந்தனர்.

இக்காலத்தில் ஒரு முக்கிய நிகழ்வு நடந்தது. என்னைத் தனது அலுவலகத்தில் சேர்க்க மறுத்த மூத்த வழக்கறிஞர் என்.ஜி.ஆர். பிரசாத் அவர்களுடன் தொடர்ந்து தினம் தினம் பல வழக்குகளில் பணி புரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

வாரத்தில் குறைந்தது இரண்டு நாட்கள் காலையில் 6:30 மணிக்கு அவரது வீட்டிற்கு வரச் சொல்வார். அவரது வீடு கீழ்ப்பாக்கம் பகுதியில் இருந்தது. நான் பெசன்ட் நகர் பகுதியில்

வசித்தேன். காலையில் பேருந்து மூலம் அவரது வீட்டிற்குச் செல்வேன். வழக்கைப் பற்றி விவாதித்து, பின்னர் அவருடனே அவரது காரில் உயர்நீதிமன்றம் வருவேன். வீட்டிலிருந்து காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவும் கையில் தவறாமல் எடுத்து வருவேன்.

என்னை ஸ்கூட்டர் வாங்குமாறு அறிவுறுத்தினார். இந்தியன் வங்கியில் கடன் பெற்று பஜாஜ் கப் என்ற 100 CC ஸ்கூட்டர் வாங்கினேன். அந்தக் கடன் பெறுவதற்கான முன் தொகை (margin money) அவர் கடனாகக் கொடுத்து உதவினார். இது நிகழ்ந்தது 1987 ஆம் ஆண்டு இறுதியில்.

இதற்குப் பின்னர் ஸ்கூட்டரை அவரது வீட்டில் விட்டுவிட்டு அவரது காரில் உயர் நீதிமன்றம் வரச் சொல்வார். மாலையில் என் பணி முடிந்ததும் அவரது வீட்டிற்கு வந்து ஸ்கூட்டரை எடுத்து வருவேன். எனக்கு அவர் எண்ணற்ற வழக்குகளைக் கொடுத்தார். அதைத் தயாரிப்பது எனது பணி. தயாரித்து வழக்கின் விவரங்களை அவரது வீட்டிற்குச் சென்று கூறியதும் நீதிமன்றத்தில் அவர் வாதிடுவார்.அவர் மூலமாகவே உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடத்தும் அனுபவம் எனக்குப் பெரிய அளவில் கிடைத்தது.

எனது முக்கிய வழக்குகளிலும் அவர் எனக்காக வாதிடுவார். என்னை ஏனோ அவருக்குப் பிடித்துப் போனது.

இது 1996 வரை நீடித்தது. 1996 இல் தோழர் சந்துரு அவர்கள் மூத்த வழக்கறிஞர் ஆனார். அவரது அலுவலகத்தில் ஒரு கணிசமான தொழிலாளர் தொடர்பான வழக்குகளை நான் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். எனவே எனது அலுவலகம், எனது ஜூனியர்கள், எழுத்தர், தட்டச்சர் அவரது அலுவலகத்திற்குச் சென்றது. அவர் மூத்த வழக்கறிஞரானவுடன் அவருக்கெனத் தனி அலுவலகம் கிடையாது. நூலகமே அவரது அலுவலகம். 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை அவரது அலுவலகத்தில் இருந்தேன்.

2002 மே மாதத்தில் திருவான்மியூரில் நான் கட்டிய வீட்டில் எனது அலுவலகத்தை மாற்றினேன். இதற்கிடையில் 2006 இல் தோழர் சந்துரு உயர் நீதிமன்ற நீதிபதியானார்.

தொழிலாளர்கள் வழக்கை மட்டுமே நடத்தினேன். அதிலும் குறிப்பாகத் தமிழ்நாடு முழுவதும் உள்ள போக்குவரத்துத் தொழிலாளர்களின் வழக்குகளை நடத்தியதைக் கூறியாக வேண்டும். தோழர் அ. சௌந்தரராஜன், கோயம்புத்தூர் சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தோழர் காளியப்பன், மதுரை பாண்டியன் போக்குவரத்துக் கழகச் செயலாளர் தோழர் பிச்சை, திண்டுக்கல் ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகச் செயலாளர் செயலாளர் தோழர் ஆறுமுகம் நயினார், சென்னை பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் சங்கத்தின் தீவிர ஊழியராக இருந்த தோழர் சேகர் எனப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த பலரும் எனது அலுவலகத்துடன் கிட்டத்தட்ட தினமும் தொடர்பில் இருந்தவர்கள். வேலை போன ஆயிரக்கணக்கான போக்குவரத்து ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வாங்கிக் கொடுத்த மகிழ்ச்சி உண்டு. அவர்கள் பயன் அடைந்ததைப் போலவே நானும் என் அலுவலகமும் மிகுந்த பயனடைந்தோம்.

ஆலைத் தொழிலாளர்கள், மின்சார வாரிய ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், இன்சூரன்ஸ் ஊழியர்கள் என பலருக்கும் பல தொழிற்சங்கங்களுக்கும் நான் வழக்கறிஞராக வழக்குகள் நடத்தினேன். இவர்களுக்கான வழக்குகளை முதலில் தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயத்திலும் பின்னர் அதன் தொடர்ச்சியாக உயர்நீதிமன்றத்திலும் நடத்தினேன்.

பின்னர் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், அரசு ஊழியர்கள் எனப் பல தரப்பினருக்கும் குறிப்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் நடத்தினேன்.

நான் வழக்குரைஞராகத் தொழில் தொடங்கியது முதல் தொடர்ந்து மின்சார வாரியத்தில் தோழர் விஜயன் எங்கெங்கு பணி புரிந்தாரோ- சென்னை, தூத்துக்குடி, மேட்டூர்- அங்கெல்லாம் அவருடைய தொழிற்சங்கப் பணிக்கு உறுதுணையாக இருந்தேன். அவர் பணிபுரிந்த ஒவ்வொரு இடத்திலும் ஒப்பந்தத் தொழிலாளர்களைத் தொழிற்சங்கத்தில் இணைத்து அவர்களின் போராட்டத்தை முதன்மைப்படுத்தினார். அதனாலேயே அவர்

சென்னையில் இருந்து தூத்துக்குடிக்கும் பின்னர் தூத்துக்குடியில் இருந்து மேட்டூருக்கும் மாற்றலானார். அனல் மின் நிலையம் தவிர்த்து வேறு இடங்களில் அவரைப் பணி மாற்றம் செய்ய இயலாது.எனவே மேட்டூருக்கு பின் எங்கும் மாறுதல் செய்ய வேண்டாம் என்று நிர்வாகம் முடிவுக்கு வந்தது. இது அன்றி அவர் பகுதியில் இருக்கும் மற்ற ஆலைத் தொழிலாளர்களையும் தொழிற்சங்கத்தில் இணைத்து அவர்களின் உரிமைகளுக்காகப் போராடியவர் அவர். இதில் வழக்குகள் நடத்துவதுடன் அவரது தொழிற்சங்கப் பணிகளுக்கும் உதவியாக இருந்தேன்.

இதுபோல முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் வேலூரைச் சேர்ந்த ஊரிஸ் கல்லூரிப் பேராசிரியர் இளங்கோவன். அவர் தலித் செயற்பாட்டாளர், பேராசிரியர்கள் சங்க நிர்வாகி, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினர் எனப் பல பன்முகத் தளங்களில் இயங்கியவர். 1996 இல் தோழர் சந்துருவுடன் நான் இணைந்து செயல்பட்டது முதல், பேராசிரியர் இளங்கோவனின் அனைத்து வழக்குகளையும் நான் நடத்தினேன். அவர் சுமார் 40 பொதுநல வழக்குகள் போட்டார். அத்தனை வழக்குகளிலும் வெற்றி பெற்றுக் கொடுத்தேன். அவரின் கடுமையான உழைப்பும் அர்ப்பணிப்பும் இந்த வெற்றிக்கு அடிப்படைக் காரணம். மாற்றுத்திறனாளிகள் தொடர்பான சட்டம் 2006 முதல் வந்தது. அதில் பல வழக்குகளை தாக்கல் செய்யக் காரணமானவரும் அவரே. அவர் போட்ட பல வழக்குகள் மிக முக்கியம் வாய்ந்தவை. குறிப்பாகப் பட்டியல் இனத்தவரின் இட ஒதுக்கீடு மற்றும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான வழக்குகள் மிக முக்கியம். மாற்றுத்திறனாளிகள் தொடர்பான மிகப் பெரும்பாலான வழக்குகளை நான் தாக்கல் செய்தேன் என்றால் அதற்கு அவரே அடிப்படை.

புத்த மதத்திற்கு மாறிய பட்டியல் இனத்தவரும் பட்டியல் இனத்தவரே என்ற தீர்ப்பு, அரசின் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உதவி பேராசிரியர்களுக்கான 521 பின்னூட்டு (backlog vacancies) இடங்கள் நிரப்ப வேண்டும் என்ற தீர்ப்பு, தமிழ் நாடு அரசின் பல துறைகளில் 5000 இளநிலை உதவியாளர்களை பணி அமர்த்திய போது அதில் மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்ற தீர்ப்பு, போக்குவரத்து தொழிலாளர்கள் விபத்தின் போது மிகச் சிறிய

அளவில் தகுதி குறைந்தாலும் மாற்றுப் பணி அளிக்க வேண்டும் என்று வாங்கிய நூற்றுக்கணக்கான தீர்ப்புகள் என நான் நடத்திய வழக்குகளின் பட்டியல் நீளும்.

- **நீதிபதியாக வந்த பின் எதிர்கொண்ட வழக்குகள் மற்றும் உங்களது தீர்ப்புகள்**

★ 31.3.2009 அன்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றேன். 16.3.2016 வரை பணியாற்றி ஓய்வு பெற்றேன்.

எதிர் கொண்ட வழக்குகள் ஏராளம். நான் ஓய்வு பெறுவதற்கு முன் வாதங்களைக் கேட்ட அனைத்து வழக்குகளிலும் தீர்ப்பளித்தேன்.

ஒரு சில தீர்ப்புகளைச் சுருக்கமாகக் கூறுகிறேன்.

**அரங்கக் கூட்டம் நடத்துவதற்குக் காவல்துறையின் அனுமதி தேவையில்லை என்ற தீர்ப்பு, அரசமைப்புச் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமையான கருத்துரிமை தொடர்பானது.**

15.4.2015 அன்று பெரியார் திடலில் அண்ணல் அம்பேத்கரின் 125-வது பிறந்தநாள் விழாவும் மாட்டுக்கறி விருந்தும், தானாகத் தாலி அகற்றும் நிகழ்ச்சியும் எனத் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்திருந்தது. 15.4.2015 செவ்வாய்க்கிழமை. திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்களின் மேல் ஒரு குற்றவியல் வழக்கை இந்து மகா சபை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது. இந்து மதத்தை இழிவு படுத்துவதே மேற்சொன்ன 15.4.2015 அன்று திராவிடர் கழகம் நடத்தும் நிகழ்ச்சி என்பது குற்றவியல் வழக்கு. எனவே ஆசிரியரின் மேல் குற்ற வழக்கைப் பதிவு செய்ய வேண்டும் என்றும், ஆனால் காவல்துறை பதிவு செய்ய மறுக்கிறது என்பதும் வழக்கு. அந்த வழக்கில் 11.4.2015 வெள்ளிக்கிழமை அன்று நீதிபதி பி.என். பிரகாஷ் உத்தரவு போட்டார். ஆசிரியர் மேல் குற்ற வழக்கை பதிவு செய்ய வேண்டும் என்பது அந்த உத்தரவு.

இதனால் 12.4.2015 சனி அன்று, தமிழ்நாடு அரசு 15.4.2015 நிகழ்வுக்கு அனுமதி மறுத்தது. அந்த அனுமதி மறுப்பை ரத்து செய்து நிகழ்ச்சி நடத்துவதற்கு அனுமதி கேட்டு 14.4.2015 திங்கள் அன்று என் முன் வழக்கு வந்தது. அந்த வழக்கில்

நான் அளித்த தீர்ப்பில் கருத்துரிமையை பாதுகாத்து அரங்க கூட்டத்திற்கு காவல்துறை அனுமதி அவசியம் இல்லை என்று கூறினேன். எனவே திட்டமிட்டபடி 15.4. 2015 அன்று பெரியார் திடலில் நிகழ்ச்சி நடந்தது.

அடுத்த தீர்ப்பு, பின்தங்கிய சாதியைச் சேர்ந்தவர் இஸ்லாம் மதத்துக்கு மாறி இஸ்லாமிய மதத்தின் பின்தங்கிய பிரிவை சேர்ந்தவரை திருமணம் செய்து கொண்டால், அவர் பின் தங்கிய சாதியாக கருத வேண்டுமா அல்லது முன்னேறிய சாதியாக கருத வேண்டுமா என்பது பற்றியது.

விசாலாட்சி என்ற பெண் நாடார் சாதியைச் சேர்ந்தவர். அவர் பட்டப் படிப்பு படித்தவர். அவருக்கு திருமணம் நடக்கிறது. ஆண்டுக்கு ஒரு குழந்தை என நான்கு குழந்தைகளை அவர் பெற்றெடுத்தார். இந்நிலையில் அவரது கணவர் மரணமடைந்தார். அவர் விதவையானார். நான்கு குழந்தைகளை பராமரிக்க வேண்டிய இளம் விதவை அவர்.

இஸ்லாம் மதத்தில் லப்பை பிரிவை சேர்ந்த ஒரு வாலிபர் அந்த இளம் விதவையை திருமணம் செய்து கொள்ள முன் வந்தார். அந்த இளம் விதவை இஸ்லாமியராக மாறி அவரை மணந்து கொண்டார். மதம் மாறிய போது அவரது பெயர் ஆரிஃபா ஆனது.

தமிழ்நாடு அரசின் பணி பெறுவதற்காக, TNPSC நடத்திய தேர்வை எழுதியிருந்தார். அவரை பின்தங்கிய சாதியாக கருதினால் அவருக்குப் பணி கிடைக்கும். ஆனால் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அவரை முன்னேறிய சாதி என்று கூறி பணி அளிக்க மறுத்தது. காரணம் ஏற்கனவே உள்ள ஓர் உயர் நீதிமன்றத் தீர்ப்பு. அது ஒரு வினோதமான தீர்ப்பு. லப்பை பிரிவை சேர்ந்த இஸ்லாமியர்கள் பின்தங்கிய வகுப்பை சேர்ந்தவர்கள்தான் என்றும், ஆனால் அந்தப் பிரிவிற்கு முதன் முதலாக மதம் மாறுபவர் அந்தப் பின்தங்கிய வகுப்பில் வர மாட்டார் என்பதே அந்த வினோதமான தீர்ப்பு. இந்த வினோதமான காரணத்திற்கு, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இயற்றிய பின்தங்கிய சாதிகள் பற்றிய சட்டத்தைச் சுட்டிக் காட்டியது உயர்நீதிமன்றம். அந்தச் சட்டத்தில் உள்ள பின்தங்கியோர் சாதிப் பட்டியலில், லப்பை பிரிவினர் இருக்கும்பொழுது, மதம்

மாறிய லப்பை பிரிவினர் இல்லை என்பதே உயர் நீதிமன்றம் கூறிய காரணம்.

மண்டல் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் அடங்கிய அமர்வு அளித்த தீர்ப்பில் உச்ச நீதிமன்ற நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் அளித்த தீர்ப்பை சுட்டிக் காண்பித்து, மேற்சொன்ன ஆரிஃபா பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதி அவருக்குத் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பணி அளிக்க வேண்டும் என்று நான் தீர்ப்பளித்தேன்.

2021 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த திமுக அரசு அந்தத் தீர்ப்பை அமுல்படுத்தும் விதத்தில் **மற்ற மதத்தில் பின் தங்கிய வகுப்பில் இருந்து இஸ்லாம் மதத்தின் எந்த பின்தங்கிய பிரிவிற்கு மதம் மாறினாலும் அவர்கள் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று உத்தரவு அளித்துள்ளது**.

அடுத்து, இறந்து போன அரசு ஊழியரின் பிள்ளைகளுக்கு கருணை அடிப்படையில் பணி அளிக்கும் போது ஆண் பிள்ளைக்கும் பெண் பிள்ளைக்கும் இடையே பாகுபாடு காட்டியது தமிழ்நாடு அரசு. விதவையாகவோ அல்லது கணவனால் கைவிடப்பட்டவராகவோ இருந்தால்தான் பெண் பிள்ளைக்கு வேலை என்றது அரசாணை. அந்த அரசாணையை ரத்து செய்து ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் எந்த வித்தியாசமும் இன்றிப் பணி அளிக்க வேண்டும் என்று அளித்த தீர்ப்பு முக்கியமானது.

ஒரு கார் விபத்தில் அதில் பயணம் செய்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் இறந்து போனார்கள். அந்த குடும்பத்தில் மருமகள் தவிர்த்து மற்ற அனைவரது இறப்புக்கும் அந்த குடும்பத்தின் தந்தைக்கு நஷ்ட ஈடு வழங்கித் தீர்ப்பளித்தது விபத்து பற்றி நஷ்ட ஈடு வழங்கும் நீதிமன்றம். ஆனால் அந்த மருமகளின் பெற்றோர்கள் போட்ட நஷ்ட ஈடுக்கான வழக்கைத் தள்ளுபடி செய்தது நீதிமன்றம். திருமணத்திற்குப் பின் பெற்றோர்கள் தனது பெண்ணைச் சார்ந்து இருக்கவில்லை என்று காரணம் கூறியே வழக்கைத் தள்ளுபடி செய்தது.

இந்த வழக்கின் மேல்முறையீடு என் முன் விசாரணைக்கு வந்தது. 2006 ஆம் ஆண்டில் பாராளுமன்றம் இயற்றிய சட்டத்தில், மகளும் மகனைப் போன்றே பெற்றோரைப் பராமரிக்க வேண்டிய

கடமை உள்ளவர் என்றும் பெற்றோர்கள் தனது மகளிடம் தேவைப்பட்டால் பராமரிப்புக்காக வழக்குத் தொடுக்கலாம் என்றும் கூறியது அந்தச் சட்டம். அதைச் சுட்டிக்காட்டி மகளை இழந்த பெற்றோருக்கு நஷ்ட ஈடு வழங்க உத்தரவளிக்கப்பட்டதே அந்த தீர்ப்பு.

அடுத்து, 40% மதிப்பெண் பெற்று பொறியியல் படிப்பில் சேர்ந்து இருந்தார் ஒரு பட்டியல் சாதி மாணவர். அவருக்கு ஒரு பொதுத்துறை வங்கி கல்விக் கடன் வழங்க மறுத்தது. 60% மதிப்பெண் பெற்றிருந்தால் மட்டுமே கல்விக் கடன் வழங்க வேண்டும் என்று இந்த வங்கியின் தலைமை அலுவலகம் போட்ட உத்தரவைச் சுட்டிக் காண்பித்துக் கடன் அளிக்க மறுத்தது. 750-க்கு 287 மதிப்பெண்களைப் பள்ளி இறுதி தேர்வில் பெற்ற அண்ணல் அம்பேத்கருக்குப் பரோடா மன்னர் கல்விக் கடன் அளித்தார் என்பதைச் சுட்டிக் காண்பித்து, மன்னரை விட பொதுத்துறை வங்கி பொதுநோக்குடன் நடக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தேன். இந்தத் தீர்ப்பை ஒட்டி நூற்றுக்கணக்கானோர் கல்விக் கடன் பெற்றனர்.

பட்டியல் சாதியைச் சேர்ந்த ஒருவர் சாதி ஆணவக் கொலை செய்யப்பட்டார். அவர் திருமணம் ஆகாதவர். அவரை நம்பி அந்த குடும்பமும் குறிப்பாக அவரது சகோதரியும் இருந்தனர். அவரது சகோதரிக்கு அரசு பணி அளிக்கப்பட வேண்டும் என்பது வழக்கு. அவரது சகோதரிக்கு அரசுப் பணி அளிக்குமாறு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தீர்ப்பளித்தேன்.

பல ஆண்டுக்காலம் தற்காலிகமாகப் பணிபுரிந்து, பணி நிரந்தரம் பெற்ற பின் 10 ஆண்டுகள் பூர்த்தி ஆவதற்கு முன்னர் ஓய்வு பெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு பென்ஷன் அளிக்க வேண்டுமென்று அளித்த தீர்ப்பால் ஆயிரக்கணக்கானோர் பயனடைந்தனர்.

இப்படி எத்தனையோ தீர்ப்புகளை சொல்லலாம்.

- **ஈழப் போரட்டத்தில் பங்கேற்ற நினைவுகள்**

★ ஈழப் போராட்டம் எனது அரசியல் திசை வழியை மாற்றியது. ஈழத்தமிழர் தரப்பின்றி இந்தியாவும் இலங்கையும் போட்ட ராஜீவ் ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

ஆதரித்தது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் இலங்கைக்குச் சென்றது. இதையும் ஆதரித்தது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி. இதனை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு நான் விலகினேன்.

என்னைப் போன்றே பலரும் இதற்கும் முன்னரே ஈழப் போராட்டத்தை முன்னிட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு வெளியேறி இருந்தனர். குறிப்பாக அவர்களுடன் சேர்ந்து அவர்கள் நடத்திய ஈழப் போராட்டங்களில் பங்குபெற்றேன்.

குறிப்பாக முழு நேர வழக்குரைஞராகச் செயலாற்ற இந்த நிகழ்வு உதவியது. அதனால் தொழிலாளர் சம்பந்தமான வழக்குகள் நடத்துவதில் உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்கறிஞர்களில் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டேன். அதுவே நான் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமனம் பெற உதவியது.

ராஜிவ் கொலை வழக்கில் தண்டனை பெற்றுச் சிறையில் இருந்த காலத்தில், நளினி அவர்களும் இரவிச்சந்திரன் அவர்களும் எழுதிய அவர்களின் வாழ்க்கை வரலாறு நூல்களுக்கான அணிந்துரையில் மேற்சொன்ன விவரங்களைக் கூறி இருந்தேன்.

- **பாபர் மசூதி தீர்ப்பு குறித்த உங்களது கருத்து**

★ **2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒன்பதாம் தேதி அளிக்கப்பட்ட பாபர் மசூதி தீர்ப்பு ஆய்வுக்குரியது. அந்தத் தீர்ப்பு நீதித்துறைக்கு ஒரு களங்கம்.**

1528இல் கட்டப்பட்ட பாபர் மசூதிக்கு முகலாயர் ஆட்சி காலத்தில் எந்த பாதிப்பும் இல்லை.

1857-58 க்குப் பின் அந்தப் பகுதி ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தது. ஆங்கிலேயர் ஆட்சி அந்த மசூதிக்குப் பாதுகாப்பு அளித்தது. தாக்குதலுக்கு உள்ளான போது அதைச் சரி செய்தது மட்டுமன்றி, அதைச் சுற்றி இரும்புக் கம்பிகளால் கதவு போலப் பாதுகாப்பை உண்டாக்கியது. பாபர் மசூதி சம்பந்தமான எந்தப் படத்திலும் அதைச் சுற்றி இருக்கும் இரும்புக் கம்பிகளை அமைத்தது ஆங்கிலேய ஆட்சி.

பாபர் மசூதி வளாகத்தில் இராமருக்கான கோயில் கட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டு நீதிமன்றத்தை அணுகினர் அன்றைய மதவெறி கூட்டத்தினர். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேல்முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின் 1949 இல் நேரு பிரதமராக இருந்தபோது இராமர் சிலையைப் பாபர் மசூதி வளாகத்தின் நடுப்பகுதியில் வைத்தனர் மதவெறிக் கூட்டத்தினர். அதை அகற்றுவதற்குத் தவறிவிட்டது நேரு அரசு. அகற்றாவிட்டாலும் இந்தப் பகுதியைப் பூட்டி வழிபாடு செய்வதற்குத் தடை விதித்தது நேரு அரசு.

ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது இந்தப் பூட்டை உடைத்து வழிபாட்டுக்கு வழி செய்தார்.

பின்னர் 1992 இல் டிசம்பர் 6 அன்று பாபர் மசூதி உடைத்துத் தகர்க்கப்பட்டது இந்து மத வெறியர்களால்.

2019-ல் வழங்கப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பு, 1949 இல் இராமர் சிலையைப் பாபர் மசூதிக்குள் வைத்தது தவறானதும் சட்டவிரோதமானதும் என்கிறது; பாபர் மசூதியை உடைத்ததும் சட்டவிரோதம் என்கிறது.

சட்டவிரோதம் என்று கூறிய பின்னர், அந்த சட்ட விரோத செயல்களைச் செய்தவர்களிடமே அந்த வளாகத்தை ஒப்படைத்து அவர்கள் இராமர் கோயில் கட்டிக் கொள்ளலாம் என்று கூறியது எவ்வாறு சரியாக இருக்க முடியும்?.

அதற்கு அந்தத் தீர்ப்புக் கூறும் காரணம், இராமர் அந்த இடத்தில் தான் பிறந்தார் என்று கோடிக்கணக்கான இந்து மக்கள் நம்புகிறார்கள் என்பதுதான்.

**தீர்ப்புக்கு ஆதாரமாகச் சட்டப்பிரிவுகளைக் கூறாமல் நம்பிக்கையை கூறுகிறது இந்த தீர்ப்பு. எனவே அந்தத் தீர்ப்பைச் சரித்திரம் நிராகரிக்கும்.**

- **பொருளாதார வழியில் பின் தங்கியோருக்கான இடஒதுக்கீடு** (EWS) **குறித்த உங்களது கண்ணோட்டம்.**

★ கல்வி மற்றும் சமூக நிலையில் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கே கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் இட ஒதுக்கீட்டை வழங்குகிறது அரசமைப்புச் சட்டம்.

அரசமைப்புச் சட்டம் 26 1 1950 முதல் அமலுக்கு வந்த போது கல்வியில் மட்டுமே இட ஒதுக்கீட்டை வழங்கியிருந்தது அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 16(4). அந்த பிரிவில் பயன்படுத்தி இருக்கும் வார்த்தை "பின்தங்கிய வகுப்பினர்" என்பதே. பட்டியல் இனத்தவர் பழங்குடியினர் மற்றும் பிற பின் தங்கிய வகுப்பினர்களை உள்ளடக்கியது இந்த பிரிவில் கூறப்படும் "பின் தங்கிய வகுப்பினர்" என்பது.

பின்னர் முதல் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் பிரிவு 15 (4) சேர்க்கப்பட்டது. அது சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் பட்டியல் இனத்தவர் பழங்குடி யினருக்குக் கல்வியில் இட ஒதுக்கீட்டை அளிக்கிறது.

இதற்கான வரைவு (Draft) பிரிவு 15(4) விவாதத்திற்கு வந்த போது, அவை உறுப்பினர்களில் ஏழு பேர் அந்த வரைவிற்கு ஒரு திருத்தம் வேண்டும் என்று கூறினர். பின் தங்கிய பிரிவினர், சமூகத்தில் மற்றும் கல்வியில் மட்டும் பின்தங்கி இருந்தால் இந்த இட ஒதுக்கீடு அளிக்கக் கூடாது என்றும், அவர்கள் பொருளாதாரத்திலும் பின்தங்கி இருந்தால் மட்டுமே இந்த இட ஒதுக்கீட்டை அளிக்க வேண்டும் என்றும் திருத்தம் கோரினர்.

அதாவது, பின்தங்கிய வகுப்பினரில் ஏழைகளுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்பது அவர்கள் கூறிய திருத்தம்.

அந்த திருத்தம் அவையால் நிராகரிக்கப்பட்டது. ஏழு பேர் தவிர்த்து அவையின் மற்ற உறுப்பினர்கள் அனைவரும் அந்தத் திருத்தத்தை நிராகரித்தனர். இந்தத் திருத்தத்தைக் கோரியவர்களில் ஒருவர் சியாம் பிரசாத் முகர்ஜி. பின்னாளில் ஜன சங்கத்தை உருவாக்கியவர் இவர்.

அதாவது அப்போதைய விவாதம், பின் தங்கிய பிரிவினரில் வசதியானவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கக் கூடாது என்பதே. அதாவது பின் தங்கியவர்களில் ஒரு குறிப்பிட்ட வருமானத்திற்கு மேலே உள்ளவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கக் கூடாது என்பது அந்த வாதம். அதாவது பின்தங்கிய பிரிவினரில் கிரிமி

லேயர் (creamy layer) என்ற ஏற்பாட்டை கோரியது மேற்சொன்ன திருத்தம்.

உயர் சாதியினருக்கு இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்ற விவாதமே இல்லை.

இது தவிர்த்து, உயர் சாதியில் ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு அளிக்கும் அரசமைப்புச் சட்ட திருத்தம் கொண்டு வருவதற்கு (EWS), அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 46 மட்டுமே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உயர்சாதியினரில் ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு அளிக்கும் இந்த அரசமைப்புச் சட்ட திருத்தம், பட்டியல் சாதியினர் பழங்குடியினர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோரில் உள்ள ஏழைகளுக்கு இந்த ஒதுக்கீட்டுப் பலனை அளிக்காததும் குறிப்பிடத்தக்கது.

அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 46 ஐ படிக்கும் எவரும், உயர்சாதியினருக்கு இட ஒதுக்கீடு கொடுப்பதற்காக இப்பிரிவை சுட்டிக் காட்டுவது ஓர் அராஜகமான மற்றும் அயோக்கியத்தனமான செயல் என்பதை ஏற்பர்.

பட்டியல் சாதியினர் பழங்குடியினர் மற்றும்" நலிந்த பிரிவினர்" ஆகியோரை மேம்படுத்தலைக் கொள்கையாகக் கொண்டது அரசமைப்பு சட்டத்தின் பிரிவு 46.

மேம்போக்காகப் பார்த்தால், நலிந்த பிரிவினருக்குள் முன் தங்கிய சாதியினரில் உள்ள ஏழைகளும் அடங்குவர் என்று தோன்றும்.

ஆனால் இப்பிரிவு 46, நலிந்த பிரிவினர் யார் என்று தெளிவாகக் கூறுகிறது. சமூக அநீதியில் இருந்தும், அனைத்து விதமான சுரண்டல்களில் இருந்தும் நலிந்த பிரிவினரைக் காப்பாற்றுவதே இப்பிரிவு 46-இன் நோக்கம் என்கிறது அரசமைப்புச் சட்டம். சமூக அநீதி (Social Injustice) என்ற வார்த்தைகளை இந்த பிரிவில் மட்டுமே அரசமைப்புச் சட்டம் பயன்படுத்துகிறது.

இந்த பிரிவு 46-இன் கீழ்தான் கையால் மலம் அள்ளுவதைத் தடுப்பதற்கான சட்டத்தை நாடாளுமன்றம் இயற்றியது என்பதிலிருந்தே, இதே பிரிவு 46- ன் கீழ் உயர் சாதியினரின்

ஏழைகளுக்கு மட்டும் இட ஒதுக்கீடு என்பது எவ்வளவு அயோக்கியத்தனமானது என்பது புரியும்.

உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, இந்த அரசமைப்புச் சட்ட திருத்தம் சரியானது என்று தீர்ப்பு கூறியது. அந்த ஐவரில் ஒருவர் கூட பட்டியல் இனத்தவரோ பழங்குடியினரோ பிற்படுத்தப்பட்டவரோ இல்லை என்பது உற்று நோக்கப்பட வேண்டும். இந்த SC/ST/OBC பிரிவுகளில் உச்ச நீதிமன்றத்தில் உரிய அளவு நீதிபதிகள் இருந்தால் தானே அமர்வில் இருக்க முடியும்.

● **இந்தியாவையே உலுக்கிய ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் உங்களது பங்கு காத்திரமானது. அது குறித்த அனுபவங்களைப் பதிவிட இயலுமா?**

★ ஜல்லிக்கட்டு தமிழர்களின் கலாச்சார பண்பாட்டு அடையாளமாக கருதப்படுகிறது. பழந்தமிழரின் ஏறுதழுவுதல் பின்னர் ஜல்லிக்கட்டு விளையாட்டாக மாறியது. குறிப்பாகப் பொங்கல் பண்டிகை காலத்தில் தொடங்கும் இந்த விளையாட்டு ஒரு சில மாதங்கள் தொடர்ந்து நீடிக்கிறது.

"விலங்குகளுக்கு வதை செய்வதை தடுத்தல்" என்ற பொருள் அரசமைப்புச் சட்டத்தின் ஒத்திசைவு பட்டியலில் (Concurrent List) உள்ளது. ஒத்திசைவு பட்டியலை பொதுப் பட்டியல் என்றும் கூறுவர்.

1960களில் விலங்குகளுக்கு வதை செய்வதை தடுக்கும் சட்டத்தைப் பாராளுமன்றம் இயற்றியது.

இந்திய விலங்குகள் நல வாரியம் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் 2014 ஆம் ஆண்டில் ஜல்லிக்கட்டுக்குத் தடைவிதித்துத் தீர்ப்பளித்தது. மேற்சொன்ன சட்டத்தின்படி, காளைகளை வதை செய்வது ஜல்லிக்கட்டில் நிகழ்கிறது என்று விளக்கம் அளித்தது உச்ச நீதிமன்றம்.

எனவே 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் ஜல்லிக்கட்டு நிகழ்வுகள் நடப்பதற்கு அரசு தடை விதித்தது. அந்தத் தடைகளை மீறிச் சில இடங்களில் ஜல்லிக்கட்டு விளையாட்டு நடந்தது.

2017 ஆம் ஆண்டில் பொங்கல் திருவிழாவை ஒட்டித் தமிழ்நாடு முழுவதும் தடையை மீறிப் பல இடங்களில்

ஜல்லிக்கட்டு விளையாட்டு நடந்தது. அது வரலாறு காணாத பேரியக்கமாக மாறியது. இலட்சக்கணக்கில் மக்கள் அந்த இயக்கத்தில் பங்கு கொண்டனர். மெரினா கடற்கரையில் மக்கள் வெள்ளம் போலத் திரண்டனர் .திரண்ட மக்கள் கூட்டம் மெரினா கடற்கரையிலேயே தங்கி அமைதியான வழியில் போராடியது. இந்தப் போராட்டம் உலகில் பல பகுதிகளில் வாழும் தமிழர்கள் மத்தியிலும் பரவியது.

அப்போது தமிழ்நாடு சட்டமன்றம் கூடவில்லை. எனவே விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டத்தில் ஒரு திருத்தத்தை அவசரச் சட்டம் மூலம் கொண்டுவரச் செய்தது. தமிழ்நாடு அரசு முடிவு செய்தது.

மேலே குறிப்பிட்டுள்ளது போல இது ஒத்திசைவு பட்டியல் என்பதால், இது சம்பந்தமாக தமிழ்நாடு அரசு சட்டசபையில் சட்டம் இயற்றி, ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டும். ஒன்றிய அரசின் ஒப்புதல் பெற்ற பிறகே அது சட்டமாகும்.

அதுவே சட்டசபை கூடாத காலத்தில், தமிழ்நாடு அரசு அவசரச் சட்டம் போடுவதாக இருந்தால், அதற்கு ஒன்றிய அரசின் முன் அனுமதி தேவை. அப்போதுதான் அவசரச் சட்டம் அமலுக்கு வரும். அப்படி அமலுக்கு வரும் அவசரச் சட்டம் ஆறு மாத காலம் உயிருடன் இருக்கும். அந்த ஆறு மாத காலத்திற்குள் சட்டசபையில் அந்த சட்டம் நிறைவேற்றப்பட்டு அதற்கு ஒன்றிய அரசின் ஒப்புதல் பெற்றால்தான் அது முழுமையான சட்டம் ஆகும்.

எனது நினைவில், 2017 ஜனவரி 21 ஆம் நாள் சனிக்கிழமை அன்று இயற்றப்பட்ட அவசரச் சட்டத்திற்கு, அடுத்த நாளே ஒன்றிய அரசு ஒப்புதல் கொடுத்தது. ஒரே நாளில் ஒப்புதல் கொடுத்த வரலாறு இதற்கு முன் இருப்பதாகத் தெரியவில்லை. ஒன்றிய அரசு ஒரே நாளில் அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததற்குக் காரணம், தமிழ்நாடு முழுவதும் மக்கள் அனைவரும் பங்கு கொண்ட வரலாறு காணாத போராட்டமே ஆகும்.

தமிழ்நாடு அரசு போட்ட அவசரச் சட்டம் தமிழ்நாட்டிற்கு மட்டுமே பொருந்தும். அதாவது மற்ற மாநிலங்களில் ஜல்லிக்கட்டு நிகழ்வு நடத்தச் சட்டம் அனுமதிக்கவில்லை.

1960 ஆம் ஆண்டுகளில் போட்ட விலங்குகள் வதை தடுப்புச் சட்டம், சில வகையான விலங்கு வதைகளை வதைகள் அல்ல என்று கூறுகிறது. அதாவது, அசைவ உணவு சமைப்பதற்காக ஆட்டையோ கோழியையோ வெட்டுவது வதை அல்ல என்கிறது அந்தச் சட்டம். அதேபோல, கோயில்களில் விலங்குகளைப் பலியிடுவது, விலங்குகளை வதை செய்வது அல்ல என்கிறது அந்தச் சட்டம். மேலும், ஒரு மாட்டை அடையாளப்படுத்துவதற்காகப் பழுக்க காய்ச்சிய இரும்பில் கோடு போடுவது வதை அல்ல என்கிறது அந்தச் சட்டம்.

இந்த வரிசையில், மேலே சொன்ன அவசரச் சட்டத்தில் ஒரு பிரிவைச் சேர்த்ததன் மூலம், தமிழ்நாட்டிற்கு மட்டும் ஜல்லிக்கட்டு விளையாட்டு விலங்கு வதை ஆகாது.

இந்த அவசரச் சட்ட பிரிவுகளை பத்திரிகையிலோ, தொலைக்காட்சியிலோ அல்லது வேறு விதமாகவோ பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டுவரத் தமிழ்நாடு அரசு தவறிவிட்டது.

வெறுமனே ஓர் அவசரச் சட்டம் போட்டதாகத் தமிழ்நாடு அரசு சொல்வதை, போராடிய மக்கள் நம்பத் தயாராக இல்லை. எனவே இலட்சக்கணக்கான மக்கள் மெரினா கடற்கரையை விட்டுச் செல்ல மறுத்துவிட்டார்கள்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள், அந்த அவசரச் சட்டத்தில் ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு தடை நீக்கப்பட்டுள்ளது என்று அரசு கூறுவது பற்றி விளக்கி மெரினா கடற்கரைக்கு வந்து நான் கூறினால் அதை ஏற்பதாகத் தெரிவித்தனர். காவல்துறையும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது.

அப்போது சென்னை நகரில் எந்த வாகனமும் செல்ல போராடிய மக்கள் அனுமதிக்கவில்லை. எனவே காவல்துறையின் வாகனத்தில் நானும் தோழர் தியாகு அவர்களும் மெரினா சென்றோம்.

காவல்துறை துணை ஆணையர், சென்னை தெற்கு அவர்கள் ஒரு ஐபிஎஸ் அதிகாரி. அவர் அந்தச் சட்டத்தின் பிரதியை என்னிடம் கொடுத்தார்.

அந்தப் பிரதியை ஏற்கனவே நான் பார்த்துள்ளேன். பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த தோழர் சுந்தரராசன் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் சு. வெங்கடேசன் (இப்போதைய மக்களவை உறுப்பினர்) அவர்களும் என்னை வீட்டில் சந்தித்து அந்த நகலைக் கொடுத்தார்கள். அதுவே அவர்களை நான் முதன் முதலில் சந்தித்தது.

அதைப்பற்றி என் கருத்தைக் கேட்டார்கள். அதைப் படித்துப் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது என்றும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஜல்லிக்கட்டுக்குத் தடை இல்லை என்றும் என் கருத்தைக் கூறினேன். ஆனால் இதுதான் அவசரச் சட்டத்தின் உண்மையான நகலா என்பதை எவ்வாறு உறுதி செய்வது என்று அவர்களைக் கேட்டிருந்தேன். தமிழ்நாடு அரசு ஏன் இதைப் பொதுவெளியில் வெளியிடவில்லை என்பதையும் அவர்களிடம் கேட்டேன்.அதற்கு அவர்களிடம் பதில் ஏதுமில்லை.

இந்த நிலையில்தான் நான் மெரினா சென்றிருந்தேன். காவல்துறை அதிகாரி கொடுத்த நகலும், ஏற்கனவே மேற் சொன்ன தோழர்கள் கொடுத்ததும் ஒன்றுதான்.

அவரிடம் அந்த நகலில் தமிழ்நாடு அரசின் கெசட்டில் வெளியானது பற்றிய விவரமோ அல்லது அரசின் முத்திரையோ இல்லையே என்று கேட்டேன். அவர் உடனே மிக விரைவாக கோட்டைக்குச் சென்று எனது ஐயத்தை தீர்க்கும் வகையில் உண்மை நகலைக் கொண்டு வந்தார்.

அதற்குப்பின் காவல்துறை ஏற்பாடு செய்த ஒலிபெருக்கியில் அங்கு கூடியிருந்த மாபெரும் மக்கள் கூட்டத்திடம் அந்த அவசரச் சட்டத்தை விளக்கிப் பேசினேன். மக்களின் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது என்ற தகவலைத் தெரிவித்தேன்.

இந்த நிகழ்வு நடந்தது 2017 ஜனவரி 23ஆம் நாள்.

அன்று திங்கள்கிழமை. அன்று தமிழ்நாடு சட்டமன்றமும் கூடியது. தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா அவர்கள் மறைவிற்கு பின் கூடும் முதல் சட்டமன்றக் கூட்டம் அது. வழக்கமாக இரங்கல் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு சட்டசபை

கலைந்து விடும். ஆனால் அன்று மேற்சொன்ன அவசரச் சட்டம், ஒரு சட்டமாகவே தமிழ்நாடு சட்டசபையால் ஒருமனதாக இயற்றப்பட்டது. அந்தச் சட்டத்தை அன்றே கவர்னர் ஒன்றிய அரசின் அனுமதிக்கு (குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு) அனுப்பினார். அடுத்த நாளே ஒன்றிய அரசு (குடியரசுத் தலைவர்) அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இதுவும் ஒரு வரலாற்றுச் சாதனை என்றே குறிப்பிட வேண்டும்.

ஏனெனில், ஆண்டுக்கணக்கில் கவர்னரும் குடியரசுத் தலைவரும் தமிழ்நாடு அரசு இயற்றும் சட்டங்களுக்கு ஒப்புதல் தராமல் தமிழ்நாடு மக்களை அவமதிக்கும் செயல்களைத் தொடர்ந்து செய்து வருவது பாஜக ஒன்றிய அரசில் ஆட்சி புரிய தொடங்கியது முதல் நடக்கும் சாதாரண நிகழ்வு. அது அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்று உச்ச நீதிமன்றம் 8-4-2025 இல் சொன்னது சமீபத்திய நிகழ்வு.

**● அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் சேரலாம் எனும் ஒன்றிய அரசின் அறிவிப்பு குறித்த உங்களது பார்வை.**

★ ஆர்.எஸ்.எஸ் தானே 2014 முதல் ஒன்றிய அரசை ஆண்டு வருகிறது. அதாவது ஆர் எஸ் எஸ் உருவாக்கிய பாரதிய ஜனதா தானே இப்போது மத்தியில் ஆளும் கட்சி. எனவே அரசு ஊழியர்கள் அவர்களது அமைப்பில் சேரலாம் என்று போட்ட ஒன்றிய அரசின் உத்தரவு ஒன்றும் வியப்பானது அல்ல.

இதற்கு அவர்கள் கூறும் காரணம், ஆர்.எஸ்.எஸ். ஓர் அரசியல் இயக்கம் அல்ல; அது ஒரு கலாச்சார பண்பாட்டு இயக்கம் என்பதாகும்.

ஆனால் இந்த அளவுகோலை மற்ற அரசியல் கட்சி அல்லாத அமைப்புகளில் அரசு ஊழியர்கள் சேரவோ செயல்படவோ அனுமதிக்க மாட்டார்கள். இதுவே ஆட்சேபனைக்குரியது. அதாவது ஆர்.எஸ்.எஸ். மட்டுமன்றி அனைத்துப் பண்பாட்டு கலாச்சார அமைப்புகளிலும் அரசு ஊழியர்கள் சேரவும் செயல்படவும் அனுமதிக்க வேண்டும்.

● **சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம்** (UAPA) **நீக்கப்பட வேண்டியதன் தேவை என்ன?**

★ இந்த சட்டம் ஒரு கருப்புச் சட்டம்.

1967இல் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது அதில் கடுமையான பிரிவுகள் ஏதும் இல்லை.

மக்கள் இயக்கங்களை ஒடுக்குவதற்கு, பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் என்ற கொடுஞ் சட்டத்தை 1985இல் ராஜீவ் காந்தியின் அரசு கொண்டு வந்தது. இதைச் சுருக்கமாக "தடா சட்டம்" என்பர்.

இதை ஒரு தற்காலிகமான சட்டம்தான் என்றும், சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பின் அச்சட்டம் காலாவதியாகிவிடும் என்றும் அச்சட்டத்திற்கு நியாயம் கற்பிக்கப்பட்டது. அச்சட்டத்தில் sun set clause இருக்கிறது என்றனர்.

ஏன் "தடா" சட்டத்தைக் கடுமையான கொடுஞ்சட்டம் என்கிறோம் என்றால், பல விஷயங்களில் வழக்கமான குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்தியச் சாட்சியச் சட்டம் இதற்குப் பொருந்தாது.

குற்றவியல் சட்டங்களின் அடிப்படை, குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் நிருபிக்கப்படும் வரை குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதி என்று கருதப்படுவார். எனவே **பிணை என்பது விதி; பிணை மறுப்பு என்பது விதிவிலக்கு**. ஆனால் தடா சட்டத்தில் பிணை மறுப்பே விதி.

குற்ற வழக்குகளில் புலன் விசாரணையின் போது காவல்துறை யிடம் அளிக்கும் எந்த வாக்குமூலமும் ஒப்புக்கொள்ளக்கூடிய சாட்சியமாகாது. ஆனால் தடா சட்டத்தில் காவல்துறையிடம் அளிக்கும் வாக்குமூலம் ஒப்புக்கொள்ளக்கூடிய சாட்சியம் ஆகும்.

மக்கள் இயக்கங்களும் எதிர்க்கட்சிகளும் கடுமையாக எதிர்த்ததை ஒட்டி, இந்த "தடா" சட்டம் 1995இல் காலாவதியானது.

பின்னர் வாஜ்பாயின் ஆட்சிக் காலத்தில் 2002 ஆம் ஆண்டில் "பொடா" என்ற பெயரில் இச்சட்டம் மறு அவதாரம் எடுத்தது. இந்தப் பொடாச் சட்டமும் தற்காலிகச் சட்டம் என்று நியாயப்படுத்தப்பட்டது. அதாவது தடா சட்டத்தின் கூறுகள்

பொடா சட்டத்தில் கொண்டுவரப்பட்டது. வைகோ, நெடுமாறன், சுப.வீ, நக்கீரன் கோபால் எனப் பலரும் இந்தச் சட்டத்தின் கீழ் ஜெயலலிதா ஆட்சியில் நீண்ட காலம் சிறைவைக்கப்பட்டனர்.

2004-இல் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்த போது பொடா சட்டம் ரத்து செய்யப்பட்டு அதன் கூறுகள் நிரந்தரமாக உபாச்சட்டத்தில் சேர்க்கப்பட்டது. பலமுறை மீண்டும் மீண்டும் காங்கிரஸ் அரசாலும் பின்னர் பாஜக அரசாலும் உபாச்சட்டம் திருத்தப்பட்டு அது தடா மற்றும் பொடா சட்டங்களை விடக் கொடுஞ்சட்டமாக மாற்றப்பட்டது.

2008இல் மும்பையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலை ஒட்டி தேசியப் புலனாய்வு முகமை (National Investigation Agency& NIA) என்ற அமைப்பை ஒரு சட்டத்தின் மூலம் தோற்றுவித்தது அப்போதைய காங்கிரஸ் அரசு. இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட போது, மாநில உரிமைகள் பற்றி உரக்கப் பேசும் திமுக இந்தச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்து தீராத களங்கத்தை ஏற்படுத்திக் கொண்டது. உபாச் சட்ட வழக்குகளை தேசியப் புலனாய்வு அமைப்பும் விசாரிக்கும். இந்த அமைப்பு ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் போலீஸ் அமைப்பு. போலீஸ் அதிகாரம் முழுக்க மாநிலங்களுக்கான அதிகாரம் என அரசமைப்புச் சட்டம் கூறினாலும் இந்தச் சட்டத்தின் மூலம் போலீஸ் அதிகாரத்தை ஒன்றிய அரசு தன் கையில் எடுத்துக் கொண்டது.

பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியாவை, பாஜக அரசு தடை செய்ததும் உபா சட்டத்தின் கீழ்தான். இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறி தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் NIA கைது செய்த போது, தமிழ்நாட்டு முதல்வர் ஸ்டாலினுக்கோ கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கோ எந்தத் தகவலும் தெரிவிக்காமல் கைது செய்தது.

2018 இல் பட்டியல் சாதி மக்களுடன் பீமா குரேகான் நிகழ்வை ஒட்டி உபாச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பலர் இன்றும் பிணையின்றி சிறையில் வாடுகின்றனர். அந்த வழக்கில் கைது செய்யப்பட்ட ஸ்டேன் சுவாமி சிறையிலேயே மாண்டு போனார். உமர் காலித் போன்ற பல சமூகச் செயற்பாட்டாளர்கள் பல ஆண்டுகளாகச் சிறைக்குள் வாடுகின்றனர்.

**● தொழிலாளர் சட்டங்களை நான்கு தொகுதிகளாகச் சுருக்கி உரிமைகளைப் பறித்த ஒன்றிய அரசின் நடவடிக்கை ஏற்புடையதா?**

★ எந்தத் தொழிற்சங்கமும் இந்தச் சட்டங்களை ஏற்கவில்லை. "தொழிலாளர்கள்" என்ற பொருள் அரசமைப்புச் சட்டத்தின் ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளது. நடைமுறையில் ஒத்திசைவுப் பட்டியல் என்பது ஒன்றிய அரசின் பட்டியல் என்பது போல் ஆகிவிட்டது.

கடுமையான எதிர்ப்பு இருப்பதை ஒட்டி இதுவரையில் இந்தச் சட்டங்கள் அமலுக்கு வரவில்லை. ஆனால் எந்த நேரத்திலும் இந்தச் சட்டங்கள் அமலுக்கு வரும்.

தாராள மயம், தனியார் மயம், உலக மயம் (LPG-Liberalisation, Privatisation, Globalisation) என்ற ஒன்றிய அரசின் பொருளியல் கொள்கையை அமல்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இந்த சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள சட்டங்களும் இந்தக் கொள்கையைச் செயல்படுத்த உகந்தவையே. அதை மேலும் உகந்தவையாக ஆக்குவது இந்தப் புதிய தொழிலாளர் சட்டங்களின் நோக்கம்.

முதலாளிகள் தொழில் செய்வதற்கு மிகவும் இலகுவான முறையை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்தச் சட்டங்களின் நோக்கம்.

அதாவது முதலாளிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை இந்தியா முழுவதும் தங்கு தடை இன்றி கொண்டு சென்று மார்க்கெட்டிங் செய்வதற்கு ஏற்ற முறையில் ஒற்றை வரி என்ற ஜி.எஸ்.டி வரியை எப்படி ஒன்றிய அரசு உருவாக்கியதோ அது போன்றதுதான் இந்தப் புதிய தொழிலாளர் சட்டங்களும்.

**● உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்திற்கான நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் கொலிஜியம் முறை குறித்த உங்களது கருத்தும் அது பற்றிய பரிந்துரைகளும்.**

★ உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் கொலிஜியம் முறை 1992 முதல் அமலில் உள்ளது.

கொலிஜியம் முறையிலும் நீதிபதிகளை நியமிப்பது ஒன்றிய அரசுதான். அதாவது ஒன்றிய அரசின் பரிந்துரையின்படி குடியரசுத் தலைவர் நீதிபதிகளை நியமனம் செய்வார்.

அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த 26 1 1950 முதல் 25 ஆண்டுகளுக்கு உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் மாற்றம் ஆகியவற்றில் ஒன்றிய அரசிற்கும் நீதித்துறைக்கும் பெரிய அளவில் கருத்து மாறுபாடோ அல்லது மோதலோ இல்லை. 1971க்கு பின்னர் இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் இந்த மோதல் ஆரம்பித்து அதன் உச்சத்தை அடைந்தது அவசரநிலை காலத்தில். மூத்த நீதிபதிகள் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிகளாக நியமிக்கப்படுவதை மாற்றி ஒன்றிய அரசுக்கு ஆமாம் சாமி போடுபவர்கள் நியமிக்கப்பட்டார்கள். பழி வாங்கும் முறையில் பல உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஒரு மாநிலத்திலிருந்து வேறு ஒரு மாநிலத்திற்கு மாற்றப்பட்டனர்.

இதுவே உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் அமர்வின் ஒரு தீர்ப்பின் மூலம் கொலிஜியம் முறை உருவாவதற்குக் காரணமாக அமைந்தது.

நமது அரசமைப்புச் சட்டம் எண்ணற்ற அதிகாரக் குவியலை ஒன்றிய அரசிடம் கொடுத்துள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் ஆளுநர்கள், தேர்தல் ஆணையர்கள், கண்ட்ரோலர் - ஆடிட்டர் ஜெனரல், UPSC தலைவர் மற்றும் உறுப்பினர்கள், SC/ST/OBC கமிஷன் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரை நியமிப்பது ஒன்றிய அரசுதான். இதில் மற்ற எவரும் தலையிட இயலாது.

ஆனால் உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதி நியமனத்தைப் பொருத்தவரை ஒன்றிய அரசுதான் செய்யும் என்று அரசமைப்புச் சட்டம் கூறினாலும், அந்த நியமனங்களைச் செய்வதற்கு முன் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்து (Consultation) செய்ய வேண்டும் என்கிறது அரசமைப்புச் சட்டம்.

அரசமைப்புச் சட்டத்தில் நீதிபதிகள் நியமனம் தொடர்பாக கூறப்பட்டுள்ள "கலந்தாலோசித்து" (Consultation) என்ற

வார்த்தைக்கு "ஒப்புதல்" (Concurrence) என்று விளக்கம் செய்தது மேற்சொன்ன ஒன்பது நீதிபதிகள் அமர்வின் தீர்ப்பு.

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் அவருக்கு அடுத்த நிலையில் உள்ள இரு மூத்த நீதிபதிகள் அடங்கிய கொலிஜியம் ,உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்வது பற்றி ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்யும். அதேபோல உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் அவருக்கு அடுத்த நிலையில் உள்ள நான்கு மூத்த நீதிபதிகள் அடங்கிய கொலிஜியம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்வது பற்றி ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது தொடர்பான பரிந்துரைகளை சம்மந்தப்பட்ட உயர் நீதிமன்றத்தின் கொலிஜியம் பரிந்துரைக்கும். உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியும் அதற்கு அடுத்த நிலையில் உள்ள இரு மூத்த நீதிபதிகளும் அடங்கியதே உயர்நீதிமன்ற கொலிஜியம்.

உயர் நீதிமன்ற கொலிஜியம் அதன் பரிந்துரைகளைச் சம்பந்தப்பட்ட மாநில அரசிற்கும் ஒன்றிய அரசிற்கும் உச்ச நீதிமன்ற கொலிஜியத்திற்கும் அனுப்பும். இவர்கள் கூறும் கருத்தை உச்சநீதிமன்ற கொலிஜியம் கருத்தில் கொள்ளும். மாநில அரசும், ஒன்றிய அரசும் ஒரு குறிப்பிட்ட நபரை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்வதற்கு, உயர்நீதிமன்ற கொலிஜியத்திற்குப் பரிந்துரைக்கலாம் என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்புக் கூறுகிறது.

இறுதியில் நியமனம் செய்வதற்கு உரிமை உள்ள ஒன்றிய அரசு, ஒரு குறிப்பிட்ட நபரை உயர்நீதிமன்றத்திற்கு அல்லது உச்ச நீதிமன்றத்திற்கு நியமிக்க கூடாது என்று ஆட்சேபனை செய்தால் அதை உச்ச நீதிமன்றத்தின் கொலிஜியம் பரிசீலிக்கும். பரிசீலனைக்கு பின் ஒன்றிய அரசின் ஆட்சேபனையை உச்ச நீதிமன்ற கொலிஜியம் ஏற்க மறுத்தால், ஒன்றிய அரசு கொலிஜியம் சொல்வதை ஏற்றுக்கொண்டு நியமனம் செய்ய வேண்டும். அதாவது இறுதி முடிவு, உச்ச நீதிமன்ற கொலிஜியத்தின் முடிவுதான். நீதிபதிகள் நியமனத்தில் நீதித்துறைதான் முதன்மைப் பாத்திரம் (Supremacy) வகிக்கும் என்பதே கொலிஜியத்தின் அடிப்படைக் கோட்பாடு.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் இல்லாத ஒரு முக்கிய விஷயம் என்னவெனில், சம்பந்தப்பட்ட உயர்நீதிமன்ற நீதிமன்றங்களில் இருந்து உச்ச நீதிமன்றம் சென்ற நீதிபதிகள் அதிலும் குறிப்பாக உச்ச நீதிமன்ற கொலிஜியம் நீதிபதிகள், உயர் நீதிமன்ற கொலிஜியத்திற்கு அவர்களுக்கு வேண்டிய பெயர்களைப் பரிந்துரைப்பது என்பது நிகழ்வதை வழக்குரைஞர் சமூகம் அறியும்.

பாஜக ஆட்சிக்கு வந்தவுடன் கொலிஜியம் முறைக்கு முடிவு கட்டி அரசமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்தது. அந்தத் திருத்தத்தின் படி தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் உருவாக்கப்பட்டது. ஆனால் இந்தத் திருத்தத்தை உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வு 2014 ஆம் ஆண்டே ரத்து செய்தது. அதாவது கொலிஜியம் முறையே தொடரும் என்பதுதான் அந்தத் தீர்ப்பு.

அது முதல் உயர் நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் தொடர்பாகத் தொடர் மோதல் போக்கில் பாஜக அரசு ஈடுபட்டு வருகிறது. உச்சநீதிமன்ற கொலிஜியம் பரிந்துரைக்கும் பெயர்கள் பலரை பாஜகவின் ஒன்றிய அரசு நியமிக்க மறுப்பது வாடிக்கையாகி விட்டது . தமிழ்நாட்டில் ஜான் சத்தியன், நீலகண்டன் ஆகியோரை நியமிக்க உச்சநீதிமன்ற கொலிஜியம் பரிந்துரைத்தும் அவர்கள் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்படவில்லை. இதுபோல இந்தியா முழுவதும் பலர் நியமிக்கப்படவில்லை. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கூட அதுபோல் நியமிக்கப்படவில்லை. உச்ச நீதிமன்ற கொலிஜியம் அவர்களை நியமிக்க வேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்தி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதே வருத்தமான உண்மை.

அதே நேரத்தில் தொடர்ந்து ஆர் எஸ் எஸ் காரர்கள் மற்றும் பாஜக அரசியல் கருத்துக்கு ஆதரவானவர்கள் பலரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளாகவும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாகவும் நியமிக்கப்படுகின்றனர்.

எனவே இது அவசர காலத்தில் இருந்த நிலையை விட மிக மோசமானதாக உள்ளது. காரணம், அவசர கால நிலைமை

இரண்டு ஆண்டுகள் தான் இருந்தது. இப்பொழுது இருப்பது அறிவிக்கப்படாத அவசர காலம்.

கொலிஜியம் முறையாகட்டும், அதற்கு முன்னர் இருந்த முறையாகட்டும்- இரண்டிலுமே- சமூகநீதி கடைபிடிக்கப்படவில்லை என்பதே என்னை பொருத்தவரை நான் வைக்கும் அடிப்படையான குற்றச்சாட்டு.

● **நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு வழங்குதல் குறித்த உங்களது பார்வை.**

★ உயர் நீதிமன்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படுவதே இல்லை.

அரசு பணிகளில் இட ஒதுக்கீடு பற்றி அரசமைப்புச் சட்டம் பிரிவு 16 (4) கூறினாலும், சட்டத்தை விளக்கும் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் மிகப் பெரும்பான்மையினராக உயர்சாதிக்காரர்களே இருப்பதால், உயர் பதவிகளுக்கு இட ஒதுக்கீடு பொருந்தாது என்று பல தீர்ப்புகளில் உச்சநீதிமன்றமும் உயர் நீதிமன்றங்களும் கூறிவிட்டது.

எனவே உயர் பதவிகளிலும், கொள்கை முடிவு எடுக்கும் பதவிகளிலும், உயர்நீதிமன்ற நீதிபதிகளாகவும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளாகவும் பட்டியல் சாதியினர் பழங்குடியினர் பிற்படுத்தப்பட்டோர் கிட்டத்தட்ட இருப்பதில்லை.

உச்சநீதிமன்றத்தில் மொத்தம் இருக்கும் 34 நீதிபதிகளில் ஒருவர்தான் பட்டியல் சாதியைச் சேர்ந்தவர். அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த 26.1.1950 முதல் இன்று வரை உச்ச நீதிமன்றத்தில் மொத்தமாக 6 பேரே பட்டியல் சாதியிலிருந்து நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். மக்கள் தொகையில் 20% முதல் 25% வரை இருக்கும் நிலையில், இவர்கள் இதுவரை ஆறு பேர் மட்டுமே நியமிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இதைவிட மோசமான நிலைமை பழங்குடியினரின் நிலைமை. இதுவரை ஒருவர் மட்டுமே பழங்குடியினரிலிருந்து உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதே நிலைமை தான் பிற்படுத்தப்பட்டோருக்கும். முதல் முதலில் பட்டியல் சாதியிலிருந்தும் பிற்படுத்தப்பட்டவர்களில் இருந்தும் உச்ச

நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்டவர்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது கூடக் குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கும் இதே நிலைதான். இப்போதுள்ள 34 உச்சநீதிமன்ற நீதிபதிகளில் ஒருவர் மட்டுமே பெண் நீதிபதி.

உயர்நீதிமன்றங்களிலும் இதே நிலைமைதான். அண்மையில் இதை ஆய்வு செய்த நாடாளுமன்ற நிலைக்குழு, உயர் நீதிமன்றங்களில் பட்டியல் சாதியினர் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மிகக்குறைவாகவே நியமிக்கப்படுவதை அதன் அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளது. உயர் நீதித்துறையில் இட ஒதுக்கீட்டை கடைபிடிக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

உயர் நீதித்துறையில் இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப் படுவதில்லை என்பதைக் காரணம் காட்டி, உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எந்தெந்த சாதியைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் இல்லை என்று கில்லாடியான பதிலைச் சொல்கிறது ஒன்றிய அரசு.

**● மூட நம்பிக்கைகளை அங்கீகரிக்கும் தீர்ப்புகள், நீதிமன்றங்களின் நம்பகத் தன்மையைப் பாதிக்காதா?**

★ நிச்சயம் நம்பகத் தன்மையைப் பாதிக்கும். மேலே விவரமாக கூறியபடி நீதிபதிகள் நியமனங்களில் குறைபாடு உள்ளது என்றும், பாஜக ஆட்சிக்கு பின் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் பெரிய அளவில் உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்படுகிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ள நிலையில் மூடநம்பிக்கையைப் போற்றும் தீர்ப்புகள் தானே வரும்.

கோயில்களில் அல்லது மடங்களில் பிராமணர்கள் சாப்பிட்ட எச்சில் இலையில் படுத்து உருளுவது சொர்க்கத்துக்கு இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கை மக்களுக்கு உள்ளது என்றும், அந்த நம்பிக்கையை நீதிமன்றம் பாதுகாக்கும் என்றும் மூடநம்பிக்கையை போற்றிய தீர்ப்பை மதுரை உயர்நீதிமன்றக் கிளை வழங்கியதைப் பலரும் அறிவர். நல்ல வேளையாக இரு நீதிபதிகள் அமர்வு அதை அண்மையில் ரத்து செய்தது. அதற்கு மேல் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்துள்ளனர் சனாதனிகள்.

**● அறநிலையத் துறையைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கை அண்மைக்காலத்தில் ஒரு சிலரால் தொடர்ந்து எழுப்பப்படுகிறது. இது குறித்த உங்களது கருத்து.**

★ அறநிலையத்துறை தொடர்பான சட்டம் சனநாயக பூர்வமானது அல்ல. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பது இதுவரை சாத்தியமில்லை. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று அறநிலையத்துறை சட்டத்தில் இல்லை என்பதே வருத்தமான உண்மை.

முதலில் அரசாணை மூலம் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று 2006 இல் முதல் அமைச்சர் ஆனவுடன் அரசாணை வெளியிட்டார் அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதி. அரசாணை போதாது அதற்கான சட்டம் செய்யப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலை ஏற்று, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று 14.7.2006 அன்று ஓர் அவசரச் சட்டம் போட்டு அறநிலையத்துறை சட்டத்தைத் திருத்தினார் அப்போதைய முதல்வர் கருணாநிதி. அப்போது சட்டசபைக் கூட்டத்தொடர் நடக்கவில்லை என்பதால் அவசரச் சட்டம் போட்டார்.

அரசாணையையும் அவசரச் சட்டத்தையும் எதிர்த்து உயர் சாதி பார்ப்பனர்கள் உச்ச நீதிமன்றத்தை நேராக அணுகினர். 14.8.2006 இல் அதற்குத் தடை கொடுத்தது உச்ச நீதிமன்றம். எனவே அவசரச் சட்டம், சட்டம் ஆகாமல் போனது. அவசரச் சட்டத்திற்கு ஆயுள் ஆறு மாதம் தானே. 2011 வரை ஆட்சியில் இருந்த கலைஞர் அந்த வழக்கை விரைந்து முடிக்க ஏனோ நடவடிக்கை எடுக்கவில்லை. உச்ச நீதிமன்றம் 2015 இல் இறுதித் தீர்ப்புக் கொடுக்கும் போது அவசரச் சட்டமே உயிருடன் இல்லை. அரசாணையை ரத்து செய்ய உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது. அடுத்து சட்டம் போடும் போது அது பற்றி நீதிமன்றம் பரிசீலிக்கும் என்றது. இந்த நிலையில், இது நாள் வரை தமிழ்நாட்டில் கூட அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று சட்டம் போடவில்லை.

இதைவிட மிகப்பெரிய கேடு, கோயில் நிர்வாகத்தில் சாதிதான் ஆட்சி செய்கிறது என்பதே உண்மை.

தில்லைக் கோயிலை ஆட்சி செய்வது தீட்சிதர்கள் என்ற சாதியைச் சேர்ந்தவர்கள் என்றால், மற்ற கோயில்களை நிர்வகிப்பது பார்ப்பனர் அல்லாத உயர்சாதியினர் அல்லது சாதி இந்துக்கள். எந்தக் கோயிலையும் பட்டியல் சாதியினர் நிர்வாகம் செய்யவில்லை. இப்படி சாதி ஆதிக்கம் நிலைநாட்டப்படும் வகையில்தான் நமது அறநிலையத்துறைச் சட்டம் இருக்கிறது. இதைப் பற்றிய ஆய்வும் விவாதமும் நடைபெறுவதே இல்லை. அதிகபட்சம் அர்ச்சகர் பற்றித் தான் விவாதம் நடக்கும். அடுத்து கோயிலில் தமிழ் ஒலிக்கவில்லை என்ற விவாதமும் ஓரளவு நடக்கும். ஆனால் கோயிலை நிர்வகிப்பதில் சாதி பெரும் பங்கு வகிக்கிறது என்பதை அனைவரும் கடந்தே செல்கிறோம்.

அனைத்து சாதியினரும் கோயிலுக்குள் வழிபடலாம் என்பது கூட இதுவரை உறுதி செய்யப்படவில்லை. வேங்கை வயல் பிரச்சனை வந்த போது அங்கே கோயிலிலும் பட்டியல் சாதியினர் அனுமதிக்கப்படுவதில்லை என்பது வெளிப்பட்டது. மதுரை உத்தப்புரத்தில் தீண்டாமைச் சுவர் இடிக்கப்பட்டது; பட்டியல் சாதியினர் அங்கிருக்கும் இரண்டு கோயில்களிலும் சென்று வழிபடலாம் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது; வழிபடச் சென்ற பட்டியல் சாதியினர் பொங்கல் வைக்கக் கூடாது என்றது காவல்துறை; உயர் நீதிமன்றம் வழிபடலாம் என்று தான் உத்தரவளித்ததாம்!

**● சாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்கச் சிறப்புச் சட்டம் தேவை எனத் தொடர்ந்து வலியுறுத்தப்படுவது குறித்து உங்களது கருத்து.**

★ சென்னை உயர்நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பு கூடச் சிறப்புச் சட்டம் தேவை என்று பரிந்துரைத்துள்ளது. வாக்கு அரசியலையே நம்பியுள்ள எந்த மாநிலமும் சிறப்புச் சட்டம் இயற்றவில்லை. பாராளுமன்றத்தில் சிறப்புச் சட்டம் நிறைவேற்ற பாஜக தயாராக இல்லை.

சிறப்புச் சட்டம் ஒரு கூடுதல் ஆயுதம். சிறப்புச் சட்டம் வருமானால் ஆணவப் படுகொலைகள் தடுத்து நிறுத்தப்படும் என்று கூற முடியாது. கோயிலுக்குள் வழிபடக் கூட அனுமதி மறுக்கும் சாதி இந்துக்கள் தங்களது பெண், பட்டியல் சாதி ஆண் மகனை மணப்பதற்கு எப்படிச் சம்மதிப்பார்கள்? இன்னும்

மனுநீதிதான் மக்கள் மத்தியில் குறிப்பாகச் சாதி இந்துக்கள் மத்தியில ஆட்சி செய்கிறது. மனுநீதிப் படி கீழ் சாதி சேர்ந்த ஆண் மகன் மேல் சாதிப் பெண்ணை மணந்தால் அவனைச் சாகடிப்பது தானே தண்டனை.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டமே சரியாக அமல்படுத்தப்படுவதில்லை. இரண்டு மாதங்களில் புலனாய்வு நடைபெற வேண்டும் என்று கூறுகிறது அச்சட்டம். பல ஆண்டுக்கணக்கில் புலனாய்வு நடைபெறுவதே உண்மை நடைமுறை. அதேபோல சிறப்பு நீதிமன்றம் இரண்டு மாதங்களில் விசாரித்து. தீர்ப்புச் சொல்ல வேண்டும் என்று கூறுகிறது அச்சட்டம். எந்த வழக்கிலும் இதுவரை இரண்டு மாதங்களில் தீர்ப்புச் சொல்லப்படவில்லை. முதலில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதே எவ்வளவு சிரமமான காரியம் என்பது பட்டியல் சாதியைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியும்.

**பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே பரவி வரும் சாதியப் பாகுபாடுகளை ஒழிக்க நீங்கள் வழங்கும் அறிவுரை என்ன?**

சமூகத்தில் சாதி ஆழமாக இருக்கும் போது சமூகத்தின் ஓர் அங்கமான பள்ளி கல்லூரிகளில் மட்டும் சாதியப் பாகுபாடுகள் இல்லாமல் எப்படி இருக்கும்?

25.11.1949 அன்று நிகழ்த்திய இறுதி உரையில் அண்ணல் அம்பேத்கர் அவர்களே நமது அரசியல் சட்டத்தில் ஒருவருக்கு ஒரு வாக்கு என்பதை உறுதி செய்த வகையில் அரசியல் நீதியை அடைந்தாலும், சாதியப் பாகுபாட்டை கலையாததால் சமூக நீதியும், பொருளாதார ஏற்றத் தாழ்வை கலையாததால் பொருளாதார நீதியும் நாம் அடையவில்லை என்று சுட்டிக் காட்டினார்.

இன்னும் கிராமங்களில் ஊர் என்றும் சேரி என்றும் பிரிந்து தானே கிடக்கிறது. சாதிக்கு ஒரு சுடுகாடு தானே ஒவ்வொரு கிராமத்திலும் உள்ளது.

நகரத்தில் நுழைந்தால்தான் சாதியின் வீச்சு சற்றுக் குறைவாக இருப்பதைப் பார்க்கலாம்.

நல்ல காலமாக, 1960-70களில் 75% -ஆக இருந்த கிராமங்கள் இன்று மிக அதிக அளவு சுருங்கி உள்ள நிலை

யிலேயே சாதியப் பேய் தலை விரித்தாடுகிறது என்றால், இன்னும் கிராமங்கள் அப்படியே இருக்குமானால் அந்தப் பேய் எந்த ஆட்டம் ஆடும். 1960-70 ஐ ஒப்பு நோக்கில் நிச்சயம் சாதியப் பாகுபாடு குறைந்து தான் உள்ளது என்பது எனது கருத்து. 1900 ஒட்டிய ஆண்டுகளில் பட்டியல் இனத்தவருக்குப் பள்ளியில் தனி இருக்கை; 1960 -70களில் பட்டியல் சாதி மாணவர்கள் சாதி இந்து மாணவனுடன் பள்ளியில் அமரலாம், ஆனால் அப்படி அமர்வதன் மூலம் சாதி இந்து மாணவன் தீட்டாகி விடுவதாக் கருதப்பட்டது; எனவே சாதி இந்து மாணவன் வீடு சென்றதும் ஆடையை அகற்ற வேண்டும்; இப்போது 21ம் நூற்றாண்டின் முதல் பகுதியில் சாதி இந்து பள்ளி மாணவன் கையில் பல வண்ணத்தில் கயிறு கட்டப்பட்டு, சாதி அதன் புதிய அவதாரத்தை எடுத்துள்ளது.

சாதியப் பாகுபாடு எந்த அளவு சமூகத்தில் குறைந்துள்ளது, அந்த அளவு பள்ளி கல்லூரிகளில் சாதியப் பாகுபாடு குறைந்திருக்கும்.

**● ஆளுநர்கள், மாநில அரசுகளின் மசோதாக்களை ஆண்டுக் கணக்கில் கிடப்பில் போடுவது பற்றி உச்ச நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பு குறித்துக் குடியரசுத் தலைவர் 14 கேள்விகளை எழுப்பியிருப்பது குறித்த உங்களது கண்ணோட்டம்.**

★ 8-4-2025 அன்று உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை நீர்த்துப்போக வைப்பதுதான், அந்த 14 கேள்விகளை ஒன்றிய அரசு குடியரசுத் தலைவரின் மூலம் உச்ச நீதிமன்றத்திற்கு எழுப்பி இருப்பதற்கான காரணம்.

ஒன்றிய அரசுக்கு அரசமைப்புச் சட்டம் பற்றிய சந்தேகம் எழுந்துள்ளதாம், அதனால் அரசமைப்புச் சட்டம் பிரிவு 143 வழங்கும் அதிகாரத்தின் கீழ் அவர்களுக்கான சந்தேகத்தை தீர்த்து வைக்குமாறு உச்ச நீதிமன்றத்தை கேட்கிறார்களாம்!

"பல்கலைக்கழகம்" என்ற பொருள் அரசமைப்புச் சட்டத்தில் மாநிலப் பட்டியலில் உள்ளது. பல்கலைக்கழகம் உருவாக்குவது, நிர்வகிப்பது, மூடுவது என அனைத்து அதிகாரமும் மாநில அரசுக்கு மட்டுமே அரசமைப்புச் சட்டம் வழங்குகிறது.

தமிழ்நாட்டில் 20க்கும் மேற்பட்ட அரசுப் பல்கலைக்கழகங்கள் தமிழ்நாடு சட்டசபையில் இயற்றப்பட்ட சட்டங்கள் மூலம் இயங்கி வருகின்றன.

அந்தச் சட்டங்களை இயற்றும் போது அப்போது மாநிலத்தில் ஆட்சி செய்தவர்கள் செய்த பெரும் தவறுதான் இன்று பிரச்சினையாக வந்து உள்ளது. அந்தப் பல்கலைக்கழக சட்டங்களில், ஆளுநர்களைப் பல்கலைக்கழகங்களின் வேந்தர்களாக (Chancellor) நியமிப்பதும் இந்தச் சட்டங்கள்தான்.

ஆளுநர்களுக்குத் துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் இல்லை என்பதே இப்போதைய சர்ச்சைக்கு உள்ள 10 சட்டங்களில் தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டுச் சட்டசபை மூலம் செய்த திருத்தங்கள்.

அதாவது இந்தச் சட்டத் திருத்தங்களைச் செய்ததன் மூலம், பாதிக் கிணறுதான் தமிழ்நாடு அரசு தாண்டி உள்ளது.

உண்மையில் முழுக்கிணறு தாண்டுவது என்பது, வேந்தர்களாக ஆளுநர்கள் இருப்பதை முழுவதுமாக ஒழித்துக்கட்டும் முறையில் சட்டத்தைத் திருத்தி இருக்க வேண்டும்.

அப்படிச் செய்யாமல், வேந்தர்களுக்குத் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை நீக்கியதே இந்தச் சட்டங்களில் செய்த திருத்தங்கள்.

ஆனால் இந்தச் சட்டத் திருத்தங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆண்டுகணக்கில் வெறுமனே இருந்தார் ஆளுநர்.

இந்தப் பத்துச் சட்டங்களில் இரண்டு சட்டங்களைக் கொண்டு வந்தது 2020இல் அதிமுக ஆட்சிக் காலத்தில்.

எனவே 31-10-2023 அன்று உச்சநீதிமன்றத்தை அணுகியது தமிழ்நாடு அரசு. உச்ச நீதிமன்றத்தின் முன் 4 கோரிக்கைகளை முன் வைத்தது தமிழ்நாடு அரசு. அதில் ஒன்று, மேற்சொன்ன 10 சட்டங்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்கவில்லை என்பது. இரண்டாவது, ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அதிமுக மந்திரிகள் வீரமணி மற்றும் விஜயபாஸ்கர் போன்றோர் மீது குற்ற வழக்குத் தொடர ஆளுநர் அனுமதி அளிக்காமல் ஆண்டுக்கணக்கில் அதற்கான கோப்புகளை வைத்திருந்தார் என்பது. மூன்றாவது,

சிறையில் தண்டனை பெற்று இருப்பவர்களுக்குத் தண்டனைக் குறைப்பு வழங்கிய அரசின் கோப்புகள் உரிய உத்தரவு போடாமல் ஆளுநர் வைத்துள்ளார் என்பது. நான்காவது, தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் உள்ள 14 உறுப்பினர்களில் 10 பேர் ஓய்வு பெற்றுச் சென்று விட்ட நிலையில், அப்போதைக்கு அப்போது ஓய்வு பெற்றவர்களின் இடத்தில் புதிய உறுப்பினர்களை நிரப்புவது தொடர்பாக அனுப்பிய கோப்புகளில் உத்தரவு போடாமல் கோப்புகளை வைத்திருந்தார் ஆளுநர் என்பது.

இதில் 10 சட்டங்கள் பற்றி மட்டுமே உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆளுநருக்கு ஒப்புதல் அளிப்பதற்கான காலக்கெடு நிர்ணயித்துள்ளது இந்த தீர்ப்பு. அதாவது, மூன்று மாதத்திற்குள் ஒப்புதல் அளிப்பது தொடர்பான முடிவை எடுக்க வேண்டும் என்று கூறுகிறது தீர்ப்பு.

மாநிலப் பட்டியலில் உள்ள பொருள் பற்றித் தமிழ்நாடு சட்டசபை சட்டம் இயற்றினால் ஒரு மாதத்திற்குள் சட்டசபைக்குத் திருப்பி அனுப்பி அதில் திருத்தங்கள் செய்ய ஆளுநர் கோரலாம் என்று கூறிய உச்ச நீதிமன்றம், அந்தக் கோரிக்கையை ஏற்றோ அல்லது நிராகரித்தோ சட்டசபை மீண்டும் அந்தச் சட்டத்தை இயற்றினால் அதற்கு ஒப்புதல் தருவது தவிர ஆளுநருக்கு வேறு வழி இல்லை என்று கூறுகிறது அந்தத் தீர்ப்பு.

ஒத்திசைவுப் பட்டியலில் உள்ள பொருள் பற்றி, மாநில அரசு சட்டம் இயற்றினால் அதை ஒப்புதலுக்காக உடனடியாக, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஒன்றிய அரசுக்கு ஆளுநர் அனுப்ப வேண்டும் என்றும், ஒன்றிய அரசு (குடியரசுத் தலைவர்) மூன்று மாதத்திற்குள் அதில் முடிவெடுக்க வேண்டும் என்றும் காலக்கெடு விதித்துள்ளது இந்தத் தீர்ப்பு.

தமிழ்நாடு சட்டசபை சட்டம் இயற்றி நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில், அரசமைப்புச் சட்டடப் பிரிவு 142 உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கும் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி உச்ச நீதிமன்றமே இந்தச் சட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதாகக் கூறுகிறது இந்தத் தீர்ப்பு.

இது மிகச் சிறப்பான தீர்ப்பு என்பதில் ஐயம் ஏதுமில்லை.

ஆனால் நாம் கேட்க வேண்டிய கேள்வி வேறு.

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி 1857 வரை நடந்தது. 1857 க்கு பின் பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆட்சிக்குக் கீழ் இந்தியா வந்தது. 1858ல் அடிமைப்பட்டிருந்த இந்தியாவை ஆட்சி செய்வதற்காக இலண்டனில் இருந்து அனுப்பப்பட்டவர்கள்தான் ஆளுநர்கள். ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு ஆளுநர் கீழ் இருக்கும். அந்த ஆளுநர்கள் அனைவருக்கும் மத்தியிலே அமர்ந்திருந்தவர் வைஸ்ராய் எனப்படும் கவர்னர் ஜெனரல். சம்பந்தப்பட்ட மாகாணத்தில் சட்டங்கள் இயற்றுவதற்கும் உத்தரவுகள் போடுவதற்கும் என அனைத்து அதிகாரம் படைத்தவர் ஆளுநர். இந்நிலையில் 1919 இல் மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு செயல்பட நம்மை ஆண்ட பிரிட்டிஷ் அரசு சட்டம் போட்டது. அப்படித்தான் இங்கே நீதிக் கட்சியும் காங்கிரசும் ஆட்சி செய்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைகள் சட்டம் இயற்றும் அதிகாரங்கள் ஒருபுறம். மற்றொருபுறம் சட்டம் இயற்றுவதற்கான ஆளுநருக்கான அதிகாரம். மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட பொருள் சம்பந்தமாகச் சட்டம் இயற்றினாலும், அது சட்டமாக வேண்டும் என்றால் ஆளுநரின் ஒப்புதல் பெற வேண்டும். இதே நிலைதான் 1935 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட கவர்மெண்ட் ஆப் இந்தியா சட்டத்திலும் தொடர்ந்தது.

சுதந்திரத்திற்கு முன் மாகாண அரசுகள் நம்மை இலண்டனில் இருந்து ஆண்ட பிரிட்டிஷுக்கு அடிமைப்பட்டிருந்தது.ஆனால் சுதந்திர இந்தியாவில் மாநில அரசுகள் டெல்லியின் அடிமைகள் இல்லையே. பின் ஏன் பிரிட்டிஷார் உருவாக்கிய ஆளுநர்கள் என்ற பதவி?. ஆளுநர்கள் பதவி ஏகாதிபத்தியத்தின் மிச்ச சொச்சம் (imperial legacy) அல்லவா?. அரசமைப்புச் சட்டம் மாநிலங்களுக்கு ஒதுக்கிய அதிகாரத்துக்குள் சட்டம் இயற்றும் போது கூட டெல்லி நியமிக்கும் ஆளுநரிடம் ஒப்புதல் ஏன்?.

**● துணைவேந்தர்கள் நியமனம் உள்ளிட்ட பத்து மசோதாக்களைச் சட்டமாக்கிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்குச் சென்னை விடுமுறைக்கால உயர்நீதிமன்ற அமர்வு அவசர அவசரமாக இடைக்காலத் தடை போட்டது சரியா?**

★ சரியல்ல. முதலில் இதை விடுமுறைக் காலத்தில் அவசர கால வழக்காக விசாரித்தது தவறு.

மே 20க்கு பின்னர்தான் உச்ச நீதிமன்றத்திற்குக் கோடை விடுமுறை. தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு கல்வி தொடர்பாக நிதி தரவில்லை என்று உச்ச நீதிமன்றத்தில் கோடை விடுமுறைக் கால உச்ச நீதிமன்ற அமர்வில் தமிழ்நாடு அரசு வழக்குத் தொடுத்தது. இந்த வழக்கை விடுமுறையில் விசாரிப்பதற்கு எந்த அவசரமும் இல்லை என்று கூறி உச்ச நீதிமன்றம் விடுமுறைக்குப் பின் ஒத்தி வைத்தது.

இந்த அளவுகோலை சென்னை உயர் நீதிமன்ற விடுமுறைக் கால அமர்வு ஏன் கைக்கொள்ளவில்லை என்பது புரியவில்லை.

மேலும், இந்த வழக்கைப் போட்டது திருநெல்வேலி மாவட்ட பாஜக செயலாளர். அவர் ஒரு வழக்கறிஞரும் கூட. அவருக்கான வழக்குரைஞர் மதுரையைச் சேர்ந்தவர். கோடை விடுமுறையில் விடுமுறைக் கால நீதிமன்றமாகச் செயல்படும் மதுரை உயர்நீதிமன்றத்தை விடுத்து ஏன் அவர் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு வந்தார்?. இதை ஆங்கிலத்தில் ஃபோரம் ஷாப்பிங் (Forum Shopping) என்பார்கள். இது நீதித்துறையின் மேல் நம்பிக்கை இழக்க செய்யும்.

மேலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அல்லது பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களுக்கு வழக்கமாக நீதிமன்றங்கள் தடை அளிக்காது. ஆனால் மிகச் சாதாரணமாகத் தடை அளித்தது சென்னை உயர்நீதிமன்ற விடுமுறைக் கால அமர்வு. பாபர் மசூதி தீர்ப்புப் போல இதுவும் நீதித்துறைக்கு ஒரு களங்கத்தை உண்டாக்கக் கூடியது.

- **ஹிந்து ராஷ்டிரம் அமைத்தே தீருவோம் எனப் பாரதீய ஜனதாக் கட்சி தொடர்ந்து வலியுறுத்தும் சூழ்நிலையில், இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி முறை சாத்தியப் படுமா?**

★ மத்தியிலே அதிகாரக் குவியல் சொல்ல முடியாத அளவில் இருக்கும்போது இதை எப்படி ஒரு கூட்டாட்சி என்று கூறிவிட முடியும்?

26.1.1950 முதல் அமலுக்கு வந்த அரசமைப்புச் சட்டமே மத்தியிலே அதிகாரக் குவியலை உண்டாக்கியது. அரசு அமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என்று 1946 டிசம்பரில் அரசமைப்பு அவை கூடிய போது மத்தியிலே அதிகாரக் குவியல் இருக்க வேண்டும் என்பது அந்த அவைக்கு

நோக்கமாக இல்லை. பின்னர் நடந்த இரண்டு முக்கிய நிகழ்வுகள் மத்தியிலே அதிகாரக் குவியலை குவிக்கும்படியான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க வைத்தது.

ஒன்று, பாகிஸ்தான் பிரிவினை. இது போன்ற வேறு பிரிவினை வரக்கூடாது என்று அஞ்சினர் அரசமைப்பு அவையினர். மற்றொன்று, 500க்கும் மேற்பட்ட மன்னர் ஆட்சிப் பிரதேசங்களில் சில தனி நாடாகச் செல்வதற்கு முயற்சி செய்தன. இதை எதிர்கொள்ள வேண்டிய பிரச்சனையும் புதியதாகச் சுதந்திரம் பெற்ற இந்திய அரசுக்கு இருந்தது. பாகிஸ்தான் பிரிவினையுடன் இந்த சூழ்நிலையும், மிகக் கூடுதலான அதிகாரக் குவியலை மத்தியிலே குவிப்பதற்குக் காரணமானது.

கடந்த 75 ஆண்டுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட அரசமைப்புச் சட்டத் திருத்தங்களில் இந்த அதிகாரக் குவியல் மேலும் அதிகரித்தது. அனைத்து அதிகாரங்களும் டெல்லிக்கு என்ற நிலைதான் இன்று உள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் மட்டும் அதற்கான அரசமைப்புச் சட்டம் இருந்தது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 370 இதை அங்கீகரித்தது. ஜம்மு காஷ்மீருக்கான அரசமைப்பு அவை, ஜம்மு காஷ்மீருக்கான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியது. பாதுகாப்பு, அயல்நாட்டு துறை, தொலைத்தொடர்பு போன்ற பொருள்கள் தவிர்த்து மற்ற அனைத்து அதிகாரங்களும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு ஜம்மு காஷ்மீர் அரசமைப்புச் சட்டம் அளித்தது. இதையே ஜம்மு காஷ்மீருருக்கான சிறப்பு அந்தஸ்து என்பர்.

இது போன்ற சிறப்பு அந்தஸ்து மற்ற மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை எந்த அரசியல் கட்சியும் எழுப்பியதாகத் தெரியவில்லை.

வாய் கிழிய மாநில உரிமை பற்றிப் பேசுபவர்கள் கூட இதைப் பற்றி பேசுவது கிடையாது.

2014க்கு முன்னர் காங்கிரஸ் அரசு, அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 370 இன் படி, பல்வேறு ஒன்றிய அரசின் உத்தரவுகள் மூலம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பல பிரிவுகளை ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு அமல்படுத்தியது. இதில் நியாயமாகக் காங்கிரஸ் அரசு செயல்படவில்லை. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின்

அனுமதி உடன்தான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மற்ற கூறுகள் அந்த மாநிலத்திற்கு விரிவுபடுத்தப்படும் என்று இருந்ததை, ஜம்மு காஷ்மீர் எப்போதெல்லாம் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் இருந்ததோ அப்போதெல்லாம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பல கூறுகளை அந்த மாநிலத்திற்கு விரிவு படுத்தியது மத்தியில் ஆண்ட காங்கிரஸ் அரசு.

2019 ஆம் ஆண்டில் உள்துறை அமைச்சர் அமித்ஷா, காங்கிரஸ் சென்ற அதே வழியில் சென்று காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை முழுவதுமாக நீக்கினார். அதாவது, அமித்ஷா இரண்டு உத்தரவுகள் போட்டார். ஒரு உத்தரவில், இதுவரை காங்கிரஸ் அரசு இந்திய அரசமைப்புச் சட்டத்தை ஜம்மு காஷ்மீருக்கு விரிவு படுத்தி போட்ட அனைத்து உத்தரவுகளும் திரும்பப் பெறப்பட்டது. இரண்டாவது உத்தரவில், இந்திய அரசியலமைப்புச் சட்டம் முழுவதும் ஜம்மு காஷ்மீருக்குப் பொருந்தும் என்று கூறப்பட்டது. எனவே ஜம்மு காஷ்மீர் மாநிலமும் மற்ற மாநிலங்கள் போல எந்த அதிகாரமும் இல்லாத ஒரு மாநிலமாக ஆக்கப்பட்டது. அதுமட்டுமின்றி மாநில அந்தஸ்தையே கூட ஜம்மு காஷ்மீர் மாநிலம் இழந்தது. 2019-ல் அந்த மாநிலம் டெல்லியின் கீழ் உள்ள ஒரு ஆட்சி பிரதேசமாக (Union Territory) மாற்றப்பட்டது. மேலும் லடாக் பகுதி ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டு அது டெல்லியின் கீழ் உள்ள ஒரு தனி ஆட்சிப் பிரதேசமாக மாற்றப்பட்டது.

இந்தச் சூழலில் கூட்டாட்சி பற்றி எப்படிச் சிந்திக்க முடியும். இருக்கின்ற உரிமைகளே பறந்து கொண்டிருக்கின்றன. தென் மாநிலங்களின் நாடாளுமன்ற சீட்டுகள் குறைக்கப்பட உள்ளன. ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற சட்டத்தின் மூலம் மாநில அரசு ஐந்து ஆண்டுகள் செயல்படுவதற்கான வாய்ப்பு முற்றிலும் மறுக்கப்பட உள்ளது.

**• அண்மையில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி மாண்புமிகு கவாய் அவர்கள், அவரது சொந்த மாநிலமான மகராஷ்டிராவிலேயே அவமதிக்கப் பட்ட நிகழ்வு நமக்குச் சுட்டிக் காட்டும் படிப்பினை என்ன?**

★ எவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்தாலும் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவே இருந்தாலும் அவர் பட்டியல் சாதியைச் சேர்ந்தவர் என்பதுதான் அவர் அவமதிக்கப்பட்டதற்கான காரணம் என்று கருதுகிறேன்.

தலைமைச் செயலாளரோ, மாநிலக் காவல்துறை தலைமை அதிகாரியோ, மும்பை நகரக் காவல்துறை ஆணையரோ எவரும் அவரை வரவேற்கச் செல்லவில்லை.

குறிப்பாக அவர் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதும், அவர் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியான பின்னர் முதல் முறையாக அவர் சொந்த மாநிலத்திற்குச் செல்லும்போது அவரை வரவேற்க புரோட்டோகால் படி எவரும் வரவில்லை என்பதும், சாதியத் தாக்கம் எந்த அளவு ஆழமாக உள்ளது என்பதைத் தெளிவுபடுத்தும்.

**● சுற்றுச்சூழலை நாசமாக்கும் வகையில் கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாக அரசுகள் நடந்து கொள்வது ஏற்கத்தக்கதா? இதைத் தடுப்பதற்கு நீதிமன்றங்களின் பங்கு என்னவாக இருக்க முடியும்?**

★ சுற்றுச்சூழலை நாசமாக்கும் வகையில் கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாக அரசுகள் நடந்து கொள்வதை மக்கள் நலனில் அக்கறை உள்ள எவரும் ஏற்க மாட்டார்கள்.

இதைத் தடுப்பதற்கு நீதிமன்றங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் தவறு ஏதுமில்லை.

ஆனால், அரசாங்கத்தைப் போலவே நீதிமன்றங்களும் அரசின் ஒரு கருவி தான். அரசாங்கம் கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாகச் செயல்படும்போது நீதிமன்றங்கள் செயல்படாது என்று நினைப்பதே தவறு.

வலுவான சுற்றுச்சூழல் இயக்கம்தான் சுற்றுச்சூழல் நாசமாவதைத் தடுப்பதற்கான மிகச் சரியான வழி.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஸ்டெர்லைட் போராட்டத்தை எடுத்துக் கொள்வோம். ஸ்டெர்லைட்டை மூடச் சொல்லி நடந்த அறப்போராட்டத்தில் 14 பேர் இறந்த பின்னர்தான் அந்தக் கார்ப்பரேட்டின் ஆலையை மூட அரசு முடிவெடுத்தது. அதனை எதிர்த்து ஸ்டெர்லைட் நிர்வாகம் டெல்லியில் உள்ள பசுமைத் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்தது. அந்த தீர்ப்பாயத்தின்

தலைவர் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி கோயல் ஆவார்கள். பசுமைத் தீர்ப்பாயத்திற்கு இந்த வழக்கை விசாரிக்க அதிகாரம் இல்லை என்று போராடிய அமைப்புகளும், தமிழ்நாடு அரசும் வாதாடிய போதும், ஸ்டெர்லைட் ஆலையைத் தமிழ்நாடு அரசு மூடிய உத்தரவை ரத்து செய்து மீண்டும் திறக்கப் பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

அந்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றம் சென்றபோது, அங்கே நாரிமன் அமர்வு சிறப்பான உத்தரவை அளித்தது. பசுமைத் தீர்ப்பாயத்திற்கு இந்த வழக்கை விசாரிக்க உரிமை இல்லை என்று அந்தத் தீர்ப்பில் கூறியது. பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவை ரத்து செய்தது. ஸ்டெர்லைட் ஆலையை மூடச் சொல்லி தமிழ்நாடு அரசு போட்ட உத்தரவினை எதிர்த்துத் தமிழ்நாட்டில் உள்ள உயர் நீதிமன்றத்திற்குச் செல்ல ஸ்டெர்லைட் ஆலைக்கு உத்தரவிட்டது.

அப்படித்தான் ஸ்டெர்லைட் ஆலை மதுரை உயர்நீதிமன்றத்தை அணுகியது. உயர் நீதிமன்ற நீதிபதி சிவஞானம் தலைமை யிலான இரு நீதிபதிகள் அமர்வு, ஸ்டெர்லைட் ஆலையைத் தமிழ்நாடு அரசு மூடிய உத்தரவு மிகச் சரியே என்று நீண்ட தீர்ப்பை அளித்தது. அந்தத் தீர்ப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது. ஆனால் அந்தத் தீர்ப்பை அளித்த நீதிபதி சிவஞானம் பின்னர் கல்கத்தாவுக்கு மாற்றம் செய்யப்பட்டார். இந்தத் தீர்ப்பு மட்டுமின்றி எட்டு வழிச் சாலை சட்டவிரோதமானது என்ற தீர்ப்பையும் அளித்தது நீதிபதி சிவஞானம் அவர்களே. அவர் மூத்த நீதிபதியாக இருந்தும் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்படவில்லை. இதற்கெல்லாம் இந்த தீர்ப்புத் தான் காரணம் என்று வழக்குரைஞர்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது.

- **இந்திய அரசமைப்புச் சட்ட உருவாக்கத்தில் அண்ணல் அம்பேத்கரின் பங்களிப்பு குறித்த உங்களது மதிப்பீடு.**

★ அரசமைப்புச் சட்ட உருவாக்கத்தில் அண்ணல் அம்பேத்கர் மிகக் காத்திரமான பங்கை வகித்தார் என்பதை அனைவரும் அறிவர்.

ஆனால் அரசமைப்பு அவையின் உறுப்பினராக அம்பேத்கர் ஆகக்கூடாது என்பதில் வெறித்தனமாக காங்கிரஸ் இயக்கம்

இருந்ததை ஒட்டி, அவர் அன்றைய கிழக்கு வங்கத்தில் (இப்போதைய பங்களாதேஷ் பகுதியில்) இருந்து அரசமைப்பு அவைக்கு 1946 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசமைப்பு அவையின் நடவடிக்கைகளில் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் பங்கு கொள்ளாமல் புறக்கணித்தனர். அந்த நேரத்தில் அண்ணல் அம்பேத்கரின் பேச்சும் செயலும் காங்கிரஸின் எண்ணத்தில் மாற்றத்தை கொண்டு வந்தது.

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின், கிழக்கு வங்கம் பாகிஸ்தானின் ஒரு பகுதியாக ஆனதை ஒட்டி அரசமைப்பு அவையின் உறுப்பினர் தகுதியை அம்பேத்கர் இழந்தார். இந்த முறை மகாராஷ்டிரத்தில் இருந்து அவர் அரசமைப்பு அவைக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் காங்கிரஸ் உதவியாய் இருந்தது.

அண்ணல் அம்பேத்கரின் வார்த்தையிலேயே, அவர் அரசமைப்பு அவைக்கு சென்றதன் நோக்கமே பட்டியல் இனத்தைச் சேர்ந்த மக்களுக்கான உரிமைகளை அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்ய வேண்டும் என்பதுதான்.

மேலும் அரசமைப்புச் சட்டத்தின் வரைவு நகலைத் தயார் செய்தது டாக்டர் ராவ் என்பவர். அடிப்படை உரிமைகள் பற்றி ஆய்வு செய்யக் குழு, சிறுபான்மையினர் உரிமை பற்றி ஆய்வு செய்யக் குழு என்று சுமார் 15 குழுக்கள் மேற்சொன்ன வரைவு நகலை ஆய்வுக்கு உட்படுத்தி அறிக்கை அளித்தது. மேற்சொன்ன வரைவு நகல் மற்றும் மேற்சொன்ன குழுக்கள் அளித்த அறிக்கைகளின் அடிப்படையிலேயே, அரசமைப்பு அவையின் வரைவுக் குழு வரைவு அறிக்கையை தயார் செய்தது.

முதலில் அரசமைப்பு அவையின் வரைவுக் குழுவில் உறுப்பினராக அம்பேத்கர் நியமிக்கப்பட்டார். பின்னர் அக்குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் வரைவுக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கும், பின்னர் அக்குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் காங்கிரஸ் பேரியக்கமே காரணம்.

அவர் 25.11.1949 அன்று ஆற்றிய இறுதி நாள் உரையில், காங்கிரஸ் பேரியக்கத்தின் ஆதரவின்றி இந்த அரசமைப்புச் சட்டத்தை இயற்றி இருப்பது சாத்தியமில்லை என்பதை வெளிப்படையாகக் கூறுகிறார்.

எனவே அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் மிக முக்கிய பாத்திரத்தை அவர் வகித்தார் என்றாலும் மேற்சொன்ன டாக்டர் ராவ் , மேலே குறிப்பிட்ட பல சிறப்பு குழுக்கள், அரசமைப்பு அவையின் கற்றறிந்த உறுப்பினர்கள் என அனைவரின் முயற்சியால் உண்டானதே அரசமைப்புச் சட்டம்.

**● தமிழ்நாடு பொதுமேடை 2024 அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்று, நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் பாரதீய ஜனதாக் கட்சியைத் தோற்கடிக்க முனைப்புடன் பரப்புரை மேற்கொண்டீர்கள். அதன் நீட்சியாக நாடாளுமன்றத் தேர்தலில் கோவை வேட்பாளர் அண்ணாமலை அவர்களைத் தோற்கடிக்க வேண்டும் எனக் கோவையில் நடைபெற்ற பரப்புரைக் கருத்தரங்கில் முதன்முதலாகக் கோவை வாழ் மக்களுக்கு நீங்கள் வேண்டுகோள் விடுத்தீர்கள். அண்ணாமலையும் தோற்கடிக்கப்பட்டார். இத்தகைய பின்னணியில், பாரதீய ஜனதாக் கட்சி எதிர்வரும் காலத்திலும் தொடர வேண்டுமா? இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்கும்? உங்களது மதிப்பீட்டினைப் பதிவு செய்யுமாறு வேண்டுகிறோம்.**

★ நிச்சயம் பாரதிய ஜனதா கட்சி அரசு அதிகாரத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும். அதுவே ஜனநாயகத்திற்கும் நாட்டிற்கும் நல்லது.

ஆனால் இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற மிகப்பெரிய கேள்விக்குப் பதில் கூறுவது சிரமம்.

ஒரு வலுவான இடதுசாரி இயக்கம்தான் சரியான தீர்வாக இருக்க முடியும்.

ஆனால் துரதிஷ்டவசமாக கிட்டத்தட்ட இடதுசாரி இயக்கமே இல்லை. அதை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

குறிப்பாகச் சாதிய அமைப்பைப் பற்றிய இடதுசாரிகள் போதிய ஆய்வு செய்யவில்லை என்பது என் கருத்து. அதனாலேயே மண்டல் குழு அறிக்கையை ஆதரிக்கத் தவறினர்; உயர் சாதியினருக்கு இட ஒதுக்கீடு (EWS) அளிக்கப்பட்டபோது அதை ஆதரித்து நின்றார்கள்.

சாதிகளுக்கு இடையே ஏற்றத்தாழ்வு இருப்பது போல இந்திய மொழிகளுக்கு இடையே ஏற்றத்தாழ்வு இருப்பதும்,

இந்தி மொழியின் ஆதிக்கத்தை அரசமைப்புச் சட்டமே ஏற்றுக் கொண்டிருப்பதையும் இடதுசாரி இயக்கங்கள் போதிய அளவு கணக்கில் கொள்ளவில்லை.

அதேபோல, தேசிய இனங்களின் உரிமை பற்றிப் போதிய அளவு ஆய்வு செய்யவில்லை போன்ற காரணங்களால் இடதுசாரி இயக்கம் வலுவாக இல்லாமல் இருக்கிறது.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எதிர்காலத்தில் என்ன மாதிரி விடை கிடைக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

♦♦♦

# பக்தி இயக்கங்களில் ஊடாடும் வைதிக எதிர்ப்பு: க.நெடுஞ்செழியன் ஆய்வுகளை முன்வைத்து...

வே.மு.பொதியவெற்பன்

**நுழை வாயில்**

முரண்நகை யாதெனில் இத்தொடர்பில் பெரியார் இயக்கங்கள் சார் அணுகுமுறையிலிருந்து திராவிட இயக்கச் சார்பாளர் ஆயினும் எம்மனோர் அணுகுமுறை மாறுபட்டதென்பதும்; மறுபக்கத்தில் ஆடுவாரற்று வெறிச்சோடிக் கிடக்கும் பக்தி இலக்கியப் பரந்த வெளியில் காத்திரமான ஆய்வுகளை முன்னெடுத்தோர் பகுத்தறிவியக்கம் (சாமி.சிதம்பரனார்), பெரியார் உள்வட்டத்தினர் (மயிலை சீனி வேங்கடசாமி, சாத்தான்குளம் இராகவன்) மார்க்சிய இயக்கம் (கைலாசபதி, சிவத்தம்பி, திசுந, ந.முத்துமோகன்) சார்பாளர்களே என்பதும் கவனங்கொள்ள வேண்டுவன என்பதேயாகும்.

மெய்யியல் ஆய்வறிஞர் க.நெடுஞ்செழியனார் தம் ஆய்வுகளில் **'சங்ககாலத் தமிழர் சமயம்'** எனும் நூலில்தான் சைவசமய ஆய்வில் அதற்கூடான 'பனிப்போர்' குறித்து வைத்தார். பின்னர் தம் **'பக்தி இயக்கங்களும் வைதிக எதிர்ப்பும்'** (2017) நூலில் இதனை வைணவத்துக்குமாக அகலித்து அஃகி அகன்றதாய் முன்வைத்தார்.

இத்தொடர்பில் தொ.பரமசிவன், தி.சு.நடராசன், ந.முத்துமோகன் ,பொ.வேல்சாமி ஆகியோரும் தத்தம் ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர். பிந்தையதான மா.அரங்கநாதன் வைதிக எதிர்ப்பு விசித்திரமானது.

வைதிகத்தை மட்டுமே எதிர்க்கும் அவர்க்குப் பிராமண எதிர்ப்போ, சங்கத எதிர்ப்போ கிடையாதாமாம். இதைத்தானே பிராமண எதிர்ப்பு இல்லாமல் பார்த்துக்கொள்ளும் குமரி மனோபாவம் என்பார் தமிழவனார்? இத்தகு மனோபாவம் இவ்விருவர்க்கு மட்டுமல்லாமல் ராஜ்கௌதமனார்க்கும் உரித்தானதே.

'இரட்டை நாக்குப் பிறக்கும்' என்னும் கா.சு.பிள்ளை கூற்றே மனத்தில் மின்வெட்டலாயிற்று. இத்தொடர்பில் இதற்குமேற் பேச இதான்று இடம்.

முற்பதமாக பக்தி இயக்கம், தொன்மங்கள் குறித்து எவ்வாறெலாம் அணுக முற்படலாம் என்பது குறித்த பல்வேறு பார்வைகளைத் தொகுத்துக் காண்போமாக:

## எப்படி எதிர்கொள்ளவேண்டும் பக்தி இலக்கியத்தை?

என் மெய்யியல் பண்பாட்டாய்வுப் பயணத்தின் திசைமானியாய் எனை ஆற்றுப்படுத்தியவர் தமிழியல் ஆய்வறிஞர் பேரா.க. நெடுஞ்செழியனாரே. "திறந்த மனதோர் பேறு பெற்றார் என்கிறது பைபிள். என்னதான் நான் திராவிட இயக்கத்துடன் அடையாளப்படுத்திக் கொண்டாலும் என்னுடைய ஆய்வுகள் திறந்த மனத்துடன் செய்யப்பட்டவை".

இவ்வாறு திறந்த மனப்பான்மை என்றவர் பேசிநிற்பது கம்பராமயணம், பக்தி இலக்கியம் குறித்த திராவிட இயக்க அணுகுமுறை பற்றித்தான். அதுபற்றி அப்புறமாய்க் காண்போம். கநெ குறிப்பிடும் இயக்கங் கடந்த 'திறந்தமன ஆய்வின் பாய்ச்சல்' என்பதனையே எம்மனோர் 'பகுத்தறிவின் பயங்கர வாத'த்தினின்றும் விட்டு விடுதலையாகிப் போதரும் அவர்தம் ஆய்வுச் செந்நெறியாம் செல்நெறியாகப் பின்பற்றி அவரவர் போங்கில் முன்னெடுக்கலானோம்.

இதனையே 'புரட்டிப் போட்டாற் போன்ற சிந்தனை வெளிச்சம்' என்னும் குட்டி ரேவதி சங்க இலக்கியம் பற்றிய: நவீன பார்வையை அதன் அழகியலும் அர்த்தங்களும் தமிழ்மரபின் செறிவும் குறையாமல் முன்வைத்த ஒரே எழுத்தாளர் பேரா.க.நெடுஞ்செழியன் எனப் போற்றுவார் 'அந்திமழை நவ. 2022.

(இதுவே க.நெ. உடனான இறுதிச் செவ்வி.அந்திமத்தில் அவர் சொல்லித் தீர முனைந்தவற்றை அவரே தமை நேர்காண வருமாறு கேட்டே எடுக்கப்பட்டதென்பார்.)

'பகுத்தறிவின் பயங்கரவாதம்' எனும் பின்னை நவீனத்துவச் சொல்லாடலைத் தமதறிதல் முறை மாத்திரமே சரியெனும் தத்துவ வழிபாட்டின் தன்னிலை ஆகிநிற்கும் பகுத்தறிவின் வன்முறை எனவாங்கே புரிந்துகொள்ளவேண்டுகின்றேன்.

**"பக்தி இலக்கியத்தை மார்க்சியர்கள் எப்படி எதிர்கொள்ள வேண்டும்?"**

"மார்க்சியர், மார்க்சியர் அல்லாதவர்கள் பார்க்கிறார்கள் என்பது முக்கியமல்ல; மார்க்சியக் கண்ணோட்டம்தான் முக்கியம். மார்க்சியர் கூட மார்க்சியக் கண்ணோட்டம் இல்லாமப் பார்க்க முடியும். எந்த ஒரு விடயத்தையும் நல்லமுறையில் உள்வாங்கிக் கொள்வதுதான் சரி.பக்தி என்கிற ஒரு காலம் தமிழில் இருக்கிறது.நாங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நிராகரிக்க முடியாது. இதைப் புரிந்து கொள்வது மார்க்சியர்களின் அத்தியாவசியத் தேவை."

"தொகுக்கப்பட்ட நூல்களை வைத்துக்கொண்டு நாம் பார்க்கிறோம். தொகுத்தது சோழர் காலத்திலே. பக்தி இயக்கம் என்ற ஒன்று இருந்திருக்கிறது. அந்த இயக்கத்தின் தன்மை என்ன? அது எப்போது தொடங்குகிறது? ஏன் தொடங்குகிறது என்று பார்க்க வேண்டும்."

"பக்தி இயக்கம் என்ன காரணத்தால் பரவுகின்றது என்று பார்க்க வேண்டும். கைலாசபதியின் 'நாடும் நாயன்மார்களும்' என்ற கட்டுரையை இந்த வடிவத்தில் பார்க்கலாம். பக்தி இயக்கம் என்பது தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார அரசியல் வளர்ச்சியோடு சம்பந்தப்பட்ட ஒன்று. இலக்கியம் என்று பார்க்கிறபோது வருகிற பிரச்சினையைப் பார்க்கவில்லை. வைஷ்ணவ இலக்கியப் பாரம்பரியத்தில் உள்ளவர்கள் மத இலக்கியமாகப் பார்த்தது மாத்திரம் அல்ல. அதற்கு அற்புதமான வியாக்கியானங்கள் கூறுகின்றனர். சைவத்தில் இந்தப் பாரம்பரியம் கிடையாது. தேவாரம், திருவாசகம் உரை கிடையாது." கார்த்திகேசு சிவத்தம்பி நியூசெஞ்சுரியின் உங்கள்நூலகம் - மார்ச். 2006

ஏன் இல்லாமல்? உரைப்பாரம்பரியம் சைவத்திலும் காணக்கிடக்கின்றன தாமே?

## 'தீபரவட்டும்' இயக்கமே எதிர்த்தலைக் காரணியாக, சிகேசுவின் பெரியபுராண விரிவுரை

கம்பராமாயணத்திற்கு எதிரான திராவிட இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்ட 'தீ பரவட்டும்' இயக்கத்தின் விளைவாக அதுவேறு சில கலை இலக்கிய, பதிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படவும் எதிர்த்தலைக் காரணியாக அமைந்தது.

"இக்காலப் பகுதியின் (முப்பதுகள்) மற்றொரு நிகழ்வு, கம்பராமாயணத்துக்கு அரசியல் உலகில் எழுந்த எதிர்ப்பும், இலக்கிய உலகில் எழுந்த ஆதரவுமாகும்.

கம்பராமாயணத்துக்குத் திருத்திய பதிப்பு ஒன்று வெளியிட வேண்டும் என்ற முயற்சியினை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தொடங்குவதற்குத் 'தீ பரவட்டும்' இயக்கமே காரணமாக இருந்தது.

வஉசியின் நண்பரான சி.கே.சுப்பிரமணிய முதலியார் பெரியபுராணத்திற்கு விரிந்த உரையுடனும் குறிப்புகளுடனும் ஒரு பதிப்பு வெளியிட முனைந்ததற்கும் எதிர்த்தலைக்காரணியாக நின்றது இந்தஇயக்கமே" தொ.பரமசிவன் ('தமிழாராய்ச்சியின் வளர்ச்சி' நாடற்றோர் பதிப்பகம்)

பு.ரா.புருடோத்தம நாயுடு (அண்ணாமலைப் பல்கலையில் நானவரிடம் பாடங்கற்ற மாணவன்) வைணவ ஈட்டுரைக்கு இணையான நுட்ப மிக்கதே சிகேசுவின் பெரியபுராண விரிவுரை. நான் வாசித்து ஒட்டியும் வெட்டியும் எடுத்தாண்டுள்ளேன். இன்னும் திருமந்திரத்திற்கும், சிவஞானபோதத்துக்கும், திருவாசகத்திற்குமாக இன்றளவும் தொடரும் உரைப்பாரம்பரியத்திற்கும் நிறையப் பங்களிப்புகள் உண்டு. ப.சரவணன் திருவாசக உரை சந்தியா பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ளது.

வைணவத்தைப் பொறுத்த மட்டிலும் பேரா. ம.பெ. சீனிவாசனின் அருங்கொடை அளப்பரியது.

காலச்சுவட்டில் இத்தொடர்பில் முனைவர் அ.மோகனா கட்டுரை கவனங்கொள்ளத் தக்க சிறப்பான கட்டுரையே.

## காதல் வேட்கையைப் பக்தி உணர்வாக மடைமாற்றிய வேட்கையின் அரசியல்

"பக்தி இலக்கியத்தைப் பக்தியாக அணுகாமல் ஒரு இலக்கியப் பிரதியாக அணுகவேண்டும். தமிழுக்கு அதன் கொடை என்பதில் கவனம் அவசியம். அதே நேரத்தில் வேதாந்தத்தைத் தமிழ் அறிவுப்பரப்பிற்குள் ஊன்றிய அதன் சனாதனச் சார்பை கவனத்தில்கொள்ள வேண்டும். பக்தி இயக்கம் தமிழ் உணர்வை சமய உணர்ச்சியாக மாற்றித் தமிழ் உடல்களை சைவ வைணவ உடல்களாக கட்டமைத்த இயக்கம். அன்றைய வாணிப (இன்றைய பனியா போல) வர்க்கத்தின் அரசு அதிகாரத்திற்கு எதிரான உழவர் புரட்சியை சமய அடையாளமிட்டு சைவ வைணவக் கருத்தியலுக்குள் திரட்டிய ஒரு சமயம் சார்ந்த வர்க்கப் போராட்டம். இன்றைய இந்துத்துவா எழுச்சி என்பது நவ வேதாந்தக் கருத்தியலைக் கொண்ட நவபக்தி இயக்கம் என்று ஒப்பிடும் சாத்தியங்கள் உண்டு. "என்னை நன்றாக இறைவன் படைத்தனன்/ தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யு மாறே" என்பதில் இந்த "தன்னை" என்கிற தான் என்பது என்ன? என்பதில் அடங்கியுள்ளது அதன் சமய அரசியல். இந்த தன்னை என்பது லக்கானிய பிக் அதராக (The Other) அதாவது பிறன்மையாகக் கொண்டு மறு வாசிப்பு செய்ய வேண்டும். சமயங்கள் தந்த பக்திப் பரவசம் ஏன் பாசிசமாக மாறுகிறது? என்ற கேள்வி உள்ளது. சங்ககால அகம் என்ற காதல் வேட்கையை சமயக் குரவர்கள் மக்கள் மொழியில் பாடல்களாக்கிப் பக்தி என்ற உணர்வாக மடைமாற்றினர் என்பதாக இதனை வேட்கையின் அரசியலாகவும் வாசிக்கலாம்."

ஜமாலன் (29/12/2024 முகநூற் பின்னூட்டம்)

தமிழின் தொன்மை என்பது அதன் தொடர்ச்சியில்தான் உள்ளதென்பார் கா.சிவத்தம்பி. இத்தொடர்பில்தான் கம்பராமாயணம், திருவாய்மொழி, திருக்கோவையார் மூன்றிற்கூடாகவும் காணக்கிடக்கும் சங்கத்தமிழ் அகத்திணைமரபின் தொடரோட்டத்தை அகழ்ந்தெடுத்தவர் இனங்காட்டும் புள்ளிகள் மனங்கொள்ளத் தக்கனவாம்:

"சிவனியத்தில் மாணிக்கவாசகரும், வைணவத்தில் நம்மாழ்வாரும் வைதிக எதிர்ப்பின் குறியீடுகளாக

அடையாளப்படுத்தப்படுகின்றனர் இருவரும் அகத்திணை மரபைப் போற்றியுள்ளனர். இதனால் தமிழ் அகத்திணை இலக்கியம் என்பது ஓர் இலக்கிய உத்தியாக இல்லை.

மாறாக அஃதோர் மெய்யியல் கோட்பாடு என்பது உறுதியாகிறது. அதனால் பக்தி இயக்கங்கள் வேற்று மொழிப் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட பௌத்த சைன எதிர்பிற்காகத் தோன்றியவை அல்லவென்றும் அவை சாதி வருண பாகுபாட்டைக் குமுக நிலையிலும், சமற்கிருத மேலாண்மை மொழி நிலையிலும், வேத வேள்வி முறைகளைப் பண்பாட்டு நிலையிலும் எதிர்த்துப்போரிட்டவை என்ற புரிதல் ஏற்படுகின்றது."

க.நெடுஞ்செழியன் ('பக்தி இயக்கங்களும் வைதிக எதிர்ப்பும்' (2017)

இது ஆய்வறிஞர் குணாவின் அக × புறச் சமயங்கள் என பௌத்த சமண சமயங்களையும் அவற்றுக்கு எதிரான போரின் தளகர்த்தராக ஞானசம்பந்தரையும் கொண்டாடும் நிலைப்பாடுகளுக்கான அடிப்படையைத் தகர்த்தெறியும் புதுத்திறப்புப் புத்தொளி வீச்சேயாகும்.

## தொன்மங்களை (Myths) எவ்வாறு அணுகுவது?

"புராணங்களிலும் இதிகாசங்களிலும் வெளிப்படுவது ஒரு குறிப்பிட்ட தனிநபரின் சிந்தனை அல்ல; மக்களின் கூட்டுச் சிருஷ்டித்தன்மை ஆகும்"

"புராணமும் இதிகாச இலக்கியமும் ஈடிணையற்ற ஆழ்ந்த அழகுடன் (அந்த அழகுக்கு அடிப்படை உருவத்துக்கும் உள்ளடக்கத்துக்கும் இடையே நிறைவான இசைவு இருப்பதுதான்) விளங்குவதை மனிதக்கூட்டின் பிரமாண்டமான பக்தியைக்கொண்டுதான் விளக்க முடியும்.

கூட்டு மனப்பான்மையின் முழுமைதான் இந்த இசைவை உண்டாக்கித் தந்தது." மாக்சிம் கார்க்கி

"கீழை நாட்டில் இந்துக்களும் பௌத்தரும் வரலாற்றையே புராணங்களாகவும், ஜாதகக் கதைகளாகவும் உருமாற்றினர். அவற்றில் சமயத் தத்துவங்களைக் குடியமர்த்தினர். மேலை நாட்டிலும் இப்படித்தான் நடந்தது. எனவேதான் நீட்சே எழுதினார்:

'உண்மையில் ஏசு சிலுவையில் அறையப்பட்டது, அவரைச் சிலுவையில் அறைந்தவர்களே அவரைத் தெய்வமாக்கிக் கொண்டாடிய போதுதான்.' க.பஞ்சாங்கம் (தொன்மத் திறனாய்வு)

மெய்யாலுமே கேரளத்தில் நடந்த நிகழ்வுகள் என் மனத்தில் பளிச்சிடலாயின:

'ஏசுவிண்டே ஆறாந் திருக்காயம்' என்றொரு நவீன நாடகம் மக்தலேனா இயேசு தொடர்பில் அங்கு நடந்தேறியது. பின்னர் அதன் தொடர்நீட்சியாக இன்னொரு குறு வீதிநாடகமும் அரங்கேறியது.

அதில் இந்த நாடகத்தை எதிர்ப்போர் மத்தியில் ஏசுவே தோன்றி இதில் என்ன தவறு கண்டீர்கள் என அதற்கு ஆதரவாகப் பேசியதும் இயேசு மீண்டும் சிறையில் அறையப்பட்டார்.

சிபிஎம் கட்சி சார்பிலான சிந்தா பதிப்பகம் ஒரு நூலை முன்வெளியீட்டுத் திட்டத்தில் அறிவித்து அதன் மகசூலாய் கணிசமான வசூலில் இலாபத்தைக் கல்லாக்கட்டி அதனை வெளியிட்டது. என்ன நூல் தெரியுமா அது இராமாயணமேதான்.

'நாம் எக்காரணம் கொண்டும் முன்னோர்களினதும், பிற நாட்டவரதும் பிதுரார்ஜிதங்களை அவை நிலப்பிரபுத்துவ அல்லது முதலாளி வர்க்கங்களின் படைப்புக்களாக இருந்த போதும்,கையேற்க மறுக்கவோ அவற்றில் இருந்து கற்கவோ மறக்கவோ கூடாது. ஆனால் பிதுரார்ஜிதங்களை நமதாக்கிக் கொண்டு, அவற்றை உதாரணங்களாக உபயோகிப்பது, ஒருபோதும் நமது சொந்த சிருஷ்டிகர வேலையின் இடத்தை எடுத்துவிடக்கூடாது. முன்னோர்களிடமும் அந்நியர்களிடமும் விமர்சனக் கண்ணோட்டமின்றி எடுத்துவந்து புகுத்துவதும் இலக்கியத்திலும் கலையிலும் மிகவும் படைப்பாக்கமற்றதும் தீங்கானதுமாகும்' என்று எழுதுகிறார் மாவோ. ('பிதுரார்ஜிதம் எனில் மூதாதையர் வழிச்சொத்து. முதுசொம் எனப் பாவிப்பார் பாவாணர்.

முதுசம் என்பது ஈழ வழக்கிலும் காணக்கிடப்பதே' (பொதி)

"புராண இதிகாசக் கதைகள், பழங்கதைகள், கட்டுக்கதைகள், நாட்டுப்புறக் கதைகள் இவைகளை எந்தவித விமர்சனக் கண்ணோட்டமுமின்றி, புதியன படைக்கும் நோக்கமின்றித்

தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் போன்றவை பயன்படுத்துகின்றன;

இன்னொரு பக்கம், இவைகளின் ஆக்கபூர்வமான பங்கை முற்றாக மறுத்துப் புறக்கணிப்பதைத் திராவிட இயக்கங்கள் செய்கின்றன" க.பஞ்சாங்கம் (மேலது) என இருமுனைத் தவறுகளையும் சுட்டிக்காட்டுகின்றார்.

இதேசூழ்ச்சில் திராவிட இயக்கஞ் சார் பாவேந்தரும் கலைஞரும் தம் படைப்புகளூடே எவ்வாறு தொன்மங்களைப் புனரமைத்துக் காத்திரமாகக் கையாள்கின்றனர் என இருவர்க்கும் இடையிலான பொதுவியல்பும் சிறப்பியல்புகளும் புலப்படுமாறு விதந்தோதியே சித்திரிக்கின்றார் பஞ்சு.

கம்பராமாயணம், பக்தி இலக்கியம், பாரதியார் பாடல்கள் ஆகியவற்றை அறவே மறுதலித்து பாரதி இயலையே மறுதலிப்பதான பேரா.மணிகோ. பன்னீர்ச்செல்வம், முல்லை வேனிலன் குறுக்குச்சால்கள் அவற்றை எவ்வாறெலாம் அணுகலாகாதென்பதற்கான 'பகுத்தறிவின் பயங்கரவாத' அணுகுமுறைக்கான முற்காட்டுக்களேயாகும். தொன்மையை அதன் தொடர்ச்சியினின்றும் துண்டித்துப் பக்கவாதமாக நீலம் பாரிப்பனவே அவை எனலாம்.

தெய்வமாக் கவிகளேனுந் மெய்ம்மையைத் திரித்துரைப்போர் 'நய'வஞ்சகரே

"வையம் என்னை இகழவும், மாசு எனக்கு
எய்தவும், இது இயம்புவது யாது எனின்,
பொய் இல் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே." கம்ப நாடன்

"தமிழ்க்காப்புப் போரில் 'ஆசார்ய இருதய'த்திற்கு முன்மாதிரியாக அமைந்தது கம்பரின் 'சடகோபரந்தாதி ' ஆகும். இராமாயணத்தைப் பாடியதற்காககக் கம்பர் கடும் விமர்சனத்திற்கு உள்ளானார். ஆனால் இராமாயணத்தைப் பாடியதற்காகக் கம்பர் வருத்தப்படுவதை அவரின் சடகோபரந்தாதி பதிவு செய்துள்ளது பெரும் வியப்பாகும்" க.நெடுஞ்செழியன்

('பக்தி இயக்கங்களும் வைதிக எதிர்ப்பும்')

## தொன்மத்தைக் காத்திரமாக அணுகலில் வள்ளலார், பாரதி, கா.சு.பிள்ளை பார்வைகள்

"புராணப் பனுவல்கள் ஆராய்ச்சியில் புடைக்கப்படுதல் வேண்டும். மெய்யாராய்ச்சியில் நிலைபெறுவனவே தழுவத்தக்கன. ஏனைய தள்ளத்தக்கன. சரித்திரம் செம்மை பெறுதல் வேண்டும்".

"கவிநயங்களைப் பாராட்டுவதில் குற்றமில்லை.அவற்றை மெய்யென மயங்குதலே தவறாகும்"

(கா.சு.பிள்ளையின் ஆராய்ச்சித்திறன்' க.வை.பழனிச்சாமி)

இது தொன்மங்களை எவ்வாறு உள்வாங்க வேண்டும் என்பது குறித்த கா.சு.பிள்ளையின் துல்லியமான கணிப்பு. மட்டுமல்லாமல் அவருடைய வரலாற்று மெய்ம்மை நாட்டமும் இதற்கூடாகக் காணக்கிடக்கின்றது.

இன்னொரு வகையில் பெரியாரால் நம்பகமான ஆய்வாளராகராகவும்; சைவ சித்தாந்திகளால் தமக்கான 'தொல்லாணை நல்லாசிரியர்' ஆகவும் ஒருசேர ஏற்கப்பட்டவரே கா.சு.பிள்ளை.

"18 புராணங்களை இயற்றி, அக்கதைகளே உண்மை வரலாறு என்று மக்களை நம்ப வைத்தனர் பாரதப் பௌராணிகர்கள். அப்புராணங்களில் அவதாரம் என்ற கதாபாத்திரங்களை உருவாக்கி, அவர்தம் வாயாலேயே, 'நானே நான்கு வர்ணங்களை உருவாக்கினேன்' என்று சொல்லவைத்து மக்களை நம்பவைத்து ஈராயிரம் ஆண்டுகளாக ஏய்த்துவந்த தெய்வ மாக்கவிகளின் முகத்திரையைக் கிழித்துக் காட்டியவர் வள்ளலார்.

'கலை உரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்/ கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக' என்று சாடினார். அதில் இருந்த உண்மையை உணர்ந்த பாரதி எழுதினான், 'உயிர்பெற்ற தமிழன்பாட்டு':

**'கடலினைத் தாவும் குரங்கும்' வெங்**
**கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்**
**வடமலை தாழ்ந்ததனாலேதெற்கில்**
**வந்து சமன் செய்யுங் குட்டை முனியும்**

**நதியினுள் ளேமுழு கிப்போய் அந்த**
**நாகர் உலகிலோர் பாம்பின் மகளை**
**விதியுற வேமணம் செய்த திறல்**
**வீமனும் கற்பனை என்பது காண்டோம்**

**கவிதை மிகநல்ல தேனும்அக்**
**கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்."**

"உண்மையை வலியுறுத்தவே கற்பனையும் கலையும். மாறாக உண்மையை மறைத்துப் பொய்மைக்கு முலாம்பூசி உண்மையெனத் திரித்துக் காட்டுவது மகாகவிகள் ஆயினும் வஞ்சகரே என்பது வால்டேரின், வள்ளலாரின் வாதம்" இரா.குப்புசாமி ('வால்டேர்')

இத்தொடர்பில் இன்னொரு தரப்பும் நோக்கத்தக்கதே; "பாவனா சக்தியால் சுவை விளைவிப்பதே கவிலக்ஷணமாகும் என்னும் திருமணம் செல்வக் கேசவராய முதலியார், "கவி கற்பனை என்பது ஒரு பொருளில் கவியானவன் தன் சாதுரியத்தால் முன்னில்லாத சுவையைப் பிறப்பித்தல். பொய்யும் புனைந்துரையும் கவி கற்பனையன்று. கட்டுக்கட்டாய் மனம் போன போக்கில் உரைப்பதும் கவி கற்பனையன்று" எனத் தொடர்வார்.

('செந்தமிழ்ச்செல்வி' சிலம்பு:27, பரல்:12)

## சைவசமய ஆய்வில் அடிப்படை முரண்பாடு

இந்தியசமயங்கள் சைவநோக்கில் (1) அகம், (2) அகப்புறம், (3) புறம், (4) புறப்புறம் என நான்காகப் பகுக்கப்பட்டுள்ளன.

"அகப்புறச் சமயமாவது பாசுபதம், காளாமுகம், காபாலிகம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் என அறுவகைப்படும்" சி.சு.மணி ('சிவஞான மாபாடியம்' முன்னுரை).

காளாமுகம் எனப்பட்டதே பின்னாளில் பாசுபதம் எனப்பட்டது. வேதியரான திருஞானசம்பந்தர் வேதவழக்கினர். வேளாளரான அப்பர் வேத எதிர்வழக்கினர்.

"ஞானசம்பந்தர் வேதமரபினைப் பின்பற்றியவர் வேதியர். அதனால் வேதமரபுகளைத் தமிழ்மரபுக்குப் புறம்பான வேள்விப்பண்பாட்டைச் சைவத்தில் புகுத்தியவர்.

ஆனால் திருநாவுக்கரசரோ வேதநெறியைக்கண்டித்தவர். வைதிகத்தின் வழியொழுகிய வருணநெறியைப் புறங்கொண்டவர். சைவமய ஆய்வில் இம்முரண்பாடு மிகமிக அடிப்படையானது. பல்வேறு புதிர்களுக்குடனான விடையைக் கொண்டது என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்."

"காபாலிகம் வேதமறுப்புக்கோட்பாடான உலகாய்தத்தோடு ஒருவகையில் உறவுகொண்டது. என்பதால் அதனை நாத்திகச்சமயங்களில் ஒன்றாகவே வேதியர் கருதினர்... அந்தக் குறையைப் போக்கவே சிவவழிபாட்டை வைதிகநெறிக்குள் அடக்கிய முயற்சியே காளாமுகமாக வடிவுகொண்டது". க.நெடுஞ் செழியன் ('சங்ககாலத் தமிழர் சமயம்)

"சைவம் ஆறு உட்பிரிவுகளைக் கொண்டது. அவை கபாலிகம், காளாமுகம், பாசுபதம், மாவிரதம், பைரவம், வாமம் என்பன. இவற்றுள் மிகத் தொன்மையானது கபாலிகமே ஆகும். வேத எதிர்ப்பையும் தந்திரச்சடங்குகளையும் உள்ளடக்கமாகக் கொண்ட இச்சமயப் பிரிவின் மிகத்தொன்மையான சான்றைச் சங்க இலக்கியமாகிய மதுரைக்காஞ்சியில்தான் முதன் முதலாகக் காணமுடிகிறது. கபாலிகம் வைதிக எதிர்ப்பில் உறுதியாக நின்றதால் வைதிகச் சார்பான இலக்கியங்கள் கபாலிகத்தை மிகவும் இழிவுபடுத்தியே பேசியுள்ளன.'

"பாசுபதத்திலிருந்து கிளைத்த காளாமுகப் பிரிவைச் சார்ந்தவரே ஞானசம்பந்தர் என்பதை ஆய்வுகள் உறுதிசெய்துள்ளன. சூத்திரராகிய அப்பர் கபாலிகப் பிரிவைச் சார்ந்தவர் என்பதாலும், காளாமுகப்பிரிவைச் சார்ந்தவர் ஞானசம்பந்தர் என்பதாலும் இருவர்க்கும் இடையே நிலவிய முரண்பாடுகள் படிப்படியாக முற்றத்தொடங்கித் திருமறைக்காட்டில் வேத எதிர்ப்பு வேதச்சார்பு என இரண்டாகப் பிரிந்தன."

## திருக்கடையூரில் திறக்கப்பாடிய அப்பரும், அடைக்கப் பாடிய சம்பந்தரும்..

சைவத்தின் அகப்புறச்சமயங்களான: காளாமுகம்'× கபாலிகம் இவற்றிற்குஇடையிலான உட்பூசலே சம்பந்தர் × அப்பர் இருவர்க்கும் ஊடாக வெளிப்படலாயிற்று.

வைதிகசமயத்திற்கும் × தமிழ்ச்சைவத்திற்கும்; வேள்விப்பண்பாட்டுக்கும் × கோயிற்பண்பாட்டுக்கும் இடையிலான மோதலே அமைந்தியன்றது.

'இருதிறத்துப் பெருந்தவரும் இருந்த நாளில்' சம்பந்தர் அப்பர் இருவர்க்கும் இடையே நிலவிய ஏற்றத்தாழ்வுக்கு ஊடாக வெளிப்பட்ட மோதலைக்காளாமுக × கபாலிக முரண்பாட்டின் வெளிப்பாடுகளாக இனங்கண்டு எடுத்துரைப்பார் எம்பேராசிரியர்:

"வயதில் சிறியவராக இருந்தாலும் திருஞானசம்பந்தர் ஆசிரியர் நிலையிலிருந்து வினாவுவதும்;வயதிலும், கல்வியிலும்,தகுதியிலும் தவநெறிகளிலும் மேம்பட்டு இருந்தாலும் அப்பர் சூத்திர நிலையில் நடத்தப்படுவதும் பெரியபுராணத்தால் அறியப்படும்செய்திகளாகும்."

க. நெடுஞ்செழியன் ('சங்ககாலத் தமிழர் சமயம்')

திருமறைக்காட்டில் அடைத்துக்கிடந்த கோயில் கதவம் அப்பர் திறக்கப் பாடவும், சம்பந்தர் அடைக்கப்பாடவும் நிகழ்ந்த சம்பவ உட்கிடைகளின் தாழ்திறந்தும் இம்மோதலைச் சித்திரிப்பார். காளாமுகத்தின் மேலாண்மையை நிலைநாட்டும் போக்கில் அமைந்ததுதான் அப்பர் பாடிய பத்துப்பாடலுக்கும் திறக்காத கதவு சம்பந்தர் பாடிய ஒரே பாடலில் மூடிக்கொண்டதாகும் என்பதே அவர்நிலைப்பாடாகும். உரிய பாடலையும் அதுபற்றிய. வெவ்வேறு வாசிப்புகளையும் காண்போம்:

**"அரிதில் திறக்கத் தாம்பாட**
**அடைக்க அவர்பாடிய எளிமை**
**கருதி நம்பர் திருவுள்ளம்**
**அறியா திருந்தேன் எனக்கவன்று**
**பெரிதும் அஞ்சித் திருமடத்தின்**
**ஒருபால் அணைந்து பேழ்கணிந்து**
**மருவும் உணர்வில் துயில்கண்டார்**
**வாய்மை திறம்பா வாகீசர்" சேக்கிழார்**

"திருநாவுக்கரசு சுவாமிகள் நெஞ்சில் திருக்கதவு அரிதில் திறந்து கொண்டதையும், எளிதில் அடைந்து கொண்டதையும் ஒட்டி ஒருவித சுழற்சி ஏற்பட்டது. நான்மறைகளும் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டன. அவைகளை வெளியிடும் உரிமைப்பாடு

திருஞான சம்பந்த சுவாமிகளுக்கே உண்டு என் போன்றவர்க்கும் அவருக்கும் உள்ள இடையீடு பெரிது என்று எண்ணி அப்பர் துயிலானார்." திருவிக ('திருத்தொண்டர்புராணம் திருவிக அரும்பத உரை)

"திறக்கத்தாம் பாடிய அருமையும்அடைக்க அவர் பாடிய எளிமையும் கருதி, பதினோரு பாட்டுக்கள் பாடியும் இரக்கமில்லீரே என்று இறைவரை வலிந்து கூறியும் தாம் கதவம் திறப்பித்த செயலை அரிதென்பதும் நாயனார் உட்கொண்ட கருத்து"

"திருவுள்ளம் பற்றாச் செயலிற் துணிந்தமையும், அதனோடு பெருங்ருணையாளராய், அருளையேயன்றி வேறு ழசெய்யாதவராய் நொந்துழகொண்டதையும் தாம் செய்த பிழை என்று கவன்றனர்." சி.கே.சுப்பிரமணிய முதலியார்

('திருத்தொண்டர் புராணம், மூன்றாம்பகுதி உரை)

"இதில் ஏதோ சூது இருக்கவேண்டும் என ஐயுற்ற அப்பர் அந்நிகழ்வினால் பெரிதும் மனம் கலங்கினார்.

திருஞான சம்பந்தரின் சூழ்ச்சியினால் தம் உயிருக்கு எங்கே ஊறுவந்துவிடுமோ என்று அஞ்சியதும், அவ்வச்சத்தின் காரணமாக அந்த மடத்தின் ஒரு மூலையிவ் சென்றுஒருக்கணித்து மருவும் உணர்வால் நொந்து வருந்தியதையும் அப்பாடல் நல்லவண்ணம் பதிவு செய்துள்ளது." க.நெடுஞ்செழியன்.

பொறாமையாலன்று குற்றவுணர்வால்: கவன்று கண்மூடி அறிதுயிலில் அமர்ந்தாரென்பது சிகேசுவின் உரை.

கநெ தவிர மற்றிருவர் முறைகளும்: தம்சமய எல்லைக்குள் நின்றே: சப்பைக்கட்டுக் கட்ட முனையும் உரை விளக்கங்களே.

கநெ வாசிப்பு மட்டுமே கட்டவிழ்க்கும் தலையீட்டுமொழி: (Interruption). காளாமுக × கபாலிக இருமை எதிர்வு முரண்பாட்டுக்கு ஊடாகச் சைவசமய ஆய்வில் ஒரு புதியதிறப்பினை உடைப்பினை ஏற்படுத்தியுள்ளார்.

**(அணியமாகிக் கொண்டிருக்கும் நூலின் தொடக்கத்தில் இருந்து ஒரு பகுதி மட்டும் வெள்ளோட்டாமாக...)**


♦♦♦

# கி.ராவின் 'தாப்பு'

க.பஞ்சாங்கம்

எழுத்தாளர் பூமணி அவர்கள் கி.ராவைக் குறித்துச்சொல்லும்போது "அவரால் ஒரு நொடி கூடச் சும்மா இருக்க முடியாது. குப்பையைக் கிளறிக் கொண்டே இருக்கும் கோழியைப் போன்றவர்" என்று சொன்னதற்கு ஏற்பப் புதுச்சேரிக்குப் புலம்பெயர்ந்து வாழ்ந்த வாழ்விலும் (1998-2021) பலவிதமான செயல்பாடுகளைச் செய்த வண்ணமாகவே இருந்தார்.

புதுடில்லியில் இயங்கும் சாகித்ய அகடமிக்கு வழிகாட்டும் பொதுக்குழு உறுப்பினர்களில் புதுச்சேரி மாநிலத்திற்கு இடமில்லையே என்று புதுச்சேரிக்காரர்களுக்கே தோன்றாத ஒன்று கி.ராவுக்குத் தோன்றியது. தோன்றினால் போதுமா? அதைச் செயல்படுத்திக் காட்ட வேண்டாமா?காரியங்களை நகர்த்தத் தொடங்கினார்.ஒரு காரியத்தை எங்கே தொடங்குவது? எப்படிக் காயை நகர்த்துவது? என்ற நடைமுறைத் தந்திரத்தில் கி.ரா, கை தேர்ந்த நிபுணர். புதுச்சேரியில் உள்ள எந்த எழுத்தாளரிடமும் இது பற்றி மூச்சு விடவில்லை. அப்பொழுது தமிழ்நாட்டின் சார்பாகப் பொதுக்குழு உறுப்பினர்களாகக் கவிஞர் தமிழன்பன் அவர்களும் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சுந்தரமூர்த்தியும் இருந்தனர். அவர்களைப் பிடித்தார். அவர்கள் மூலமாக மார்ச் அல்லது ஏப்ரலில் டெல்லியில் பொதுக்குழு கூடும்போது புதுச்சேரி அரசாங்கத்திற்கென்று ஒரு உறுப்பினர் வேண்டும்




என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தார். நிறைவேற்றிய கையோடு புதுச்சேரி அரசாங்கத்தின் முதல் பொதுக்குழு உறுப்பினராக அவரே தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் சாகித்திய அகடெமியின் பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றினார். (1998 - 2002)

இதேபோல் ஒரு நாள் வானூர்திச் சாலையில் நடந்து செல்லும் நல்லதொரு மாலை வேளையில் "பஞ்சு, நான் பல யோசனைக்குப் பிறகு ஒரு சிற்றிதழ் நடத்த முடிவெடுத்து விட்டேன். .சாகித்திய அகடமி மற்றும் சினிமாக்காரர்கள் கொடுத்த பணத்தை எல்லாம் அப்படியே செலவழிக்காமல் வங்கியில் போட்டு வைத்துள்ளேன். அதற்குக் கிடைக்கும் வட்டிப் பணத்தில் இந்தப் பத்திரிக்கையை விடாமல் கொண்டு வந்து விடலாம் என்று நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் பத்திரிக்கைக்கு ஒரு பெயர் சொன்னால் அடுத்த மாதமே வேலையைத் தொடங்கி விடலாம்" என்று சொன்னார்.நானும் நடைப் பயிற்சி முடிந்து வீட்டிற்கு அருகில் வரும் பொழுது அவரை மனதில் வைத்துக் கொண்டுதான் "கதை சொல்லி" என்று பெயர் வைக்கலாம் என்று சொன்னவுடன் "நல்லா இருக்கு பஞ்சு. அதையே வைத்து விடுவோம்" என்று பத்திரிக்கையையும் தொடங்கி விட்டார்.அவரை ஆசிரியராகவும் என்னையும் பிரஞ்சுப் பேராசிரியர் இரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களையும் ஆலோசகர்களாகப் போட்டு முதல் இதழ் திருவள்ளுவர் ஆண்டு 2028 தைத்திங்களில் - ஜனவரி 1997 -இல் வெளிவந்தது.கூடவே அவருடைய பிறந்த நாளான செப்டம்பர் 16ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் சிறந்த சிறு பத்திரிக்கை ஒன்றைத் தேர்வு செய்து

ரூபாய் 5000 பரிசும் கொடுத்து வந்தார். "கரிசல் கட்டளை விருது, என்பது அதற்குப் பெயர்.கதை சொல்லி குறித்து நிறையப் பேசலாம். இங்கே இந்த இடத்தில் நான் சொல்ல வந்தது பூமணி சொன்னது போலத் தனது இறுதிக் காலம் வரை ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டே இருந்தார் என்பதைத்தான். அப்படி அவர் தொடங்கியதுதான் "தாப்பு" என்ற இந்த அமைப்பும்.

"தாப்பு" என்ற இந்தக் கரிசல் வட்டார வழக்குச் சொல்லிற்கு நீண்ட பயணத்தின் இடையில் பறவைகள் தங்கி இருந்து கிளம்பும் இடம்; காதலர் சொல்லி வைத்து சந்திக்கும் இடம்; வேட்டையாளர் வேட்டைக்காகக் காத்திருக்கும் இடம்;மனிதப் பயணத்தின் இடையே பௌர்ணமி தோறும் நாம் சந்திக்கும் இடம்" என்று இதற்குக் கதை சொல்லியில் விளக்கம் அளித்தார் கி.ரா.

"பௌர்ணமி தோறும் அந்திப் பொழுதில் மாலை ஆறு முப்பதிலிருந்து எட்டு முப்பது வரை ஒத்த உள்ளம் கொண்ட ரசிக மனங்கள் வந்து கூடும் இடம் .புதுவை வானூர்தி சாலை, நாவலர் நெடுஞ்செழியன் பள்ளியில் இந்தக் கூடல். இது இயக்கம் சார்ந்ததோ ஒரு அமைப்போ அல்ல. அதனால் நிறுவனர், நிர்வாகிகள் கிடையா.


**நோக்கம்:**

புதுச்சேரியில் இருக்கும் அறிஞர்கள், படைப்பாளிகள் கலையாளர்கள் போன்ற ரசிக உள்ளங்களை மாதம் ஒரு தடவையாவது சந்திக்க வைக்க வேண்டும் என்பதே.

படித்த நூல்கள், பார்த்த காட்சிகள், கேள்விப்பட்டு மனசில் அழுத்திக் கொண்டிருக்கும் விடயங்கள், நாட்டு நடப்பு - இப்படியான எதைப் பற்றியும் ஒருவரோடு ஒருவர் மனம் திறந்து கலந்து உரையாடலாம்.

திங்கள் தோறும் தொடர்ந்து அவசியம் வர வேண்டும் என்று கட்டாயம் இல்லை. நினைத்தால் வரலாம். நினைத்தவுடன் எழுந்து போய்விடலாம் .எவர் வந்தாலும் வராவிட்டாலும் இந்தப் பௌர்ணமி சந்திப்பு ஒவ்வொரு முழு நிலவு அந்தி தோறும் நடந்து கொண்டே இருக்கும் தொடர்ந்து" என்று முதல் கதை சொல்லியிலேயே ஒரு அறிக்கையும் வெளியானது. முதல்

தாப்புக் கூட்டம் 03.05.1996 அன்று நடந்தது.



அப்பொழுதெல்லாம் நாவலர் நெடுஞ்செழியன் உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச்சுவர் ஏதும் கிடையாது. ஒரு கொடிக் கம்பத்தின் கீழ் நல்ல ஆற்று மணல் சூழ்ந்து கிடக்கும்.பள்ளி மாணவர்கள் விளையாடிக் களித்த அந்த மணலில் மாணவர்களின் கால் தடங்கலும் விழுந்து புரண்ட தடங்களும் அழியாமல் கிடக்கும். அதில்தான் போய் உட்காருவோம்.பெரும்பாலும் வருகிறவர்கள் கி.ரா வின் பேச்சைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம் என்றுதான் வருவார்கள். ஆனால் கி.ரா மேன்மையான தந்திரத்தால் எல்லோரையும் ஏதாவது ஒன்று குறித்துப் பேச வைத்து விடுவார். சில நேரங்களில் கருத்து முரண்பாடுகளும் அதன் விளைவாகச் சூடான விவாதங்களும் ஏற்படத்தான் செய்யும். கி.ரா தலையிட மாட்டார். அமைதியாக இருந்து விடுவார். அவர் அமைதி மற்றவர்களையும் அமைதிப்படுத்தி விடும்.

அந்தக் கூட்டத்திற்குக் கி.ரா எழுத்தின் மேல் உள்ள பிரியத்தினால் கடலூர், விருத்தாசலம் போன்ற தூரத்து ஊர்களில் இருந்து எல்லாம் மாதந்தோறும் நண்பர்கள் வந்து செல்வார்கள். நகரத்திலிருந்தும் மூத்த தமிழறிஞர், இசைக்கலைஞர், தனித்தமிழ் அன்பர் திருமுருகனார் உட்பட அந்த மேட்டில் இருக்கும் பள்ளிக்கு மிதிவண்டியில் வந்து செல்லுகிற காட்சிகளைப் பார்த்திருக்கிறோம்.

கி.ராவுக்கும் அவருக்கும் கதை சொல்லி முதல் இதழ் வந்தபோது காரசாரமான விவாதங்கள் நடந்தன. "நீங்கள் தமிழைக் கொலை செய்கிறீர்கள்" என்று குற்றம் சாட்டியவர் தான் திருமுருகனார். ஆனால் தமிழ்ப் புலவர்கள் பலரிடமும் காணாத இசைப் புலமை மிக்கவர் திருமுருகனார் என்று

அறிந்தவுடன் இசையில் நாட்டம் உள்ள கி.ராவும் அவரும் நண்பர்களாகி விட்டனர். அந்த நட்புதான் மேட்டில் நடக்கும் அந்தத் தாப்பு நிகழ்ச்சிக்கும் அவரை இழுத்து வந்தது என்று சொல்ல வேண்டும்.

இன்னும் தனித்தமிழ் அன்பர் இலெனின் தங்கப்பா ,அவருடைய துணைவியார்,இரு மொழி எழுத்தாளர் நண்பர் ராஜா,திருமாவளவன், சிலம்பு செல்வராசு முதலிய பலரும் வந்து தாப்பு நிகழ்ச்சியைப் பெருமைப்படுத்தினர்.

இவ்வாறு ஏறத்தாழ 10 ஆண்டுகள் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. அந்த நாவலர் நெடுஞ்செழியன் பள்ளிக்கூடத்திற்கு அரசாங்கத்தின் சார்பில் ஒரு காவலர் இருந்தார். அவர் கொஞ்சம் ஒவ்வாமை காட்டினார்.ஆனால் கல்வித்துறையில் செல்வாக்கு மிக்க எனது மாணவ நண்பர் அமிர்தக் கணேசன் மூலமாக அவரையும்கூட்டத்தில் வந்து உட்காரும் அளவிற்கு அமைதிப்படுத்தி விட்டோம்.ஆனாலும் மாலையில் மயக்க மருந்து சாப்பிடும் பழக்கம் உள்ளவர் என்பதனால் "ஒவ்வொரு பௌர்ணமியும் இவங்க வேற வந்து தொல்லை கொடுக்கிறார்கள்" என்ற நினைப்பில் தொடர்ந்து தொல்லை கொடுக்கத் தொடங்கி விட்டார். இதற்கு மேல் இது சரிவராது என்று கி.ரா நினைத்ததால் அத்துடன் தாப்புக்கூடலும் நின்றுபோனது.எங்களுக்கெல்லாம் வருத்தமாகப் போய்விட்டது. கடலூரிலிருந்து விருத்தாசலத்தில் இருந்தும் நண்பர்கள் இரண்டு மூன்று மாதம் விசாரித்துப் பார்த்துவிட்டுப் பிறகு அவர்களும் விசாரிப்பதை நிறுத்திவிட்டார்கள்.ஒரு நல்ல காரியம் 10 ஆண்டு நடந்ததேபெரிது என்று நாங்களும் மனதைத் தேற்றிக் கொண்டோம்.

♦♦♦

கட்டுரையாளர்
பேராசிரியர் / எழுத்தாளர்

# குழப்பத்தில் குடிமக்கள் தேசம்

**க.பழனித்துரை**

“மக்கள் தேசம்” என்ற ஒரு பதிவு செய்யப்படாத அமைப்பு போபாலில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அது சிறிய அமைப்பு, மிகப்பெரிய ஆளுமைகளைக் கொண்ட அமைப்பு. இவர்களுக்கு எல்லாவற்றையும்விட நாடும், மக்களும்தான் பெரிது. நாட்டில் நடைபெறும் வன்முறை அரசியலும், மலிந்துவிட்ட ஊழலும், பொறுப்பற்ற நிர்வாகமும், செயலற்ற குடிமைச் சமூகங்களும் இந்த நாட்டின் சாபக்கேடுகளாக இருக்கின்றன என்பது இவர்களது கருத்து. இந்தச் சூழலில் தீங்கு விளைவிக்கும் தீயவர்களைவிட அவற்றைச் சகித்துக் கொள்ளும் நல்லவர்களும் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பதைச் சகிக்க முடியவில்லை, எனவே நாட்டுக்குச் வழிகாட்ட நற்சிந்தனை கொண்டோர் ஒருங்கிணைந்து கட்சிகளைக் கடந்து, மதங்களைக் கடந்து, பிராந்தியங்களைக் கடந்து, மொழி கலாச்சாரப் பிரிவினைகளைக் கடந்து நாட்டின் ஒற்றுமைக்காகக் குரல் கொடுக்க வேண்டும், மக்களாட்சியைக் காக்க எந்த தியாகத்திற்கும் தயாராக வேண்டும், அந்தக் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பதுதான் இவர்களின் நோக்கமாக இருக்கிறது. அதன் மூலம் இந்த நாட்டில் அமைதியும் நேர்மையும் தர்மமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற நோக்கில்தான் இவர்கள் இணைந்து பயணிக்கின்றனர். அந்தச் சிறிய அமைப்பை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல

அதன் அடிப்படை முக்கிய பொறுப்பாளர்கள் அங்கு கூடினர். அவர்களுக்கு நான் ஆங்கிலத்தில் எழுதிய அரசியல் கட்டுரைகள் அவர்களுடைய சிந்தனைகளுக்கு மிகவும் நெருக்கமாக இருந்த காரணத்தால், நான் முன்வைக்கும் புது அரசியல் பற்றி விளக்க என்னை அழைத்திருந்தனர். அரசியல் என்பது அரசியல் கட்சிகள் செய்வது மட்டுமல்ல. கட்சிகளைத் தாண்டிய ஓர் அரசியல் இருக்கிறது, அது மேம்பாட்டு அரசியல், மக்கள் அரசியல். அதைப்பற்றி யாரும் மக்களிடம் விவாதிப்பது இல்லை. அரசியல் கட்சிகளும் அப்படிப் புதுமைகளை நோக்கி அரசியலை எடுத்துச் செல்ல முயலவில்லை. ஆகையால்தான் அரசியல் கட்சிகள் தேர்தலை முன் வைத்து வாக்கு அரசியல் செய்கின்றன. இந்தப் புதிய அரசியல், அதிகாரத்தை நோக்கிப் பயணிக்காது. இது மக்களை ஒருங்கிணைக்கும் மக்களை அதிகாரப்படுத்தும், மக்களை அரசுடன் இணைய வைக்கும் ஓர் அரசியல், இந்த மக்கள் அரசியல் இன்றைய அரசியல் கட்சிகளின் அரசியலை சீர் செய்யும் என்று தொடர்ந்து எழுதி வருவதை ஒரு மணி நேரத்தில் அவர்களுடன் பகிர்ந்து கொண்டேன். என் உரையைக் கேட்டவுடன் அவர்கள் “எங்களுக்கு இன்றைய அரசியல் ஒருவித சலிப்பையும், வெறுப்பையும் தான் தொடர்ந்து உருவாக்கி இருக்கிறது. ஆனால் கடந்த ஒரு மணி நேரமும் இந்தக் கட்சி அரசியலைப் பேசாமல் மக்களிடம் சென்று நாம் அமைதியாக நேர்மறையாகச் செய்ய வேண்டிய பணிகளை வாய்ப்பாகக் குறிப்பிட்டது மிகப் பெரிய ஒளி வெள்ளம் செயலுக்கு கிடைத்ததுபோல் உணர்கிறோம்” எனக் கூறினர். இதுவரை நாங்களும் ஒரு வகைக் கட்சிகள்போல் அரசியல்வாதிகளை திட்டுவதில்தான் இருந்துள்ளோம். இன்று அரசியலுக்கு ஒரு புது விளக்கம் கிடைத்துள்ளது அது எங்களுக்கு பெரும் வாய்ப்பாக இருக்கிறது பணி செய்ய” என்று கூறினர்.

இந்திய அரசியலை விரல் நுனியில் அங்கு வந்திருந்த அனைவரும் வைத்திருந்ததை உணர முடிந்தது. காரணம் அதில் சிலர் மிகப் பெரும் பொறுப்புக்களில் இருந்து வந்தவர்கள் என்பதால். இந்தியாவை சுமார் 5000 அரசியல் குடும்பங்களும் 4865 சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏறத்தாழ 3900 இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளும்தான் மேய்க்கின்றனர் என்பதைத் தெளிவுபடுத்தினர். நாடாளுமன்றத்திலும்

சட்டமன்றத்திலும் ஒரு காலத்தில் 80% தலைசிறந்த அறிவுஜீவிகள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், வழக்கறிஞர்கள் இருந்தனர். இன்று 80% சந்தையைச் சார்ந்த, வணிகம் சார்ந்தவர்கள் இருப்பதுதான் இன்றைய ஒட்டுமொத்த அரசியலை சந்தைப்பக்கம் திருப்பி வைத்திருக்கிறது என்பதைப் படம்பிடித்துக் காட்டினர். கடந்த முப்பது ஆண்டுகளில் சாதாரணமாகக் கட்சிகள் வழியாக நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் வந்தவர்கள் மிகப்பெரும் தொழில் அதிபர்களாகப் பட்டியலையும் விளக்கினர். அதேபோல் ஏறக்குறைய 55% சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மோசமான குற்றப் பின்னணி கொண்டவர்களாக இருப்பது இந்திய அரசியலையே குற்றப் பின்னணி கொண்டதாக மாற்றிவிட்டது என்பதையும் விவாதித்தனர். இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத்தை மக்களுக்காக உபயோகப்படுத்தியதைவிட துஷ்பிரயோகம் செய்ததுதான் அதிகம் என்பதையும் எடுத்து வைத்து விவாதித்தனர். அங்கு வந்தவர்களில் பலர் அரசியல் கட்சிகள் நியாயத்திற்கும் உண்மைக்கும் கட்டுப்பட்டவர்கள் என எண்ணி அவர்களுடன் பயணித்து அது எவ்வளவு பாவச் செயல் என உணர்ந்து வெளிவந்தவர்களாக இருந்தனர். இந்தியாவில் நடைபெறுவது போலத்தான் உலகத்திலும் மக்களாட்சியை துஷ்பிரயோகம் செய்யும் நடவடிக்கைகள் நடந்து வருவதையும் அவர்கள் உரையாடலில் மையப்படுத்தினர். ஒரு காலத்தில் அரசியல் கட்சிகள் அறிவு ஜீவிகள், பொதுக் கருத்தாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தனர். குடிமைச் சமூக அமைப்புக்களின் கருத்துக்களுக்கு மதிப்பு அளித்தன. இன்று அறிவு ஜீவிகளின் கருத்தை அவர்கள் கேட்பதற்குத் தயாராக இல்லை என்பதை தங்கள் அனுபவத்திலிருந்து எடுத்து விளக்கினர். அரசியல் கட்சிகள் பேசுவதற்கும் நடந்து கொள்வதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதையும் விளக்கினர். பெரும்பாலான கட்சிகள் தேர்தலின்போது கூறும் அனைத்து உத்தரவாதங்களையும் எந்தவித கூச்சமும் இன்றி மறந்து விடுகின்றனர். மகாத்மா காந்தி உண்மையை சத்தியமாக்கி அதைக் கடவுளாக்கினார். நம் கட்சிகள் பொய்யுரைத்தலையே தொழிலாகக் கொண்டுள்ளது என்பதையும் தங்கள் அனுபவப் பகிர்வுகளில் விளக்கினர்.

எப்படியாவது நம் மக்களாட்சியைப் பாதுகாக்க நாம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நாம் விவாதிக்க வேண்டும். அப்படி விவாதிக்கும்போது நம் அரசியல் கட்சிகளைக் கடந்து, அதாவது கட்சி அரசியலைக் கடந்து நாம் விவாதிக்க வேண்டும் என்று விவாதித்தனர். இந்திய மக்களாட்சி ஒற்றைப் புள்ளியில்தான் சுழல்கின்றது. அதுதான் தேர்தல். அந்த ஒற்றை அடிப்படைக் கூறையும் சிதைவுற்ற நிலையில் நடத்துவது என்பதுதான் நம் மக்களாட்சியில் நாம் பார்க்கும் வடு. தொடங்கிய இடத்திலேயே அது ஊனத்துடன் நகர முடியாமல் இருப்பது என்பதுதான் மக்களாட்சி புரிந்தவர்களுக்கு வேதனையளிக்கிறது. சந்தைப் பணத்தில் வாக்குகளை விலை கொடுத்துப் பெற்ற வெற்றி என்பது விலை மாதிடம் அனுபவித்த இன்பத்திற்குச் சமமாக உள்ளது எனப் பலர் பொது வெளியில் விவாதித்த பிறகும் அது தொடர்வது எந்த வகையில் நியாயம். அதைத் தொடர விட்டுவிட்டு நாம் நல்லவர்கள் என்று நம்மை எப்படிக் கூறிக்கொள்ள முடியும் என்ற கருத்தையும் முன் வைத்தனர். இந்த முறைமையைப் பயன்படுத்தி பதவிகளுக்கு வந்ததால் ஒன்று அவர்களுக்கு மக்கள்மேல் நம்பிக்கை இழப்பு ஏற்பட்டுவிட்டது. அடுத்து அவர்களின் மேலேயே அவர்களுக்கு நம்பிக்கை குறைய ஆரம்பித்து விட்டது. மக்கள் தலைவராக வலம்வர வேண்டியவர்கள் சந்தைத் தரகராகச் செயல்படுவது ஒரு மக்களாட்சியின் விந்தை. வாக்குகளை வாங்குவதும் விற்பதும் ஒட்டுமொத்த மக்களாட்சியை மாசுபடுத்துவதும் தியாகம் செய்து வாங்கிய விடுதலையைக் கேலிக்கூத்தாக்கும் அரசியலை நாம் ஏற்றுக் கொண்டு குடிமக்களாக வாழ்வது எவ்வளவு கேவலமானது என்பதை விளக்கினர். நம் நாட்டில் நடக்கும் தேர்தல் மிகவும் சிக்கலானதாக அரசியல் கட்சிகளே புரிந்து கொள்ளமுடியாத நிலையில் வைத்திருப்பது மற்றொரு மக்களாட்சியின் சோகம் என்பதை விளக்கினர்.

நம் நாட்டில் உள்ள கல்வித் திட்டத்தில் எந்த இடத்திலும் மக்களாட்சிக்கான கல்வியோ குடிமக்கள் தங்கள் பொறுப்புக்களை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதற்கான குடிமைப் பயிற்சியோ இல்லாமல் இருப்பது அடுத்த பெரும் சகிக்க இயலாப் பெரும் கேடு என்பதையும் படம்பிடித்துக் காண்பித்தனர். நம் கல்வி என்பது அறமற்று வாழ்வாதாரம்

பாதுகாத்து பணம் சம்பாதிக்கவும், சொகுசு வாழ்க்கை வாழவும் அரசாங்கத்திற்கும் தொழில்சாலைகளுக்கும், சந்தைக்கும், அரசியல் கட்சிகளுக்கும் ஊழியர்களைத் தயார் செய்கிறதேயன்றி நாட்டுக்கும் சமூகத்திற்கும் தேவையான குடிமக்களாக நாட்டுப்பற்றுடன் சமூகக் கண்ணோட்டத்துடன் செயல்படக்கூடிய மனிதர்களை உருவாக்குவதாக இல்லை என்பது ஒரு பெரும் சோக நிகழ்வு என்பதை விளக்கினர். இன்று எங்கு நோக்கிலும் எதிலும் சுயநலம்.

தேர்தலில் வெற்றிபெறத் தெரிந்த அரசியல்வாதிகளுக்கு மக்களின் மேம்பாட்டைக் கொண்டுவரத் தெரியவில்லை என்பதும் நாம் பார்க்கும் ஓர் அவலம். இந்தச் சூழலில் இன்று நாம் என்ன செய்வது என்பதுதான் கேள்வி. சமூகத்தையும் சந்தையையும் நெறிப்படுத்த வேண்டிய அரசாங்கம் சந்தையின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. மக்களிடம் வாக்குகளைப் பெற்று அதிகாரத்திற்குச் சென்ற அரசியல்வாதிகள் மக்களுக்கு முதுகையும் சந்தைக்கு முகத்தையும் காண்பிப்பதைத் தொழிலாக்கிக் கொண்டு விட்டனர். மக்கள் நிறுவனங்களான அரசுத்துறை நிறுவனங்கள் கம்பீரமாக உருவாக்கப்பட்டன. அவைகள் இன்று சுயநலக்காரர்களின் பிடியில் இருந்து செயல்பட்டு சிதிலமடைந்துவிட்டன. இது தனியாரைச் செழிப்படையச் செய்துவிட்டன. அரசாங்கமே தன் நிறுவனங்களை அழிப்பதுதான் சோகத்தின் சோகம் என்பதை விளக்கினர்.

இந்தச் சூழலில் தீர்வை எங்கே தேடுவது. புதிய சட்டத்திலா, புதிய கொள்கையிலா, புதிய தொழில்நுட்பத்திலா, புதிய திட்டத்திலா என்றுதான் அனைவரும் தேடுதலில் இருக்கின்றனர். இவை அனைத்திலும் தீர்வைத் தேடி நடைமுறையும் படுத்திப் பார்த்துத் தோல்வியுற்றுத்தான் இன்று நாம் இருக்கிறோம். இதற்கு ஒரே தீர்வு மக்களிடம்தான் இருக்கிறது. நாம் பெற்ற விடுதலையை நாம் கடைப்பிடிக்கும் மக்களாட்சியை முறையாகப் பயன்படுத்த நம் மக்களிடம் விழிப்புணர்வு இருந்திருந்தால் உலகத்திற்கு வழிகாட்டும் நாடாக நாம்தான் இருந்திருப்போம். நமக்கு வழிகாட்ட நாம் ஓர் அரசமைப்புச் சாசனத்தை உருவாக்கினோம். அதுதான் நம் மக்களுக்கு நம் அரசாங்கத்திற்கு வழிகாட்டும் சாசனம். ஆனால் அந்தச் சாசனத்தை இன்றுவரை மக்களிடம்

நாம் எடுத்துச் சென்று, இதில்தான் நம் அனைவருக்குமான பாதுகாப்பு இருக்கிறது என்று விளக்கி அவர்கள் கையில் அந்தச் சாசனத்தைத் தரவில்லை. அடுத்து ஒரு மக்களாட்சி நாட்டில் மக்கள் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்ளத் தேவையான குடிமக்களுக்கான கல்வியைத் தந்து தரமான குடிமக்களை நாம் உருவாக்கவில்லை, சுதந்திரற்காகப் போராடிய நமக்கு மக்களாட்சி என்பது கொடையாகக் கிடைத்தது. ஆனால் கொடையாகக் கிடைத்த மக்களாட்சியை முறையாகப் படுத்தத் தேவையான கல்வியை நம் மக்களுக்குத் தரவில்லை. அதன் விளைவுதான் சந்தைப்படுத்தப்பட்ட வாக்கு, அரசியல் அறியாமை என்பது நம் மக்களாட்சி என்ற அற்புதமான ஆயுதத்தை முறையற்றுப் பயன்படுத்தினோம். அதன் விளைவை நாம் இன்று அனுபவிக்கின்றோம்.

ஒரு நாடு மேம்படுவதற்கு அரசாங்கமும் அரசாங்கத்தின் திட்டங்களும் மட்டுமே போதாது. மக்களின் பங்கேற்பு என்பது அத்தியாவசியமானது. அரசாங்கம் உருவாக்கும் கொள்கையை, திட்டத்தை, சட்டத்தை நிறைவேற்ற மக்களின் பங்கேற்பு இன்றியமையாதது. அந்தப் பங்கேற்பு என்பது வீதியில் நின்று ஒலி எழுப்பும் பங்கேற்பு அல்ல. அரசு அறிவித்ததை சிந்தாமல் சிதறாமல் அப்படியே அந்தப் பயன்களை யாருக்குக் கொண்டு சேர்க்க வேண்டுமோ அப்படி கொண்டு சேர்க்க வேண்டும். அரசு கொண்டு வரும் திட்டம், கொள்கை, நிதி ஒதுக்கீடு அனைத்தும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவைகள் யார் மூலமாக எப்போது எப்படி யாருக்குச் சென்று சேரவேண்டும் என்பதை அறிந்து கொண்டு அவைகள் வந்து சேரவில்லை என்றால் அவைகளை முறையாகப் பெறுவதற்கான புரிதலுடன் செயல்பட்டால் பொதுமக்களுக்கு வரும் பயன்களை நம் கட்சிக்காரர்களும் அரசின் அதிகாரிகளும் அவைகளில் கை வைக்க முடியாது. இவைகளை எல்லாம் மக்களுக்கு எடுத்துச் செல்வதற்கு ஒவ்வொரு ஊரிலும் வழிகாட்டும் தலைமையை உருவாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். அந்த வழிகாட்டும் மனிதர் ஒரு குழுவில் இருந்து இயங்க வேண்டும். அப்படிப்பட்டவரைத்தான் நமக்கான தலைவராக மக்கள் உள்ளாட்சியில் தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

விவரம் அறியா தற்குறிகளை நம் சாதி என்றும், நம் ஊர் என்றும், நம் உறவினர் என்றும் தேர்ந்தெடுத்தால் உங்களுக்கு வரவேண்டியதை யாரோ எங்கோ துண்டு போட்டுவிடுவார்கள்.

நீங்கள் தேர்ந்தெடுத்த தற்குறித் தலைவர் அந்த நிதி எங்கிருக்கிறது என்பது தெரியாமல் விபரமற்று செயல்பட்டு அதிகாரம் இல்லை, நிதி இல்லை என்று புலம்புவார். அவரால் புலம்பலைத் தவிர வேறு ஏதும் செய்ய இயலாது. எனவே மக்களுக்கு வழிகாட்டும் தலைமை உருவாகி அந்தத் தலைமையை ஒரு கூட்டுத் தலைமையாக்கி அந்தக் கூட்டுத் தலைமை ஆங்காங்கே பொறுப்பெடுத்துச் செயல்பட்டால் அதுதான் நல்லாட்சியாக மலரும்.

நம் தேர்தலில் இருக்கும் சிக்கல்களிலேயே மிக முக்கியமானது வாக்கை சந்தைப்படுத்துவது. அதைத் தடுத்தாக வேண்டும். அடுத்து தேர்தல் சீர்திருத்தம் கொண்டுவர உரத்த குரலில் தேசம் முழுவதும் பொதுக் கருத்தாளர்கள் விவாதிக்க வேண்டும். அரசியல் கட்சிகளை அரசமைப்புச் சாசனத்திற்குள் கொண்டு வந்து கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டும். அடுத்து அரசில் சீர்திருத்தமும், அரசியல் கட்சிகளில் சீர்திருத்தமும் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதற்கு இன்றைய தேவை, பொதுக்கருத்தாளர்கள் கட்சிகளைக் கடந்து ஒன்றுபட்டு நாட்டையும் மக்களையும் மக்களாட்சியையும் காத்திடக் கட்சிகளுக்கு அப்பாற்பட்டுச் செயல்பட வேண்டும் என்ற வாதத்தை முன்வைத்து நிறைவு செய்தனர் அந்த இரண்டு நாள் உரையாடலை.

♦♦♦

கட்டுரையாளர்
பேராசிரியர் / எழுத்தாளர்

# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் – தோற்றப் பின்னணியும் சாதனைகளும்

**ப.பா.ரமணி**

1925இல் தொடங்கப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி தனது நூற்றாண்டைக் கண்டுள்ளது. நாட்டின் விடுதலைக்கும், உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் எண்ணிலடங்கா போராட்டங்களை நடத்தி அளப்பரிய தியாகங்களைச் செய்துள்ளது இடதுசாரி இயக்கம். அதற்கான வர்க்க அமைப்புகளைக் கட்டி வளர்ப்பதிலும் நாட்டின் முன்னோடி இயக்கமாக இருந்துள்ளது. அதுபோல தனது இலட்சியத்தை மக்களிடையே கொண்டு செல்லக் கூடிய கலை இலக்கிய அமைப்புகளையும் உரிய சூழலில் உருவாக்கியது. அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இந்திய மக்கள் நாடக மன்றம் ஆகியவை முறையே 1936, 1943 ஆண்டுகளில் தொடங்கப்பட்டன. அவற்றின் பங்களிப்புகள் தனியே விரிவாகப் பார்க்க வேண்டியவை.

தமிழ்நாட்டின் பொதுவுடைமை இயக்கத்தின் கலை இலக்கிய அமைப்பு அதன் அரசியல் பயணத்துடன் இணைந்தே தொடங்கப்படாமல் 1961 இல் தான் தொடக்கம் பெற்றது. நாட்டு விடுதலைப் போராட்டத்தில் தலைமை வகித்த தேசிய இயக்கமும் இதில் கவனம் செலுத்தவில்லை. மகாகவி பாரதியின் பாடல்கள் மக்களின் விடுதலையுணர்ச்சியைத் தூண்டியதும், தமிழுக்குப் புத்தொளி பாய்ச்சியதும் தமிழ்நாட்டின் பேறு எனலாம். அவரைத் தனது குருவாகக் வரித்துக் கொண்ட பாவேந்தர் பாரதிதாசன் தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனை, மொழியுணர்வு சார்ந்து வீரியமிக்க கவிதைகளைப் படைத்துத் திராவிட இயக்கத்திற்கு உரம் சேர்த்தார்.

தமிழ்நாட்டில் பொதுவுடைமைச் சிந்தனையை அறிமுகப்படுத்திவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர். அந்த இலட்சியத்தைக் கலை இலக்கிய வடிவங்களில் மக்களிடையே கொண்டு செல்லும் இயக்கப்பணியை முன்னெடுத்தவர், இலக்கியப் பேராசான் என்று போற்றப்பட்ட **தோழர் ப.ஜீவானந்தம்** என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. 1938ஆம் ஆண்டிலேயே பாரதி விழாக்களை தமிழ்நாடெங்கும் நடத்த ஜீவா வேண்டுகோள் விடுத்தார். தொழிலாளர்களின் வறிய நிலையை உருக்கமாகப் படம் பிடித்த ஜீவாவின்

**"காலுக்குச் செருப்புமில்லை**
**கால் வயிற்றுக் கூழுமில்லை"**

என்ற பாடல் மக்களை ஈர்த்தது. பகுத்தறிவுக் கருத்துக்களை உள்ளடக்கிய பாடல்களையும் ஜீவா எழுதினார்.

உழைக்கும் மக்களின் பாடுகளைப் பதிவு செய்யும் இலக்கிய இதழ்களும் தோன்றின. தமிழ்ஒளியின் "முன்னணி, வ.விஜயபாஸ்கரனின்" விடிவெள்ளி", தொ.மு.சி.யின் "சாந்தி", இசமத் பாஷாவின் "சமரன்" ஜீவா தொடங்கிய "தாமரை" ஆகியவை மனிதநேயக் கலை இலக்கிய விழிப்புணர்வைத் தூண்டும் பணியை ஆற்றின.

ஜீவாவைப் போல, ஈரோடு வெ.நா.திருமூர்த்தி, மதுரை மணவாளன், எம்.பி.சீனிவாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாவலர் வரதராஜன், வில்லிசை வேந்தர் பிச்சைக்குட்டி, எஸ்.எம்.கார்கி, தர்மபுரி டேப் சடையப்பன், மதுரை குமார், சேலம் சிதம்பரபாரதி போன்ற இசைக் கலைஞர்களும், ஊர்கள் தோறும் இயங்கிய மேடை நாடகக் குழுக்களும் மக்கள் பிரச்சினைகளைக் கலை வடிவங்களில் வெளிப்படுத்துவதில் பங்களிப்பு செய்துள்ளனர்.

1947 இல் கே.பாலதண்டாயுதம், தொ.மு.சி.ரகுநாதன், தி.க.சிவசங்கரன் ஆகியோர் நெல்லையில் கலைஞர் கழகம் என்ற அமைப்பைத் தொடங்கி சில ஆண்டுகள் நடத்தினர். 1948 இல் அ.இ.மு.எ.சங்கத்தின் கிளையொன்று எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன் தலைமையில் தொடங்கப்பட்டது. 1950 இல் கல்கி கிருஷ்ணமூர்த்தி வை.கோவிந்தன், பி.கோதண்டராமன்,

தொ.மு.சி.ரகுநாதன், நடிகர் டி.கே.சண்முகம் ஆகியோர் முயற்சியில் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒன்று சென்னையில் தொடங்கப்பட்டது. அதே காலகட்டத்தில் தமிழ்நாட்டின் பல மாவட்ட மையங்களில் தமிழ்ச் சங்கங்கள் தொடங்கப்பட்டன.

1949 நவம்பரில் அ.இ.மு.எ. சங்கத்தின் தமிழ்நாடு கிளை மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, அதன் செயலாளராகக் கவிஞர் தமிழ்ஒளி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1952 இல், தொ.மு.சி. தி.க.சி. சிந்துபூந்துறை சண்முகம், நா.வானமாமலை ஆகியோரின் முயற்சியால் நெல்லையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கக் கிளை தொடங்கப்பட்டது. 1954 காரைக்குடி கம்பன் விழாவில் ஜீவா, எஸ்.ராமகிருஷ்ணன் கலந்து கொண்டு கம்பராமாயணத்தைப் புதிய கோணத்தில் விளக்கிப் பேசினர்.

அமைப்பு ரீதியான இத்தகைய கலை இலக்கியப் பின்புலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் மாநிலத் தலைமையுடன் கலை இலக்கியத்திற்கென தனியானதொரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டிய கருத்தை ஜீவா தொடர்ந்து வலியுறுத்திப் போராடி வந்தார். 1958 இல் புதுக்கோட்டையில் நடைபெற்ற பாரதி விழாத் தருணத்தில் பெருமன்ற அமைப்பை உருவாக்கும் கருதுகோள் உருப்பெற்றது.1958 ஆகஸ்டில் கட்சியின் மாநிலத் தலைமை கலை இலக்கியத்திற்காக ஒரு துணைக்குழுவை அமைக்க முடிவு செய்தது.

ஜீவாவின் தலைமையில், முகவை ராஜமாணிக்கம், ஆர்.கே.கண்ணன், எம்.பி.சீனிவாசன், புதுவை டாக்டர் ரங்கநாதன், கே.முத்தையா, வி.ராதாகிருஷ்ணன், மாயாண்டி பாரதி, கே.ராமநாதன், மாஜினி உள்ளிட்ட 23 பேரடங்கிய துணைக்குழு அமைக்கப்பட்டது.

மாநில மாநாட்டை நடத்ததுவதற்கான திட்டமிடல் கூட்டம் 1959 ஜூன் 1 இல் காரைக்குடி அசோக் லாட்ஜில் நடந்தது. புதுக்கோட்டை சேதுராமன் கூட்ட ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டார். விவாதங்களின் இறுதியில் மாநில மாநாட்டை நடத்த கோவை தான் பொருத்தமான இடம் என்ற ஜீவாவின் கருத்து ஏற்கப்பட்டு 1961 மே மாத கடைசியில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

கோவையில் இலக்கியவாதிகள் கூடுவது புதியதல்ல. கொங்கு வட்டார மக்களின் வாழ்வியலை அழகாகத் தனது நாவல்களில் பதிவு செய்த எழுத்தாளர் ஆர்.சண்முகசுந்தரம் போன்றோரின் முயற்சியால் 1944லேயே கோவையில் ஒரு தமிழ் எழுத்தாளர் மாநாடு நடந்துள்ளது. 1959 ஆகஸ்டில், இடதுசாரி சார்பு கொண்ட திரைக் கலைஞர்களான டி.கே.பாலச்சந்திரன், எம்.என்.கண்ணப்பா இருவருக்கும் கோவையில் ஒரு பாராட்டு விழா நடத்தப்பட்டது. விழாவில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கலந்து கொண்டார். கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம், எம்.பூபதி, காஞ்சி நடராஜன், ஆர்.கே.பாண்டுரங்கன் ஆகியோர் முன்னின்னறு நடத்தினர்.

"ஜனசக்தி"இதழில் மாநாட்டிற்கான அறிவிப்பை வெளியிட்டு விட்டு, ஆர்.கே.கண்ணனுடன் ஜீவா முன்னதாகவே கோவைக்கு வந்து மாநாட்டு நிதி வசூல் மற்றும் இதர வேலைகளைத் தொடங்கி விட்டார். புலவர் த.வே.வீராசாமி, மு.பழனியப்பன், புலவர் இராசியண்ணன் (ஆதி) ஆர்.கே.பாண்டுரங்கன், தொழிற்சங்கத் தலைவர் பி.கே.ராமசாமி, செந்தமிழ் மாரியப்பன், சூ.ர.தங்கவேலு, சூ.மீ.காளிமுத்து, க.பழனிசாமி, சினி ஆர்ட்ஸ் வேலாயுதம், அம்பி எனும் ரங்கசாமி, ஓவியர் மீனன் போன்றோரின் ஆதரவுடன் மாநாட்டு வேலைகளை நிறைவேற்றினார், ஜீவா.

தொ.மு.சி. ஆர்.கே.கண்ணன், நா.வானமாமலை ஆகியோரின் கருத்துக்களை உள்வாங்கிப் பேராசான் ஜீவா மனிதநேயம், தமிழ்ச் சமூகப் பின்புலம் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்ட சுயமான கொள்கை அறிக்கையை உருவாக்கியிருந்தார். எதிர்காலச் செயல்பாடுகளுக்கு மாநாடு பல குழுக்களை உருவாக்கியது. இலக்கியம், நாடகம், இசை, ஓவியம், நாட்டுப்புற இலக்கியம் எனத் தனித் தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

மார்க்சியப் பார்வையுடன் நாட்டுப்புற இலக்கியத்தை முன்னெடுத்த பேரா.நா.வானமாமலை, படைப்பு மற்றும் விமர்சனக்கலையில் கோலோச்சிய தொ.மு.சி. சிறுகதை, நாவல்கள், என தமிழ் இலக்கிய உலகில் புகழடைந்த ஜெயகாந்தன், சேர்ந்திசையைப் பயன்டுத்தி பன்முகப் பண்பாட்டைப் பரப்பிய இசைமேதை எம்.பி.சீனிவாசன், இன்னும் ஆற்றல்



மிக்க எழுத்தாளர்களும், கலைஞர்களும் பங்கெடுத்த அற்புதத்தைக் கோவை மாநாடு சாதித்தது. கம்யூனிஸ்டுகளுக்கும் கலை இலக்கியத்திற்கும் சம்பந்தமில்லை என்ற கிண்டல் பேச்சுகளுக்குக் கோவை நிறுவன மாநாடு முற்றுப்புள்ளி வைத்தது. ஜீவாவைத் தலைவராகவும் தா.பாண்டியனைச் செயலாளராகவும் தேர்ந்தெடுத்த மாநாடு பெருமன்றத்தின் சாதனைப் பயணத்தைத் தொடங்கியது.

தமிழகமெங்கும் மாவட்ட, தாலூகா அளவில் கிளைகள் உருவாகின. பாரதி விழாக்கள், குன்றக்குடி அடிகளார் தலைமையில் பட்டி மன்றங்கள் எனச் செயல்பாடுகள் உற்சாகமாகத் தொடர்ந்தன. பேராசிரியர் நா.வானமாமலை வாய்மொழி இலக்கியமான நாட்டுப் பாடல்களைத் திரட்டி நூலாக்கினார். அவரது முயற்சியால் உருவான நெல்லை ஆய்வுக்குழு தமிழியல் ஆய்வில் ஒரு புதிய தடத்தைப் பதித்தது. மார்க்சியக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ்நாட்டின் வரலாற்றையும் தமிழ் இலக்கியங்களையும் ஆய்வு செய்யும் முறையியலுக்கு வழிகாட்டினார் பேரா.நா.வா. அவரால் நடத்தப்பட்ட "ஆராய்ச்சி" இதழ்களில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள் கல்விப்புலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. பல்கலைக்கழகங்களில் நாட்டார் வழக்காற்றியல் துறை என்ற பிரிவு தொடங்கப்படுவதற்கு நா.வா.வின் உழைப்பு முதற் காரணமாக இருந்தது என்றால் மிகையல்ல. அவருடைய வழித்தோன்றல்களான, பேரா.தோதாத்ரி, பேரா.ஆ.சிவசுப்ரமணியன், முனைவர் மே.து.ராசுகுமார், பேரா. நா.ராமச்சந்திரன், முனைவர் ந.முத்துமோகன் ஆகியோர் தமிழ்நாடு அறிந்த அறிஞர் பெருமக்களாவர்.

பெருமன்றம் தனது பயணத்தை நம்பிக்கையுடன் தொடங்கிய சூழலில், அதன் ஒளி விளக்காகத் திகழ்ந்த பேராசான் ஜீவா 1963 ஜனவரி 18இல் காலமானது பேரிடியாய்த் தாக்கியது.

1962இல் பத்தாண்டுகள் சிறைவாசம் முடித்து வெளிவந்த தியாகச் செம்மல் பாலதண்டாயுதம் அன்றைய

சூழலில் பெருமன்றத்தைக் கட்டியமைப்பதன் அவசியத்தை உணர்ந்தவராகக் களமிறங்கியது பெருமன்றத்திற்குப் புத்துணர்ச்சியூட்டியது. தொ.மு.சி. ஜீவா தொடங்கிய "தாமரை" இதழ், படைப்பிலக்கிய வளர்ச்சிக்குக் கணிசமாகத் துணை புரிந்தது. குறிப்பாக, திறனாய்வாளர் தி.க.சி. பொறுப்பேற்று நடத்திய பத்தாண்டுக் காலத்தில் இளம் படைப்பாளிகளின் படைப்புகள் வெளியாகி அவர்களை ஊக்குவிப்பதாக அமைந்தது. பேரா.நா.வா. வின் "ஆராய்ச்சி" இதழ்கள் மானுடவியல், அடித்தள மக்கள் ஆய்வு, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளை முன்னெடுத்தது. தொ.மு.சி. யின் "இளங்கோவடிகள் யார்" ஆய்வு நூல் தமிழ்ச் சமூக வரலாற்றுத் தளத்தை விரிவாக்கியது. சிறுகதை, கவிதை, நாவல் நூல்கள், ஆய்வு நூல்கள், ஈழத்தமிழ் ஆளுமைகள் கைலாசபதி, சிவத்தம்பி எழுத்துக்கள் ஆகியவற்றைப் பதிப்பித்து வெளியிட்டு என்.சி.பி.எச். நிறுவனம் முற்போக்கு இலக்கியப் பரப்பிற்கு உரமளித்தது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு சேலம் பெத்தநாய்க்கன்பாளையத்தில் கூடிய மத்தியக்குழு தொ.மு.சி.ரகுநாதனைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. அடுத்த மாநாட்டை 1963 மே 31 ஜூன் 1,2 தேதிகளில் மதுரையில் நடத்தவும் முடிவெடுத்தது. பெருமன்றத்தின் சின்னம் அங்கு வடிவமைக்கப்பட்டது.

மதுரை மாநாடு மகாகவி பாரதி பணியாற்றிய சேதுபதி உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடந்தது. மாநாட்டில் சிலம்புச் செல்வர் மா.பொ.சி. இலக்கியச் செல்வர் எஸ்.ராமகிருஷ்ணன், ஈ.வெ.கி.சம்பத், அவ்வை டி.கே. சண்முகம், நடிகர் டி.கே. பாலச்சந்திரன், எழுத்தாளர் கி.ராஜநாராயணன், பாவலர் வரதராஜன், எழுத்தாளர் கு.சின்னப்ப பாரதி, சிவகிரி எஸ்.எம். கார்க்கி, கே.சி.எஸ்.அருணாசலம் எனப் பல்துறை ஆளுமைகள் கலந்து கொண்டனர். பாவலர் வரதராஜனின் "ஒரு ஜீவ ஓவியம்" நிகழ்ச்சி பெரும் வரவேற்பைப் பெற்றது. தொ.மு.சி. தா.பாண்டியன் ஆற்றிய பேருரைகள் மக்களைக் கவர்ந்தது. இருவரும் தலைவர், செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெருமன்றத்தின் இரண்டாவது மாநாடு, 1966 பிப்ரவரி 17-20 தேதிகளில் பொள்ளாச்சியில், அந்த மண்ணின் மைந்தர்களான கே.பாலதண்டாயுதம், கே.சி.எஸ்.அருணாசலம், பி.கே.ராமசாமி,

சிற்பி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அயராத உழைப்பால் வீச்சுடன் நடந்தேறியது. மாநாட்டில், இப்டா இயக்கத்தின் முன்னோடியும் புகழ்பெற்ற இந்தித் திரைப்பட நடிகருமான பால்ராஜ் சஹானி, மலையாள இலக்கிய ஜாம்பவான் தகழி சிவசங்கரன் பிள்ளை, கேரள மாநிலக் கல்வியமைச்சர் ஜோசப் முண்டசேரி, உருதுக் கவிஞர் அலி ஜாஃப்ரி அஹமது, தமிழறிஞர் சாலை இளந்திரையன் போன்ற சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். சோசலிச எதார்த்தவாத இலக்கியக் கோட்பாட்டிற்கு அழுத்தம் கொடுத்த தொ.மு.சி. யின் கொள்கை அறிக்கை மாநாட்டில் ஏற்கப்படவில்லை. தொ.மு.சி. தா.பாண்டியன் இருவரும் மீண்டும் பொறுப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மூன்றாவது மாநாடு திருச்சி நகரில் 1968 மே 30,31 ஜூன் 1,2 தேதிகளில் நடைபெற்றது. பேரா.எம்.எஸ்.நாடார், கே.பாலதண்டாயுதம், கே.பி.எஸ்.கோன் வரவேற்புக்குழுவாகச் செயலாற்றினர். தோழர் எம்.கல்யாணசுந்தரம், தோழர் கே.டி.ராஜு துணைபுரிய பிஷப் ஹீபர் பள்ளித்திடலில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அரங்கில் மாநாடு நடைபெற்றது. அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசியச் செயலாளர் சஜ் ஜாத் ஜாகீர், கேரள மாநில மார்க்சிய அறிஞர் கே.தாமோதரன், எழுத்தாளர் பொன்குன்னம் வர்க்கி, மும்பை இந்தித் திரைப்பட இயக்குனர், எழுத்தாளர் கே.ஏ.அப்பாஸ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றனர். கருத்தரங்க அமர்வுகள், கவியரங்கம், "முஷையரா" என்ற உருது மொழிக் கவிமேடை, பகத்சிங் நாடகம், அறந்தை நாராயணன் நடித்த பஞ்சும் பசியும் நாடகம் "பாதை தெரியுது பார்" திரைப்படக் கலைஞர்களுக்குப் பாராட்டு விழா எனப் பல்சுவையுடன் மாநாடு சிறப்பாக நடந்தது. பேரா.நா.வானமாமலை தலைவராகவும், தா.பாண்டியன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1971இல் கோவை நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த நிலையில் தோழர் பாலனுக்குப் பெருமன்றத்தை வழிநடத்தும் பொறுப்பும் தரப்பட்டது. எனவே பெருமன்றத்தின் அடுத்த மாநாட்டை கோவையில் நடத்த அவர் ஏற்பாடுகளைத் தொடங்கியிருந்த நேரத்தில்தான் அந்த

பேரதிர்ச்சி தந்த செய்தி வந்தது. 1973 மே 31 இல் டெல்லியருகே நடந்த விமான விபத்தில் பாலன் மரணமடைந்த செய்தி கட்சி மற்றும் பெருமன்றத் தோழர்களைத் துயரத்தில் ஆழ்த்தியது.

கம்யூனிஸ்டு இயக்கத்தில் ஏற்பட்ட அரசியல் பிளவு கலை இலக்கியத் துறையிலும் தொடர்ந்து 1975 இல் தமுஎச துவக்கப்பட்டது.

ஆக, ஐந்தாண்டு இடைவெளிக்குப் பின்பு 1978 ஆகஸ்ட் 12, 13 தேதிகளில் திருப்பூரில் நான்காவது மாநாடு நடைபெற்றது. தோழர்கள் பி.கே.ராமசாமி, கே.சுப்பராயன், கவிஞர் புவியரசு, கவிஞர் சிற்பி, செந்தமிழ் மீ.மாரியப்பன், பி.என்.ராமலிங்கம், பி.கே.ராஜகோபால் மற்றும் திருப்பூர் தோழர்கள் ஆதரவுடன் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. இலங்கை எழுத்தாளர் அந்தோணி ஜீவா, மலையாள எழுத்தாளர் உன்னிக்கிருஷ்ணன், கன்னடக் கவிஞர் கே.வி.ராஜகோபால், நாடகப் பேராசிரியர் ராமானுஜம் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர். பேரா. நா.வா. சமர்ப்பித்த கொள்கை அறிக்கை திருப்பூர் மாநாட்டின் சிறப்பு அம்சமாக வரவேற்பைப் பெற்றது. புவியரசு, ஜெயந்தனின் நாடகங்கள், புதுக்கவிதை, சிறுகதை அரங்குகள் பார்வையாளர்கள் ரசிக்கும்படியாக அமைந்தன. நா.வா. தலைவராகவும், கே.சி.எஸ். செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெருமன்றத்தின் ஐந்தாவது மாநாடு 1988 ஏப்ரல் 2,3 தேதிகளில் புதுச்சேரியில் நடைபெற்றது. முன்னதாக, பொன்னீலன் கே.சி.எஸ். இருவரும் மாநிலத்தை தெற்கு வடக்காக பிரித்துக் கொண்டு சுற்றுப் பயணம் செய்து மாவட்ட அமைப்புகளைப் புதுப்பித்தனர். புதுவைக் கவிஞர் வெ.நா. ரா. எம்.கே.ராமன், எம்.எஸ்.ராதாகிருஷ்ணன், அ.மு.சலீம் ஆகியோர் மாநாட்டு ஏற்பாடுகளைக் கவனித்தனர். அப்போது அமரரான இசைமேதை எம்.பி. சீனிவாசன் பெயரில் மாநாட்டு அரங்கம் அமைக்கப்பட்டது. இலங்கை நாட்டியக் கலைஞர் கார்த்திகா கணேசர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இதர தீர்மானங்களுடன் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நூற்றாண்டு விழாவினைத் தமிழகமெங்கும் கொண்டாடிட மாநாடு தீர்மானம் நிறைவேற்றியது. பொன்னீலன் சமர்ப்பித்த

கொள்கை அறிக்கை மீது சூடான விவாதம் நடத்தப்பட்டது. ஒரு தலைவர் என்பதற்கு பதிலாக தொ.மு.சி. கே.சி.எஸ். குன்றக்குடி அடிகளார், திருச்சி தியாகராஜன், கவிஞர் சிற்பி ஆகியோரடங்கிய தலைமைக்குழுவும் பொதுச்செயலாளராக பொன்னீலனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1988 செப்டம்பரில் எட்டையபுரத்தில் கூடிய மாநிலக்குழு ஆண்டுதோறும் சிறந்த படைப்பாளிகளுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை அறிவித்தது. அதற்கான பரிசுத்தொகையை என்.சி.பி.எச். நிர்வாக இயக்குனர் ஆர்.ராதாகிருஷ்ணமூர்த்தி மகிழ்வுடன் ஏற்றார். அவ்வாறு தொடங்கப்பட்ட இலக்கிய விருது வழங்கும் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு படைப்பாளர்களுக்கு ஊக்கமளித்து வருவதை அறிவோம்.

அடுத்து, "மண்ணின் பாடல்கள்'' என்ற பெயரில் கவிஞர்கள் தணிகைச்செல்வன், பரிணாமன், பச்சை நிலா மற்றும் பெயர் தெரியா நாட்டுப்புறக் கவிஞர்களின் பாடல்களுக்கு டாக்டர் கே.ஏ.குணசேகரன் இசையமைத்து கிராமிய மணத்துடன் ஒலிப்பேழை வெளியிடப்பட்டது.

படைப்பாளிகளைப் பயிற்றுவிக்கும் முகாம்களை நடத்துவதைப் பெருமன்றம் செயல்படுத்தியது. 1989 டிசம்பர் 29-31 தேதிகளில் திருவரங்கம் அமலா ஆசிரமத்தில் நடைபெற்ற மாநில அளவிலான முகாமில் இளம் தோழர்களுக்குச் சிந்தாந்தத் தெளிவை ஏற்படுத்தவும், அமைப்பை விரிவுபடுத்தும் நோக்கத்திலும் வகுப்புகள் நடத்தப்பட்டன.

பேரா.நா.வா.வின் முயற்சியால் 1975 இல் குமரி மாவட்டம் கீரிப்பாறையில் தொடங்கப்பட்ட தத்துவார்த்தப் பயிற்சி முகாம், 1980 இல் அவர் காலமான பிறகு பேரா.நா.வா.நினைவு முகாம் என்கிற பெயரில் ஆண்டுதோறும் மே மாதத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. கடந்த மே 24, 25 தேதிகளில் கன்னியாகுமரியில் 45-வது கலை இலக்கியப் பண்பாட்டு முகாம் நடந்தேறியுள்ளது. குமரி மாவட்டப் பெருமன்றத்தின் ஒரு வரலாற்றுச் சாதனையாக இது திகழ்கிறது.

ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தில் திருப்பூரில் ஆறு முகாம்களும், கோவையில் இரண்டு முகாம்களும் சிறப்பாக நடத்தப்பட்டன. முனைவர் கி.முப்பால் மணி மற்றும் எஸ்.ஏ.பாலகிருஷ்ணன் முகாம்களின் வெற்றிக்கு அச்சாணியாகப் பணியாற்றினர்.

பெருமன்றத்தின் ஆறாவது மாநாடு 1991 டிசம்பர் 27-29 தேதிகளில் கோவை பெர்க்ஸ் மேனிலைப்பள்ளியில் நடைபெற்றது. காலஞ்சென்ற பெருமன்றக் காவலர் செந்தமிழ் மீ.மாரியப்பன் நினைவாக மாநாட்டு மேடை பெயரிடப்பட்டது. தமிழகமெங்குமிருந்து நானூறுக்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டனர். தொமு.சி. தோதாத்ரி தி.சு.நடராசன், முப்பால் மணி, கோவை ஞானி, ந.முத்துமோகன், மற்றும் பல அறிஞர்கள் பங்கேற்ற கருத்தரங்கம், பொ.கைலாசமூர்த்தியின் பாடல்கள், ஓவியக் கண்காட்சி, ராஜம் கிருஷ்ணன், இரவீந்திர பாரதி, விமலா ரமணி, கோமல் சுவாமிநாதன், டி.செல்வராஜ், லீனா மணிமேகலை பசுமைக்குமார் போன்ற எழுத்தாளர்களும் உரையாற்றினர். கே.ஏ.குணசேகரனின் "சத்திய சோதனை" நாடகம் அரங்கேற்றப்பட்டது. பேரா.ராமானுஜன், நாடக மேதை பிரக்டின் கருத்துக்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தக் கேட்டுக் கொண்டார்.

ஏழாவது மாநாடு 1999 ஆகஸ்ட் 11-13 தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. 1999 மே 28 இல் காலமான கவிஞர் கே.சி.எஸ். நினைவாக அரங்கம் பெயரிடப்பட்டிருந்தது. மூத்த தோழர் ஆர்.நல்லகண்ணு, குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், எழுத்தாளர் வல்லிக்கண்ணன், எழுத்தாளர் திலகவதி, முதுபெருந்தோழர் கே.டி.கே.தங்கமணி கலந்து கொண்டு சிறப்பித்தனர். நடிகர் சத்தியராஜ், இயக்குனர் வி.சேகர் கலை விழாவில் பங்கேற்றனர். கவியரங்கம், கருத்தரங்கம், கலை நிகழ்ச்சிகள் என மாநாடு சிறப்புற நடத்தப்பட்டது. தலைமைக்குழுவாகக் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கவிஞர் சிற்பி, தோதாத்ரி, வி.சேகர், முப்பால்மணி, தி.சு.நடராசன், பி.கே.ராஜகோபால் ஆகியோரும் பொதுச்செயலாளராகப் பொன்னீலனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எட்டாவது மாநாடு மீண்டும் சென்னையில் 2000ஏப்ரல் 11-13 தேதிகளில் நடைபெற்றது. மாநாட்டில் கூட்டுத் தலைமைக்குழுவும் பொதுச்செயலாளராகப் பொன்னீலனும் நீடித்தனர்.

**அடுத்த மாநாடுகளின் சுருக்கமான விபரம் வருமாறு:**

40 வது ஆண்டு சிறப்பு மாநாடு 2002 மே 24-26 தேதிகளில் கோவையில் கோலாகலமாக நடைபெற்றது. உலகத் தமிழ்ப் பேரறிஞர் கலாநிதி சிவத்தம்பி கலந்துகொண்டு கருத்தாழமிக்க உரையை வழங்கினார்.

ஒன்பதாவது மாநாடு 2004 டிசம்பரில் திருவண்ணாமலையில் கவிஞர் பெ.அன்புவின் தூரிகை வண்ணங்களில் ஜொலித்த ஓவியப் பதாகைகள் நகரை அலங்கரிக்க, பெருமன்றக் கலைஞர்களின் பாடல்கள், நாடகம், கலை நிகழ்ச்சிகள் என முழு இரவு கலைவிழா முத்திரை பதித்தது திருவண்ணாமலை மாநாடு. பொன்னீலன் தலைவராகவும் ஜெயகாந்தன் போன்ற கம்பீரத் தோற்றம் கொண்ட கரிசல் எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெருமன்றத்தை வீறுகொண்டு வழிநடத்த இலட்சியப் பிடிப்பு மிக்க இனிய" தோழராக" தனுஷ்கோடி முன்வந்ததை இயற்கை தடுத்து அவரது உயிரை 2005 நவம்பர் 24 இல் பறித்துக் கொண்டது.

அவரது இடத்தில் சிறந்த எழுத்தாளரும் கவிஞருமான இரவீந்திர பாரதி பொறுப்பேற்றார்.

அடுத்த 10 வது மாநாடு திருச்சி மாநகரில் 2010 ஏப்ரல் 2-4 தேதிகளில் நடைபெற்றது. சமகாலத்தின் சமூகப் போக்குகளான தலித்தியம், பெரியாரியம், பெண்ணியம் ஆகியன பற்றிய காத்திரமான கருத்தரங்க உரைகள் நிகழ்த்தப்பட்டன. மாநாட்டுக் கலை விழா, நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், பாராட்டு விழா என மக்களைக் கவர்ந்தது. பேரா.நா.வா.வின் அடியொற்றி அடித்தள மக்கள் வரலாறு, பொருள்சார் வரலாறு என ஆய்வுத்தளத்தில் தடம் பதித்துள்ள பேரா. ஆ.சிவசுப்ரமணியன் தலைவராகவும், கவிஞரும் எழுத்தாளருமான முனைவர் இரா. காமராசு பொதுச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெருமன்றத்தின் 50 வது ஆண்டினைச் சிறப்பிக்கும் வகையில் 2012 மே 12, 13 தேதிகளில் கோவையில் பொன்விழா மாநாடு நடைபெற்றது. கேரள மாநிலத்தைச் சார்ந்த மார்க்சிய அறிஞர் கே.என்.பணிக்கர் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றுக் காலப் பொருத்தமிக்க உரையை வழங்கினார். மாநாட்டையொட்டி நடைபெற்ற கலை விழாவில் கவிஞர் புவியரசு, எழுத்தாளர் பொன்னீலன் இருவருக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

பெருமன்றத்தின் 11 வது மாநாடு 2015 செப்டம்பர் 11-13 தேதிகளில் தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் விமரிசையாக நடைபெற்றது. இலங்கை நாடகவியலாளர் மௌனகுரு சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். பேரா. நா.ராமச்சந்திரன் சமர்ப்பித்த கொள்கை அறிக்கை மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. தமிழ் உலகாயதத் தத்துவத்தை ஆய்வு செய்து பதிவு செய்துள்ள முனைவர் கி.முப்பால் மணிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. மாநாட்டுக் கலைவிழாவில் தஞ்சை சின்னப்பொண்ணு குழுவினர் மற்றும் பெருமன்றக் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகளை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர். மாநாட்டில் குமரி மாவட்டப் பெருமன்றத்தை கட்டி வளர்க்க, இளந்தோழர்களை ஆற்றுப்படுத்துபவரும் சிறந்த மார்க்சியச் சிந்தனையாளருமான சி.சொக்கலிங்கம் தலைவராகவும், முனைவர் இரா.காமராசு பொதுச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெருமன்றத்தின் 12 வது மாநாடு 2022 மே 20-22 தேதிகளில் விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் நடைபெற்றது. அரசியல் தலைவர்களின் வாழ்த்துரை, கருத்தரங்கம், கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள், தொல்லியல் கண்காட்சி என மாநாடு அடர்த்தியாக நடைபெற்றது. மாநிலச் செயற்குழுவின் சார்பாகத் தோழர் எஸ்.கே.கங்கா சமர்ப்பித்த நகல் கொள்கை அறிக்கை விவாதிக்கப்பட்டு இறுதியாக அடுத்த மாநிலக்குழுவின் முடிவிற்கு விடப்பட்டது. கலை விழாவில் மக்கள் பாடகர் பரிணாமனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. மாநாட்டில்

தோழர் சி.சொக்கலிங்கம் தலைவராகவும் மருத்துவர் த.அறம் பொதுச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தனது உடல்நிலை காரணமாகத் தலைவர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவிக்கத் தோழர் சி.சொக்கலிங்கம் விடுத்த வேண்டுகோளை ஏற்று திருப்பூரில் நடைபெற்ற மாநிலக்குழுக் கூட்டத்தில் தோழர் எஸ்.கே.கங்கா மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சாத்தூர் மாநாட்டிற்குப் பின், பெருமன்றம் வ.உ.சி-150, கே.சி.எஸ். அருணாசலம், தொ.மு.சி. தமிழ்ஒளி, ராஜம் கிருஷ்ணன் போன்ற ஆளுமைகளின் நூற்றாண்டு விழாக்களை மாநிலத்திலுள்ள கல்லூரிகளின் தமிழ்த்துறையினருடன் இணைந்து பல மாவட்டங்களில் நடத்தியுள்ளது. பிப்ரவரி 21 இல் மாநிலமெங்கும் உலகத்தாய்மொழி நாள் விழாக்கள், 2023 பிப்ரவரியில் இந்தித் திணிப்பைக் கண்டித்து சென்னையில் கருத்தரங்கம், கரிசல் எழுத்தாளர்கள் கி.ரா. அழகிரிசாமி மற்றும் கவிஞர் தமிழ்ஒளி சிறுகதைகள் பற்றி இணையவழி உரைகள்,

திருக்குறள் 133 அதிகாரங்கள் குறித்து இணையவழி விளக்கவுரைகள், தோழர் எஸ்.கே.கங்கா தொடங்கிய ஜீவா-நாவா சிந்தனைப் பள்ளி, பேரா.நா.வா. ஆய்வுக்குழு, பெருமன்றத்தின் சென்னை மாவட்டக்குழு ஆகிய அமைப்புகளின் இணைய வழி உரைகள் எனப் புதிய முயற்சிகள் தொடர்கின்றன. குமரி மாவட்டப் பெருமன்றம், பேரா.நாவா. நினைவுக் கலை இலக்கியப் பண்பாட்டு முகாமை கடந்த 45 ஆண்டுகளாக நடத்தி, தத்துவார்த்த விவாதம், இலக்கிய அரங்கம், சிறார் பயிலரங்கு ஆகியவற்றை முன்னெடுத்து வருகிறது.

நாட்டுப்புறக்கலைகளைப் பாதுகாக்க அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தோழர் ஜீவா அண்ணல் அம்பேத்கர் நாட்டுப்புறக் கலைஞர்கள் சங்கம் பெருமன்றத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கலை இலக்கியத்துறையில் ஜீவா, நா.வா. தொ.மு.சி. தொடங்கிய பண்பாட்டுப் பயணத்தில் பெருமன்றம் ஆற்றியுள்ள குறிப்பிடத்தக்க பங்களிப்புகள்:

➢ பழந்தமிழ் செவ்வியல் இலக்கியங்களைச் சமுதாயக் கண்ணோட்டத்தில் வரலாற்று இயங்கியல் நோக்கில்

கண்டு அதன் சமூகப் பண்பாட்டு விழுமியங்களை வெளிக் கொணர்ந்தது.

- செவ்வியல் இலக்கியங்களுக்கு நிகராக நாட்டார், வாய்மொழி இலக்கியங்களைத் தொகுத்து, பகுத்து, பண்பாட்டு மானிடவியலை நிலை நிறுத்தியது.

- செவ்வியல் கலை வடிவங்கள் கோலோச்சிய நிலையினை மாற்றி நாட்டார் கலைகளை மக்கள் மத்தியில் நிலை நிறுத்தியது.

- நவீன இலக்கிய வடிவங்களான புதுக்கவிதை, சிறுகதை, நாவல் போன்றவற்றில் சமுதாய வளர்ச்சி, முன்னேற்றத்தை மையப்படுத்திய முற்போக்கு எதார்த்தவாத எழுத்து முறைமையை வளர்த்தெடுத்தது.

- சிறுகதை, நாவல் வகைமைகளில் ஜெயகாந்தன், தமிழ்ஒளி தொடங்கிய வரிசையில் தொ.மு.சி. பொன்னீலன் கு.அழகிரிசாமி, தனுஷ்கோடி ராமசாமி, வல்லிக்கண்ணன், சு.சமுத்திரம், வாய்மைநாதன், அறந்தை நாராயணன், அ.ப.பாலையன், கொ.மா.கோதண்டம், சந்திரகாந்தன், ஆ.சந்திரபோஸ், ஸ்ரீதர கணேசன், சுப்ரபாரதி மணியன், ரவீந்திர பாரதி, மா.நடராசன், இரா.காமராசு, அண்டனூர் சுரா, செம்பை மணவாளன், டாக்டர் சாந்திலால், வீர.வேலுசாமி, இரா.கதைப்பித்தன், மீரான் மைதீன் கே.வி.ராஜேந்திரன், நாணற்காடன், சசிகலா விஜயராஜா, துவாரகா சாமிநாதன், சோலச்சி, எனத் தொடரும் படைப்பாளர் அணியை உருவாக்கியது.

அதுபோலக் கவிஞர்கள் வரிசையில் ஜீவா, தொ.மு.சி. கே.சி.எஸ்.அருணாசலம் தொடங்கி, வெ.நா.திருமூர்த்தி, வெ.நாரா, கடலூர் பாலன், யமுனா ராஜேந்திரன், பரிணாமன், இரா.காமராசு, ஹெச்.ஜி.ரசூல், கலைமணிமுடி, கே.திலகவதி, பசுமைக்குமார், ஹாமீம் முஸ்தபா, மு.செல்லா, கிருங்கை சேதுபதி, பெ.அன்பு, மு.ஆதிராமன், அறந்தை பாவா, கதிர்பாரதி, தி.பரமேஸ்வரி, அகிலா கிருஷ்ணமூர்த்தி, கண்மணிராசா,

கந்தகப்பூக்கள் ஸ்ரீபதி, நீலநிலா செண்பகராமன், மழயிசை, ரஜனிபெத்துராஜா, கவிதாஜவஹர், ராம்சித்ரா, சிவா, கோ. கலியமூர்த்தி, அய்யாறு புகழேந்தி, தங்கபாபு, என்.டி.ராஜ்குமார், இ.எம்.எஸ்.கலைவாணன், தயாளன், தர்மசிங், பைசல், சஹானா, ந.நாகராஜன், சு.செல்வக்குமரன், கந்தகப்பூக்கள் ஸ்ரீபதி, அஜய்குமார் கோஷ், வல்லம் தாஜுபால், நிலாதரன், சேலம் ராஜா, நாகா, மழையிசை, உஷாகனகு, ஆனந்தி, துருவன்பாலா, நான்சி கோமகன் எனப் பெருமன்றக் கவிஞர்கள் தொடர்வது.

- தமிழ் இலக்கியத்தை உலக இலக்கியங்களுடன் இணைத்துப் பார்க்கும் ஒப்பிலக்கிய நெறியை உருவாக்கிக் காட்டியது.
- தமிழில் இருந்து பிறமொழிகளுக்கும், பிற மொழிகளிலிருந்து தமிழுக்கும் இலக்கியப் பரிமாற்றத்தை மொழிபெயர்ப்புகள் வழி செய்து காட்டியது.
- சாதி சமய தெய்வீக சடங்காச்சார விழாக்களுக்கு மாற்றாக மக்கள் கலை வடிவங்களை வெகுமக்கள் மத்தியில் அரங்கேற்றும் முழு இரவுக் கலை விழா வடிவங்களைத் தந்தது.
- நூல் பதிப்பு, புத்தக வாசிப்பு, நூல்கள் அறிமுகம் ஆகியவற்றை மக்கள் சார்ந்த முறையில் விரிவுபடுத்தியது.
- கல்விப்புல வட்டாரத்திலும் வெளியேயும், சமூகவியல் நோக்கிலானதும், மார்க்சிய ஆய்வுமுறையியல் அடிப்படை யிலானதுமான பல்துறை ஆய்வுகளை வளர்த்தெடுத்தது.
- பெருமன்றத்தின் ஆரம்ப காலத்திலிருந்து அதன் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்துள்ள தொ.மு.சி.ரகுநாதன், தி.க.சிவசங்கரன், பொன்னீலன், சிற்பி பாலசுப்ரமணியன், புவியரசு, தமிழ்நாடன், பா.ஆனந்தகுமார், கமலவேலன் ஆகியோர் சாகித்ய அகாதமி விருதுகளைப் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளது.
- என்.சி.பி.எச். புத்தக நிறுவனத்துடன் இணைந்து கடந்த 32 ஆண்டுகளாக மாநிலஅளவிலான போட்டிகள் வழியாக வெற்றி பெறும் இலக்கியப் படைப்பாளிகள், ஆய்வாளர்கள்,

ஆவணப்பட, குறும்பட இயக்குனர்கள் ஆகியோருக்கு விருதுகளை வழங்கி வருவது.

- ➢ கலை இலக்கிய ஆளுமைகளுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது, தமிழியல் ஆளுமை விருது, வாழ்நாள் சாதனைக் கலைஞர் விருது ஆகிய விருதுகளையும் வழங்கி வருவது.
- ➢ படைப்பிலக்கிய வகைமைகளில் இளம் படைப்பாளிகளின் நூல்கள் வெளியீடு அறிமுக நிகழ்ச்சிகளை நடத்தி மக்கள் சார் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயலாற்றுவது.
- ➢ தொல்லியல் ஆய்வுகளில் காத்திரமாகப் பணிகளைப் பெருமன்றத்தின் தலைமைக்குழு உறுப்பினர் செந்தீ நடராசன் வழிநடத்தும் செம்பவளம் ஆய்வுக்குழு முன்னெடுத்து வருவது. தமிழ்நாட்டின் வரலாற்றை வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில் ஆய்வு செய்து வரும் ர.பூங்குன்றன், தி.சுப்ரமணியன், ஆ.பத்மாவதி உள்ளிட்ட தொல்லியலாளர்களின் பங்களிப்புகள்.
- ➢ அண்மைக் காலமாகச் சிறார்களின் ஆற்றல்களை வெளிக் கொணரும் சிறார் முகாம்களுக்குக் கவனம் செலுத்தி வருவது.

இப்படிச் சில முத்திரைகளைப் பதித்திருந்தாலும், பெருமன்றம் செல்லவேண்டிய தூரமோ நெடியது. எதிர்கொண்டுள்ள பண்பாட்டுச் சவால்களும் மிகக் கடினமானவை. இவற்றைச் சந்திக்கவும் வெற்றிகாணவும் பெருமன்றம் மற்றும் அனைத்து இடதுசாரி, சனநாயக, பண்பாட்டு இயக்கங்களின் ஒன்றிணைந்த செயல்பாடு பெருமளவில் வேண்டப்படும் சூழல் நிலவுகிறது. ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி, நாட்டின் பன்மைத்துவத்தை, மதச்சார்பின்மையை, அரசியலமைப்பு வழங்கியுள்ள ஜனநாயகத்தைப் புரட்டிப் போட்டு,சமத்துவ நெறிக்குப் புறம்பான, செயற்கையான ஒற்றைப் பண்பாட்டைத் திணிக்கும் நாசவேலையை இந்தியப் பாசிசம் படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பேரபாயத்திலிருந்து நாடு காப்பாற்றப்பட, தமிழ் நாட்டின் தொன்மை, தமிழ் மொழியின், தமிழ் மக்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட, சமூக உணர்வு கொண்ட கலை இலக்கியப் போராளிகளை வார்க்கும் உலைக்களமாகப் பெருமன்றம் உள்ளிட்ட அனைத்து முற்போக்குக் கலை இலக்கிய அமைப்புகளும் இயங்குவது காலத்தின் கட்டளையாகும். அதுவே பெருமன்றத்தின் பெருமைமிகு வரலாற்றினை முன்னோக்கிச் செலுத்துவதாக அமையும்.

♦♦♦

கட்டுரையாளர்
மாநிலப் பொருளாளர்
த.நா.கலை இலக்கியப் பெருமன்றம்

# எனை ஆட்கொண்ட ஆதிமூலம்

**மு.சுந்தரன்**

தொடக்கப்பள்ளிக் காலத்தில் இருந்தே பாடப்புத்தகங்களிலும் எங்கள் சிற்றூரின் நூலகத்திலும் காணக் கிடைத்த தின; வார; மாதப் பத்திரிகைகளில் வந்த பல்வேறு விதமான ஓவியர்கள் வரைந்த பல்வேறு வகையான ஓவியங்கள் வழியாகத்தான் எனக்கு **"ஓவியம்"** அறிமுகமானது.

ஒரு பத்திரிகையில் கவிதை; சிறுகதை; நாவல்; நகைச்சுவை; கட்டுரை; ஆன்மீகம் ; அரசியல்; பொதுஅறிவு; கலைகள் எனப் பற்பல துறைகள் சார்ந்தவை வரும்போது **ஓவியம்** மட்டும் என்னை ஈர்த்தது எப்படி?

"ஐந்தாம் வயதிலிருந்து எனக்கு ஏன் ஓவியம் பிடித்திருந்தது?" என நான் பணி ஓய்வு பெற்ற இந்த அறுபதாம் அகவையில் சிந்திக்கும் போது... மிகத் தெளிவான பதில் கிடைக்கவில்லை. எனினும், மேற்குறிப்பிட்ட கவிதை தொடங்கி கலைகள் வரை அனைக்கிற்கும் சிறப்பு செய்யும் விதமாகக் கருப்புக் கோடுகளால் வரையப்பட்ட ஓர் ஓவியம் உறுதியாக இடம்பெற்றிருக்கும்.

அப்படி இடம் பெற்றதாலேயே பிடித்ததா? என்ற கேள்வி எழும்.

இந்தக் கட்டுரையை இப்படிச் சிக்கலான முறையில் நான் தொடங்கி இருக்கக் கூடாதோ?



பகவான் அனுக்கிரஹம்,

பிறவிப் பேறு,

பூர்வஜென்மத் தொடர்பு,

பிரம்மனின் எழுத்து

போன்ற எளிய; விளக்கத் தேவையில்லாத உலக அளவில் (ஐநா சபை வரை ஏற்றுக் கொள்ளப்படும் காரணங்களைக் கூறாமல் ஆழ்ந்து சிந்தித்தது தவறா!

இப்படிப் பார்ப்போம்...

குழந்தைகளுக்குப் படம் பிடிக்கும்தானே? அந்த வகையில் (நீங்கள் நம்பவில்லை எனினும்) நானும் குழந்தையாய் இருந்து வந்தவன்தானே? ஆகவே, படம், படங்கள் பிடித்திருந்தன.

எல்லாப் படங்களையும் தொடர்ந்து பார்த்து வந்தேன். அப்படிப் பார்த்து வந்த படங்களில் சிலரின் **படங்கள்** எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அப்படி எனக்குப் பிடித்திருந்த படங்களாக இருந்தவை படங்கள் அல்ல; அவைகள்தான் **ஓவியங்கள்** என்ற பார்வைத் தெளிவு ஏற்பட்டது.

பிறகு ஓவியங்களைத் தொடர்ந்து பார்த்துப் பார்த்துச் சுவைக்கச் சுவைக்க அதன் நுட்பங்களை அறிய, அறிய பல ஓவியங்களில் இருந்து சில ஓவியங்களே அற்புதமானவை என்ற முடிவுக்கு வந்தேன். அந்த அற்புதமான சில ஓவியங்கள் ஓவியங்கள் அல்ல அவை தான் படைப்புகள் என்ற புரிதல் கொண்டேன்.

இப்படிப் படத்தில் இருந்து படைப்பு வரை கண்டு, உணர்ந்து, தெளிவுகொள்ள எனக்கும் என் கண்கள் வழி பார்வையும், பார்வை வழிப் புரிதலும் உணர்வும் என் அறிவுக்கு எட்ட 55 ஆண்டுகள் ஆகியிருக்கிறது.

இந்த நிலையில்தான் எனக்கு ஒரு தெளிவு ஏற்படுகிறது. 1965 இல் பிறந்த நான் இந்தத் தெளிவின் வழியாக என்னை

அறியாமலேயே **ஓவியம் என்ற ஒரு மொழியைக்** கற்றிருக்கிறேன் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்.

உலக மொழிகள் அனைத்திற்கும் **தாய் மொழியான ஓவியம்** என்ற ஒரு மொழியைக் கற்றிருக்கிறோம் என இந்தத் தருணத்தில் புரிந்து கொண்டேன்.

இதற்கு உலக அளவில் வேறு எந்த மொழியைப் பேசுபவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவும் உயர் நீதிமன்ற, உச்சநீதிமன்ற, ஐநா சபை போன்ற அமைப்புகளை அணுகி அவை இக்கருத்துக்காக மன்னிப்புக் கேட்குபடி என்னை வற்புறுத்தாது எனவும், எனது படத்தைப் பிற இடங்களில் காட்சிப்படுத்தத் தடையும் விதிக்காது எனவும் நம்புகிறேன்.

1983 இல் 12 ஆம் வகுப்பு முடிக்கும் வரை தொடர்ந்து ஓவியங்களைப் பார்ப்பவனாகவும்; காதலிப்பவனாகவும்; அதன் வரைமுறையில் துய்ப்பவனாகவும்; ஒவ்வொரு ஓவியரின் வரைமுறையையும் (Style) தெரிந்தவனாகவும் கண்கள் வழியாக அறிவின் பெட்டியில் சேர்த்து வைத்திருந்தேன்.

அவ்வப்போது பள்ளியில் நடைபெறும் ஓவியப் போட்டிகளில் தொடர்ந்து கலந்து கொள்பவனாகவும், சில நேரங்களில் பரிசு பெறாமலும் பல நேரங்களில் பரிசு பெறுபவனாகவும் இருந்திருக்கிறேன்.

பன்னிரண்டாம் வகுப்பிற்குப் பிறகு சிவகிரி ஓவிய ஆசிரியர் திரு.நா.ஜனார்த்தனன் அவர்களின் வழிகாட்டலில் Freehand ஓவியத் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றேன். பிறகு, மதுரை தே.கல்லுப்பட்டியில் 1986 மே மாதம் தொடங்கி மூன்று மாதங்கள் ஓவிய ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்து தேர்ச்சி பெற்றேன்.

1987 ஜூன் மாதம் ஓவிய ஆசிரியராக ஈரோட்டுப் பள்ளியில் சேர்த்தேன்.

ஒரு முழுமையான ஓவிய ஆசிரியர் என்பவர் இத்தோடு தனது ஓவியப் பணியை மூட்டை கட்டி (சிறிதும் காத்துக் கருப்பு அண்டாமல் இறுகிக் கட்டி) ஒரு ஓரமாக வைத்துவிட்டு தனக்கு ஒதுக்கப்பட்ட ஓவியப் பிரிவுவேளைகளைப் பிற

ஆசிரியர்களுக்குத் தாரைவார்த்துவிட்டுத் தலைமை ஆசிரியரின் தாள் பணிந்து, அலுவலகத்தில் புகுந்து, அங்கு பணியாற்றி, மேலும் புத்திசாலித்தனம் இருந்தால் மாவட்ட கல்வி அலுவலகம் / அலுவலர்களின் தொடர்புகளோடு வீடுபேறு அடைந்து பணி ஓய்வு பெறுவதே பெரும்பாலும் தமிழகக் கல்விப் புலம் ஏற்றுக் கொண்ட பண்பான மரபார்ந்த செயல் ஆகும்.

ஆனால், என்னிடம் ஓவியம் செலுத்திய தாக்கம் அவ்வாறு கல்விப் புலம் வளர்த்த அந்தப் போற்றத்தக்க மரபார்ந்த வழியில் சென்று சேவை புரிய என்னை அனுமதிக்கவில்லை.

நல்வாய்ப்பாக அப்போதிருந்த எனது பள்ளி நிர்வாகமும் என்னைப் புரிந்து கொண்டதாக இருந்தது. நான் என் மனம் போன போக்கிலே போனேன் அதுதான் என்னை இந்தக் கட்டுரை எழுதும் இந்த நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தி உள்ளது.

நான் இன்று கொண்டுள்ள ஓவியம் கலை இலக்கியம் சார்ந்த அறிவு என்பது எனது ஓயாத தேடல் வழியே பெற்ற புரிதலின்; அனுபவத்தின் கூட்டுச் சாறு.

இவ்வாறு நான் கூறுவது என்னைத் தற்பெருமைக்கு அருகில் கொண்டு நிறுத்தும் அபாயம் உள்ளது. எனவே, ஒன்றைக் தெளிவாக்க வேண்டியது மிக அவசியம்.

ஓவியம் சார்ந்த **தேடல்** மட்டுமே என்னுடையது. அத்தேடல் எனக்குப் பலவற்றை வாரி வழங்கியது. அவ்வாறு வாரி வழங்கிய ஆசிரியர்கள் - சிறு குழந்தைகள் முதல் மிக மூத்தோர் வரை பலர் உள்ளனர்.

இவற்றில் பத்திரிகைகள், சிறு பத்திரிகைகள், இலக்கியக் குழுக் கூட்டங்கள், பயிற்சிப் பட்டறைகள், கண்காட்சிகள், ஓவியம் இலக்கியம் சார்ந்த நூல்கள், கலை இலக்கிய விமர்சகர்களின் கட்டுரைகள் ஆகியவற்றின் பங்கும் அடங்கும்.

கையேந்திப் பிச்சை கேட்ட பெருமைக்கு மட்டுமே உரியவன் நான். ஓவியம் சார்ந்த அறிவை வாரி வழங்கிய பெருமைமிகு ஆசிரிய வள்ளல்கள் நீங்களும் இந்தச் சமூகமும்.

நிற்க / வேறு.

ஓவியம் வரைய மிகச் சாதாரண வெள்ளைச் சார்ட்; ஆர்ட் பேப்பர்: பென்சில், ரப்பர், கிரவுன்குயில் Hu : 2 இந்தியன் இங்க், சார்கோல் பென்சில்: 2 ஒரு கெட்டி அட்டை (இவற்றையும் 35 கிலோமீட்டர் தள்ளி உள்ள ஈரோட்டில் மட்டுமே வாங்க இயலும்) எனப் பத்தேபத்துப் பொருட்கள் மட்டுமே கொண்டிருந்த எளிய ஓவியனாக இருந்த எனக்குப் பத்திரிகைகள் காட்டிய ஓவிய உலகு வேறு; கண்காட்சிகளின் வழியாக நான் கண்டடைந்த ஓவிய உலகம் வேறு; இயல்பு வாழ்வில் நான் எதிர்கொண்ட ஓவிய உலகம் வேறு.

பத்திரிகையில் ஓர் ஓவியர் எழுத்தாளரின் படைப்புக்கு அழகு சேர்ப்பவராக இருந்தார். அதாவது எழுத்தாளரின் கதைக்கு உண்டான கதைக் களத்தைக் காட்சிப்படுத்துபவராக (illustrator) இருந்தார். கண்காட்சிகளில் தன் படைப்புகளைக் காட்சிப்படுத்திய ஓவியரோ தன் மனம் கவர்ந்த ஒன்றையோ,தன் மனதில் இருந்த ஒன்றையோ வரைந்து காட்சிப்படுத்தும் சுதந்திரம் கொண்டவராகவும், சுய படைப்பாளியாகவும் இருந்தார்.

இயல்பு வாழ்வில் நான் கண்ட... விளம்பரப் பலகைகள்; தட்டிகள்; பேனர்கள்;கட்டவுட்டுகள் வரையும் ஓவியர்கள் - தன் ஓவியத் திறனால் மற்றவரின் தேவையை நிறைவு செய்யும் அதே வேளையில், தங்களுக்கான வருமானத்தை ஈட்டித் தங்கள் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் திறன் பெற்றவர்களாக இருந்தார்கள்.

1983 இல் தொடங்கிய எனது பயணம் விளம்பரப் பலகைகள், தட்டிகள், எழுதும் ஓவியனாகத்தான் பயணித்தேன்.

1987இல் எனக்கு நிலையான வேலை வாய்ப்புக் கிடைக்கும் வரை அதைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்தேன்.

வருவாய் உறுதியான பிறகு நான் ஓவியத்தின் பின்னால் சுதந்திரமாகச் சுற்ற ஆரம்பித்தேன். அந்தக் காலகட்டங்களில் ஆனந்த விகடன், ஜூனியர் விகடன், விகடன் போஸ்ட், குங்குமம், பாவை சந்திரனை ஆசிரியராகக் கொண்ட புதியபார்வை, குமுதம், தீராநதி, குமுதம் ஸ்பெஷல்,

கணையாழி, தினமணி, தினமணி கதிர், காலச்சுவடு போன்ற பத்திரிகைகளிலும் இதழ்களிலும் வந்த ஓவியங்கள், ஓவியம் சார்ந்த கட்டுரைகளைத் தேடித் தேடிப் படிக்கும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிருந்தேன் (சிலவற்றைக் காசு கொடுத்து வாங்கும் செல்வாக்கும் பெற்றிருந்தேன்.) இந்த நிலையில் ...

1989-இல் ஆனந்த விகடனில் கி.ராஜநாராயணன் எழுதிய கோபல்லபுரத்து மக்கள் என்ற 34 வாரங்கள் வந்த தொடர் என்னைப் புரட்டிப் போட்டது.

அந்தக் கதையும் அந்தக் கதைக்கு ஓவியர். ஆதிமூலம் வரைந்த ஓவியங்களும் என்னுள் பேரதிர்ச்சியை ஏற்படுத்தின.

ஓவியம் என்பது மிகப்பெரிய கித்தான்களில் ஆயில்; அக்ரலிக் வண்ணங்களைக் கொண்டு வரையப்படுபவையே எனவும், அவ்வாறு வரையப்படுபவையே மதிப்பு மிக்கதாகக் கொண்டாடப்படும் தகுதி பெற்றவை எனவும் நான் வரிந்து வரைந்து வைத்திருந்த பிம்பத்தைத் தவிடு பொடியாக்கியது அந்த ஓவியங்கள்.

மேலும், ஒரே பத்திரிகையில் (இதழ்களில்) பிற பக்கங்களில் வந்த கதைகளுக்கு வரையப்பட்ட ஓவியத்தில் இருந்த மனிதர்களிடமிருந்து இவர் வரைந்த மனிதர்கள் வேறுபட்டு இருந்தார்கள்.

ஒளிப்படம் போன்று வரையப்பட்ட கதை மாந்தர்களிடமிருந்து இவர் வரைந்த மனிதர்களின் ஓவியங்கள் முற்றிலும் வேறுபட்டு இருந்தன.

கிராமப்புறப் பெண்களும், ஆண்களும், அவர்கள் அணிந்திருந்த அணிகலன்களும், ஆடைகளும், அவர்கள் வாழ்வோடு இணைந்த பொருட்களும், காளைகளும், எருமைகளும் மிக மிக எளிய துண்டுக் கோடுகளில் உயிர் பெற்று எழுந்தன.

அதுவரை நான் கணக்கிலே எடுத்துக் கொள்ளாமல் புறக்கணித்திருந்த இவர்களைப் போன்ற எளிய மனிதர்களிடம் பொதிந்திருந்த அழகை இவர்தான் வெளிக் கொண்டு வந்து

(சம்பட்டி அடியாக நடுமண்டையில் போட்டு) விளக்கிக் காட்டினார்.

இதற்கு முன்பு, ஆதிமூலத்தின் எண்ணை வண்ண (Oil Colour - Abstract painting) அரூப வகை ஓவியங்களை மட்டுமே பார்த்திருந்த எனக்கு இவரின் கோட்டோவியங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. ஆகவே, அவரின் கோட்டோவியங்களைத் தேடித் தேடிப் பார்க்க முற்பட்டேன். அக்காலகட்டத்தில் ஆதிமூலம் பல எழுத்தாளர்களின் நூல்களுக்கு அட்டைப்பட ஓவியங்கள் வரைந்து தந்துள்ளார். அவையும் சிறந்த படைப்புகளே. அவ்வாறு நான் தேடித்தேடிப் பார்த்து உணர்ந்த ஆதிமூலத்தில் ஓவியங்கள் எனக்குள் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்பல.

அவரது துண்டு துண்டான சிறிய கோடுகளின் வழியாக அவர் உருவாக்கிய ஓவியங்கள் எனக்குள் பரவசத்தை ஏற்படுத்தின.

நான் ஓவியம் வரைவதற்காக அழகான சிலைகள் கொண்ட புகழ்பெற்ற கோயில்கள்; அதன் சிற்பக்கூடங்கள் எனத் தேடி மதுரை, கொடுமுடி, கரூர், பேரூர் எனப் பயணித்த தருணத்தில்....

இவரோ ஒரு கிராமத்தின் சிதிலமடைந்த கோயிலின் மிகச்சிதிலமடைந்த அய்யனார்; அவரின் குதிரை; அய்யனாரைகத் தெய்வமாக ஏற்றுக் கொண்ட எளிய மக்கள்; அந்த மக்கள் தங்கள் கோரிக்கையை நிறைவேற்றிய அய்யனாருக்குப் பரிசளித்த காளைகள்; மற்றும் சிறிய உருவங்கள் என இவற்றைத் தீட்டிக் கொண்டு காட்சிப்படுத்திக் கொண்டே இருந்தார்.

மாபெரும் இராஜராஜர்கள் உருவாக்கிய பெரும் ஆலயங்களில்... மன்னர்களின், கலை விற்பன்னர்களின் ஆதரவைப் பெற்ற சிற்பிகளால் செதுக்கப்பட்டுப் பெருங் கோயிற் சுவர்களை அலங்கரித்து நின்ற சிற்பங்களின் பேரழகு பலராலும் விதந்தோதப்பட்டு அதன் பெருமை ஆலயம் தாண்டிப் பொங்கி வழிந்து பிரவாகமெடுத்து என் வீட்டு வாசல் வரை வந்து நின்றது.

என் மனம் அத்தகைய சிறந்த சிற்பங்களையே வரைய ஆசைப்பட்டது. ஆனால், ஆதிமூலமோ அந்த ஆலயங்களில் இருந்து இடம் மறுக்கப்பட்ட; ஊரின் ஒதுக்குப்புறத்தில் இருந்த;

மன்னர்களால் கவனிக்கப்படாத இன்னும் சொல்லப்போனால் புறக்கணிக்கப்பட்ட எளிய மக்கள் கலைஞர்களால் தாம் வாழ்ந்த **அந்த மண்ணையே பிசைந்**து உருவாக்கப்பட்ட அய்யனார் சிலைகளிலும் மண் குதிரைகளிலும் காளைகளிலும் பொதிந்திருந்த பேரழகைத் தன் அழுத்தமான, அழகான, சிறு சிறு துண்டுக் கோடுகளின் நெருக்கத்திலும் இடைவெளிகளிலும் சில இடங்களில் ஆழ்ந்த கருப்பிடத்தை உருவாக்கிய முறையிலும் நம்மை அதன் அழகில் சொக்கிப்போகச் செய்தவர் ஆதிமூலம்.

ஆதிமூலம் உழைக்கும் மக்களின் வெளிப்பாடாக அமைந்த கலைகளில் பொதிந்துள்ள அழகைப் பேரரசர்களின் பெரும்படைப்புகளோடு ஒப்பிடும்போது இவற்றின் கலைத்தன்மை அதற்குச் சற்றும் குறைந்ததோ கீழானதோ அல்ல, ஒருபடி மேலானது என்பதை வார்த்தைகளில் சொல்லாமல், அதன் கம்பீரத்தையும் அழகியலையும் எளிய கருப்புக் கோடுகளின் வழியாக மௌனமாக மெய்ப்பித்துக் காட்டினார்.

இவரின் வழியாகத்தான் நான் டி.ஆர்.பி மூக்கையா; தட்சிணாமூர்த்தி; பெருமாள் போன்றவர்களின் எளிய படைப்புகளில் பொதிந்திருந்த பேரழகை உணர்ந்து கொள்பவனாக ஆனேன்.

ஓவியரும் நோபல் பரிசு பெற்ற கவிஞருமாகிய இரவீந்திரநாத் தாகூர் தன் கவிதையொன்றில் இவ்வாறு கூறி இருப்பார்...

மலைகளின், கடல்களின், அழகைக் காண பெரிய அளவில் செலவு செய்து நெடுந்தொலைவு பயணம் செய்தேன்.

வீட்டிலிருந்து இரண்டடி தொலைவில் நெற்பயிரின் நுனிமீது தொங்கிக் கிடக்கும் **பனித்துளியின் அழகைக் காணத் தவறி விட்டேன்** - என. தன் கோட்டோவியத் தொடரின் வழியாக ஆதிமூலமும் இதைத்தான் சொல்லாமல் சொல்லி இருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறது.

கோபல்ல கிராமத்து மக்கள் தொடரில் அக்கிராமத்தின் மக்களின் உணர்வும் உழைப்பும் எளிமையும் வீரமும் அன்பும் ததும்பி வழிவதைக் குறைந்த கோடுகளின் வழியாகவே வரைந்து காட்டியிருப்பார்.

நீலகிரி கரிக்கையூரின் குகைகளில் நம் முன்னோர்கள் புறச் சூழலில் தம்மைப் பாதித்தவற்றைக் கண்டு உள்வாங்கி மனதில் அசைபோட்டுப் பிறகு குகைகளில் ஓவியமாகத் தீட்டினார்கள். அதன் தொடர்ச்சியான மரபாக, அந்தக் கண்ணியின் அறுபடாத தொடர்ச்சியாக ஆதிமூலம் இருக்கிறார் என்பதை அவர் வரைந்த நூற்றுக்கணக்கான கிராமியத் தெய்வங்களின் ஓவியங்கள் நமக்குக் காட்டுகின்றன.

எளிமையின் வலிமையை உலகுக்கு உணர்த்தியவர் காந்தி அடிகள். அந்தக் காந்தியையே மேலும் எளிமையாக்கி மறு உருவாக்கி நமக்குக் காட்சிப்படுத்தியவர் ஆதிமூலம் அவர் வரைந்த காந்தியின் தொடர் ஓவியங்கள் (நூறு ஓவியங்கள்) இந்தியா தாண்டி உலகெங்கிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

துண்டுக்கோடுகள், சிறுகோடுகள் மூலம் கிராமத் தெய்வங்களை வரைந்த ஆதிமூலம் காந்தி தொடரில் அவற்றோடு கூட நீள்கோடுகள், மிக மிகக் குறைந்த அவசியமான சில கோடுகள் மூலம் மட்டுமே காந்தியை - அவரின் எளிமையை: அன்பு; சோகம்; புன்னகை மாறாமல் வரைந்திருப்பார்.

நான் வாழ்ந்த கிராமப்புற வறுமையின் சூழல் காரணமாக வெறும் கிரவுன்குயில் நிப்பும் இந்தியன் இங்க் மட்டுமே வைத்துக் கொண்டு ஓவியத்தில் என்ன சாதித்து விட இயலும்? என்று கவலையோடு இருந்த எனக்கு ஆதிமூலம் முதுகில் தட்டிக் கொடுத்து வரைய ஊக்குவித்தது போல் அமைந்தன இத்தகு ஓவியங்கள்.

இதை அடுத்து ஆதிமூலம் வரைந்த மகாராஜா தொடர் ஓவியங்களில்... பல்வேறு விதமான ஆபரணங்கள், வைர வைடூரியங்கள் பதித்த தலைப்பாகைகள், விலை உயர்ந்த மேலாடைகள் அணிந்த மகாராஜாக்களின் கம்பீரமான தோற்றத்தையும் தன் எளிய துண்டுக் கோடுகளின் மூலம் மிக மிகச் சிறப்பாக வரைந்து இருப்பார்.

அதே ஓவியத் தொடரில் அதிகாரமற்ற செல்வம் இழந்த மகாராஜாக்களின் சோகத்தையும் பிழிந்து தந்திருப்பார்.

இவற்றோடு கூட தமிழ் ஆளுமைகள் பலரையும் தன் அற்புதமான கோடுகளில் ஓவியமாக்கி இருப்பார்.அவற்றில் எனக்கு மிக மிகப் பிடித்தமானது தமிழ்த் தாத்தா உவேசா அவர்களின் கோட்டோவியம்.

நான் பேருந்தில் பயணிக்கின்ற பல நேரங்களில் இவரின் கோட்டோவியங்களை எடுத்து வைத்துக்கொண்டு மணிக்கணக்கில் அந்தக் கோடுகளை பார்த்து வருவேன். அப்படிப் பார்த்து வந்ததின் விளைவாக ஆதிமூலத்தின் கோடுகளை நுட்பமாகப் படித்ததன் விளைவாக ஒரு பெரும் உண்மையை நான் கண்டு கொண்டேன். அதாவது அவர் தன் ஓவியங்கள் முழுவதிலும் **முரண்பட்ட கோடுகளைப் பயன்படுத்தி ஓர் ஒத்திசைவை உருவாக்கி இருக்கிறார்** என்ற பேருண்மையை நான் கண்டறிந்தேன். அதுவே, எனது இன்றைய கோடுகளின் ஆதார சுருதியாக உள்ளது.

ஆதிமூலத்தின் கோடுகளின் புரட்சி இத்தோடு நின்றுவிடவில்லை. தமிழ் எழுத்து உருவாக்கத்திலும் இவரின் பங்கு மிக மிக முதன்மையானது. அவர் தனக்கான தமிழ் எழுத்துருவை தமிழ்க் கல்வெட்டுகளில் இருந்து செழுமைப்படுத்தித் தமிழ் உலகுக்குத் தந்தார்.

அதனைப் பல சிற்றிதழ்கள் நூல் அட்டைகளிலும் பயன்படுத்தின. அதன் பின்னரே ஒரே மாதிரியாகப் பயன்படுத்தும் தமிழ் எழுத்துருக்களை மாற்றிப் புதுமையான வடிவில் கையால் எழுதும் எழுத்துருக்கள் நடைமுறைக்கு வந்தன.

ஆதிமூலத்தின்மாபெரும் பங்களிப்பை இச்சிறு கட்டுரையில் அடக்கி விட இயலாது. அவர் ஒரு கித்தானில் அடங்காத பேருரு.

அத்தகைய சிறப்பு மிகு ஓவியர். ஆதிமூலம் அவர்களை கண.குறிஞ்சி அவர்கள் ஈரோட்டில் நடைபெற்ற கலை இலக்கிய விழாவிற்கு விருந்தினராக அழைத்திருந்தார்.

விழாவின் ஒரு பகுதியாகத் தூரிகை ஓவிய அமைப்பின் ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. அக்கண்காட்சியில் இடம்பெற்ற ஓவியங்கள் பலவற்றையும் பார்வையிட்டுப்

பாராட்டினார் ஆதிமூலம் அவர்கள். அதில் நான் வரைந்த **கோட்டோவியம்** ஒன்றும் இருந்தது.

ஓவிய உலகில் மாபெரும் மாற்றங்களைத் தன் கோடுகள் வழியாகச் செய்த ஆதிமூலம் அவர்கள் தன் வலக்கரத்தைக் குலுக்கி என்னைப் பாராட்டினார் என்பது எனக்கு வாழ்நாள் பெருமை.

♦♦♦

கட்டுரையாளர்
ஓவியர், கோவை

# உயர்நீதிமன்றத்தில் தமிழுக்குத் தடையா?

**கோவை சுப்ரமணியன்**

“எங்கும் தமிழ், எதிலும் தமிழ்” என்ற முழக்கத்தைத் தமிழ் அறிஞர்களும், சமூக ஆர்வலர்களும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே முழங்கி வந்தார்கள். கல்வி நிலையங்கள், அரசு அலுவலகங்கள், நீதிமன்றங்கள் மற்றும் கோவில்களில் வழிபாடு உட்படத் தாய்மொழி தமிழுக்குத்தான் முதன்மையான இடம் என்பதே அவர்களது முழக்கத்தின் சாரம். தமிழின் பன்முக வளர்ச்சிக்குத் தனியாக ஒரு பல்கலைக் கழகத்தை அரசே அமைக்க முன்வர வேண்டுமென்று பொதுவுடைமை இயக்கப்போராளி ஜீவா பலமுறை தமிழகச் சட்டமன்றத்தில் குரல் கொடுத்தார்.

தமிழகத்தில் இன்றைக்கு நாம் பார்க்கும் நீதிமன்றங்கள் 1850-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. குற்றவியல் மற்றும் சிவில் வழக்கு சட்டங்கள் அனைத்தும் ஆங்கிலேயர் ஆட்சியில் உருவாக்கப்பட்டவை. சட்டக்கல்லூரி படிப்பும் முழுமையாக ஆங்கில வழியிலேயே அமைந்தன. அதன் விளைவாக மாவட்டக் கீழமை நீதிமன்றங்களில் வழக்குகளனைத்தும் மக்களுக்குப் புரியாத ஆங்கில மொழியிலேயே நடத்தப்பட்டுவந்தன. ஆங்கிலக் கல்வியில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தவர்களும் பார்ப்பன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே. அதன் விளைவாக வழக்கறிஞர் தொழிலிலும், நீதிபதிகள் பதவியிலும்

அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் ஆதிக்கம்தான் அண்மைக்காலம் வரை நடைமுறையிலிருந்துவந்தது. நீதிமன்றங்களில் தமிழைப்பற்றி அவர்கள் எந்தக்காலத்திலும் அக்கறை கொண்டதில்லை.

1956-ம் ஆண்டில் காமராஜர் ஆட்சிக்காலத்திலேயே அலுவல் மொழிச்சட்டம் (Tamil Nadu Official Language Act 1956) அமுலுக்கு வந்த பின்னரும், கீழமை நீதிமன்ற நடைமுறைகளில் தமிழ் மொழிக்கு முதன்மையிடம் கிடைக்கவில்லை. 1969-ம் வருடத்தில் பேரறிஞர் அண்ணா ஆட்சிக்காலத்தில் முதலில் கீழமை நீதிமன்றங்களில் தமிழை நடைமுறைப்படுத்தச் சட்டமன்றத்தில் விவாதங்கள் தொடங்கின. அவரது மறைவுக்குப்பின் கலைஞர் முதல்வராக ஆட்சிப்பொறுப்பேற்றதும் 1970 ஜனவரி 14-ம் நாள் முதல் மாவட்ட நீதிமன்றங்களில் தமிழ் நடைமுறைக்கு வந்தது. இருப்பினும் நீதிபதிகள் தங்களது தீர்ப்புகளைத் தமிழிலும் மற்றும் ஆங்கிலத்திலும் வழங்கிட அனுமதிக்கப்பட்டார்கள். தீர்ப்புகளையும் தமிழிலேயே எழுதவேண்டும் எனும் நடைமுறை 1976 நவம்பர் 14 முதல் அமுலுக்கு வந்தது.

உச்சநீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றங்களிலும் வழக்காடு மொழியாக ஆங்கிலம் மட்டுமே இருக்கும் என்று அரசியல் சட்டம் பிரிவு 438 வரையறை செய்திருக்கிறது. உயர்நீதிமன்றங்களில் தேவைப்பட்டால் குறிப்பிட்ட சில நிபந்தனைகளுடன் குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெற்று அந்தந்த மாநில மொழிகளை அமுல்படுத்தலாம் என்றும் கூறுகிறது. ஆனால், தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகளை ஆங்கிலத்தில் மட்டுந்தான் எழுத வேண்டும் என்றும் அரசியல் சட்டம் கூறுகிறது.

அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் இந்த உரிமையைப் பயன்படுத்திதான் குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெற்று உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், சட்டிஸ்கார், ராஜஸ்தான் மற்றும் பீஹார் மாநில உயர்நீதிமன்றங்களில் அந்த மாநிலங்களின் தாய்மொழியான ‘‘இந்தி’’ கடந்த பல வருடங்களாக வழக்காடு மொழியாக இருந்து வருகிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்மொழியை வழக்காடுமொழியாகக் கொண்டு வருவதற்கான தீர்மானத்தை 2010-ம் ஆண்டில் கலைஞர் முதல்வராக இருந்தபோது

சட்டமன்றத்தில் நிறைவேற்றினார். ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் அரசியல்சட்டம் பிரிவு 348 (2)-ல் கண்டுள்ள வழிகாட்டுதலின்படி குடியரசுத்தலைவர் ஒப்புதலுக்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அன்றைய நரசிம்மராவ் அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இருந்த பரத்வாஜ், தமிழகச் சட்டமன்றத் தீர்மானத்தைக் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பதற்குப் பதிலாக அந்தத் தீர்மானத்தை உச்சநீதிமன்ற ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தார். இது முற்றிலும் தவறு.

உச்சநீதிமன்றத்தின் அனைத்து நீதிபதிகள் கூட்டம் இந்தத் தீர்மானத்துக்கு ஒப்புதல் அளிக்க மறுத்தது. சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை அனுமதித்தால் உச்சந்திமன்றத்துக்கும், உயர்நீதிமன்றங்களுக்கும் இடையில் இருக்கும் நிர்வாகத்தொடர்பு பாதிக்கப்படுமென்றும், தமிழ் தெரியாத வேற்று மாநில நீதிபதிகள் சென்னை உயர்நீதிமன்றத்துக்கு பணிமாற்றலாகும் போது தமிழில் வழக்குகள் நடத்தினால் அவர்களுக்குப் புரியாது என்ற அபத்தமான காரணங்களைக்கூறித் தமிழுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட நீதிபதிகள் இந்தி பேசும் மாநில உயர்நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டு பணியாற்றியுள்ளார்கள். அவர்களுக்கு மட்டும் இந்திமொழி புரிந்ததா... என்ன? மொழிபெயர்ப்பாளர் மூலம் வழக்கின் விபரங்களைப் புரிந்து கொண்டு இந்தி தெரியாத நீதிபதிகள் கூடத் தீர்ப்பு வழங்கினார்கள். அன்றைய ஒன்றிய அரசு தமிழ்மொழித் தீர்மானத்தை அரசியல் சட்டப்படி குடியரசுத்தலைவருக்கு அனுப்பாமல், உச்சநீதிமன்றத்துக்கு அனுப்பியது தவறு என்றும், இந்தத் தவறை சரிசெய்யக்கோரி மீண்டும் ஒன்றிய அரசுக்குத் தமிழக அரசு பல கடிதங்கள் அனுப்பியது. ஆனால், ஒன்றிய அரசு உச்சநீதிமன்றத்தின் மறுப்பையே காரணங்காட்டி நமது மாநில உரிமையைக் கிடப்பில் போட்டு வைத்திருக்கிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தாய்மொழி தமிழை வழக்காடு மொழியாகக் கொண்டுவர வலியுறுத்திப் பல போராட்டங்களை நடத்திய மதுரை வழக்கறிஞர் தோழர் பகத்சிங், வழக்கறிஞர் பணியிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி

வைத்த தண்டனைகூடக் கொடுக்கப்பட்ட கசப்பான அனுபவம் நமக்குண்டு, துரதிருஷ்டவசமாக, உயர்நீதிமன்றத்தில் பணியாற்றும் பார்ப்பனர் அல்லாத வழக்கறிஞர்களில் பெரும்பான்மையான வழக்கறிஞர்களிடையே கூடத் தாய்மொழி தமிழை வழக்காடு மொழியாகக் கொண்டு வருவதற்கான ஆதரவு போதமானதாக இல்லை என்பதும் ஒரு கசப்பான உண்மை. சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழைக்கொண்டுவர தமிழகத்தில் பெரும் போராட்டத்தை நடத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்! இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட மாநிலங்களில் செயல்படும் உயர்நீதிமன்றங்களுக்கு ஒரு நீதி, சென்னை உயர்நீதிமன்றத்துக்கு வேறொரு நீதி எனும் ஒன்றிய அரசு மற்றும் உச்ச நீதிமன்றத்தினை அணுகித் தொடர நாம் இனியும் அனுமதிக்கக்கூடாது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தாய்மொழி தமிழின் குரல் விரைவில் ஒலிக்கவேண்டும்.

♦♦♦

கட்டுரையாளர்
மூத்த வழக்கறிஞர்

## குலவை

நந்தினி. மா.

'ஒடுக்கப்பட்ட மக்கள், குரல் பெற்று தங்கள் சுய அனுபவங்களை மையப்படுத்திப் பேசும்போது மாற்றம் நிகழும் இதைத்தான் நாம் அனைத்து அடிமட்ட இயக்கங்களிலும் காண்கிறோம்'

**– ஜானெட் மாக்**

இந்த மாற்றத்தின் பாதை எளிமையானது அல்ல. சுய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமெனில் கடந்த காலத்தின் கசப்பை அசைபோட வேண்டும். அதற்கு அஞ்சிப் பலர் பேசாமலேயே போகலாம். வலியை எதற்காக மீண்டும் கிளர வேண்டும் என்று எண்ணலாம். சமூகத்திற்காக நாம் சுமக்கும் பாரத்தை இறக்கி வைக்க, நடந்த அநீதிகளை அது தந்த வலியைப் பேசும் துணிச்சலைப் பிறப்பிப்பது தவிர வேறேதும் வழி உண்டா? வலியை விம்மி அழுது விழுங்குபவர்களை ஆசுவாசப் படுத்துவதோடு, வாழ்க்கையை எதிர்கொள்ள நம்பிக்கையூட்டும் பேரன்பின் அணைப்பாகத்தான் நான் குலவை - 2025ஐப் பார்க்கிறேன்.

**நாடக நெறியாளுநர், இலக்கியப் பேராசிரியர், மற்றும் அறிஞர் அ. மங்கை** அவர்களின் 40-ஆண்டுக்காலத் தமிழ் பெண்ணிய நாடக வெளியின் பயணத்தைக் கொண்டாடுவதற்காக பல கலைஞர்கள், ஆளுமைகள், தோழர்கள் மற்றும் பொதுமக்கள் ஜூன் (7.8.2025) ஆகிய நாட்களில் ஒன்றிணைந்தனர். தமிழ் நாடக அரங்கில் பெண்ணியம் மற்றும் பாலின விழிப்புணர்வை அடிப்படையாகக் கொண்டு உருவான பல நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. நாடகங்களுக்கு இடையே மங்கையின் நாடகப் பாடல்கள் மற்றும் ஏனைய பெண்ணியப் பாடல்கள் அரங்கேறின.

இரண்டு நாள் விழாவில் சில அற்புதமான படைப்புகளைக் காண முடியாத சூழல் ஏற்பட்டது. நான் பார்த்த வரையில் எனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் விழைவுதான் இந்தப் பதிவு.

சௌமியாவின் வாழ்க்கை நிகழ்வுகளை, வலிகளை மாயா ஆஞ்சலோவின் இரண்டு கவிதைகளுடன் இணைத்து விவரிப்பதாக 'நான் ஒரு பெண்' நாடகம் அமைந்தது.

இரண்டாவதாக அரங்கேறிய நாடகம் உள்ளுரம். 'எனது உடல் எனது உரிமை' என்று தொடங்கிய உள்ளுரம் - ஓர் உரிமைக்குரல். பெண்கள் தம் வாழ்வில் சிறுவயதில் இருந்து கடந்து வரவேண்டிய இன்னல்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாலியல் சீண்டல்கள் ஒரு பள்ளிப் பருவப் பெண்ணின் உடல் நலத்தையும் மனநலத்தையும் சீர்குலைக்கும் யதார்த்தம்தான் உள்ளுரத்தின் மையக்கரு. இந்த நாடகத்தைப் பார்த்துவிட்டு என் நட்பு வட்டத்தில் எழுந்த உரையாடல் ஆறுதலைத் தந்தது. இதுவரை யாரிடமும் சொல்லாத பல பக்கங்களை வெளிப்படையாகப் பேசும் வெளியை உருவாக்கியது.

**'யுகங்களின் மௌனத்தை இன்று நாம் கலைக்கிறோம்!**
**சேருவோம் தோழி நாம் சோர்வகற்றிச் சேருவோம்!'**

என்னும் சுபத்ராவின் வரிகள் எனக்குள் ஏற்படுத்திய கிளர்ச்சி, நம்பிக்கையின் கண்ணீரால் வெளிபட்டது.

'ஔவை' இன்குலாப் எழுதிய முதல் நாடகம். மங்கையின் நெறியாள்கையில் முதன் முதலில் 1998-இல் அரங்கேறியது.

சில தமிழ் அறிஞர்களும் திரைப்படங்களும் ஔவையை, தள்ளாடும் தமிழ் மூதாட்டியாகவும் ஆண்கள் உருவாக்கிய தர்மத்தை ஆதரிக்கும் புலவராகவும் சித்தரித்துள்ளனர் என்பதை உணர்த்தும் முயற்சியே ஔவை நாடகத்தின் கரு. நாடகந்தோறும் நகைச்சுவை இழையோடியது. வலிமையான வசனங்கள் நிறைந்திருந்தன.

**‘கடந்த காலத்தின் கட்டுக்கதைகள் எல்லாம்**
**ஆர்ப்பரிக்கும் கடலுக்குள் எரிவோம்’**
**‘உன்னை மீறிய எந்தக் குறியும் உனது உடலை**
**தீண்டாதவாறு அக்னி குஞ்சாய் உயிர்த்தெழு !’**

என முடியும் ஔவை நாடகம் பலவித எதிர்ப்புகளைக் கடந்து சேர்த்த வீரத்திற்கு வலுச் சேர்த்தது.

இலங்கைச் சூழலைக் குறித்த ‘புல்லின் சிறகு’, ‘நடை நடையாய்’ ஆகிய நாடகங்களைப் ‘பாடினிகள்’ குழுவினர் நிகழ்த்தினர். ஈழத்து மக்களின் அன்றாட வாழ்வின் சிக்கல்களை மையப்படுத்துவதாக நாடகங்கள் அமைந்தன. போருக்குத் தீர்வாக அன்பு ஒன்றே கலங்கரை விளக்கம் எனப் பாடினிகள் நிறுவினர். ‘தோள்கள் இணைய, குரல்கள் உயர, அன்பு செய்வோம். அன்பே அறமென மொழிவோம்.’ என்று நிறைவு செய்யும் பொழுது பார்வையாளர்களின் மனம், மாற்றம் நிகழும் எனும் நம்பிக்கையால் நிறைந்ததை உணர முடிந்தது. ‘மட்டுநகர் கண்ணகைகள்’ என்னும் நூலில் பாடினிகள் குழுவைக் குறித்தும் அவர்களின் நாடகங்களைக் குறித்தும் விரிவாக மங்கை அவர்கள் எழுதி இருக்கிறார்.

எழுத்தாளர் மற்றும் பாலியல் சிறுபான்மையினரின் உரிமைக்காகப் பணியாற்றும் ஆர்வலர் ஆ. ரேவதியின் வாழ்க்கை நிகழ்வுகளின் தொகுப்புதான் ‘வெள்ளை மொழி’. 120க்கும் மேற்பட்ட மேடை அரங்கேற்றம் கண்டுள்ளது. அவர் போராட்டத்தைப் பார்வையாளர்களுக்குக் கடத்தும் பனுவலும் நடிப்பும் நாடகத்தின் வெற்றி.

‘என்னைத் தொடர்ந்து பல திருநங்கைகள் புத்தகங்கள் எழுதத் தொடங்கியுள்ளனர்’ என்பதைச் சொல்லும் பொழுது ரேவதியின் கண்களில் மிளிரும் பெருமிதம் பேரழகு.

**‘நல்ல வேளை, நான் பிறப்பால் பெண் இல்லை.**
**பெண்ணாக நீங்கள் ஏற்க மறுத்ததே எனக்கு**
**கிடைத்த விடுதலை.**
**உங்கள் ஆணாதிக்க குறியை அறுத்துக்**
**கொள்ளுங்கள். அப்பொழுது தெரியும் நீங்கள் யார்**
**என்பது.**
**பிறகு சொல்லுங்கள், நான் பெண்ணில்லை என்று’**

எனும் கல்கி சுப்பிரமணியத்தின் கவிதை வரிகளுடன் ரேவதி கை தட்டி முடிப்பார். ஒவ்வொருமுறை ‘வெள்ளை மொழி’ அரங்கேறும் பொழுதும் சில நொடிகளுக்கு அரங்கத்தில் கை தட்டல்கள் நிற்பதே இல்லை.

போர்க்களத்தில் இறந்தபட்ட வீரர்களின் குடும்பத்துப் பெண்களின் மனநிலையைக் காந்தாரி, குந்தி ஆகிய மகாபாரத பாத்திரங்களின் பார்வையை இன்றைய போர்ச் சூழலுடன் ஒப்பிட்டு உருவாக்கப்பட்ட நாடகம் ‘ஸ்த்ரீ பர்வம்.’ நாடகத்தின் இறுதிப்பகுதியில் குந்தியும் காந்தாரியும் கட்டியணைத்து அரவணைப்பை வெளிப்படுத்தும் காட்சி நாடகத்தின் உச்சம். முக்கியப் பாத்திரமாகவே வெள்ளைத் துணி, கலைஞர்களுடன் பயணிக்கிறது. திரையில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் பெருந்துயரை உணர்த்தும் புகைப்படங்கள், இறந்து பட்டவர்கள், படுகாயம் அடைந்தவர்களின் புள்ளி விபரங்கள் காட்டப்பட்டன. போர்ச்சூழலில் எழுதப்பட்ட கவிதைகளும் திரையிடப்பட்டன. பார்வையாளர்களுக்குத் துயரம் கடத்தப்பட்டது. ‘போர் வேண்டாம். ஒற்றுமையாக வாழ்வோம்’

‘கொடூரமான ஆட்சி முடிவுக்கு வர வேண்டும். அன்புள்ளம் படைத்தவர்கள் உலகை ஆள வேண்டும்’ என்ற கருத்துடன் ‘ஸ்த்ரீ பர்வம்’ முடிந்தது.

தமிழ்ப் பெண்ணிய நாடக வெளி உருவாக்கத்தில் இன்றியமையாத பங்கு வகித்தவர்கள், தங்கள் பயணத்தைப் பகிர்ந்து கொள்ளும் களமாக இரண்டாவது நாள் கலந்துரையாடல் அமைந்தது. இதனை வலையொளிப் பக்கத்தில் பதிவேற்றினால் பல கலைஞர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் நாடகத்துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் அடிப்படையான முக்கியத் தரவாக

அமையும். திறமைகளை வெளிக்கொணரவும் உணர்வுகளைக் கலையாக்கவும் திறந்த ஆற்றகைக்களம் இடமாக அமைந்தது. கட்டைக்கூத்துக் கலைஞர் திலகவதி, மகாபாரதத்தின் பாத்திரங்களான அம்பை மற்றும் சிகண்டியாக நடிக்கிறார். அம்பை சிகண்டியாக மாறிப் பீஷ்மரைக் கொல்கிறாள். எதற்காக? என்பது கதைக்களம். 'பனித்தீ' கட்டைக்கூத்து வடிவத்தில் உருவாக்கப்பட்ட நாடகம். நடித்துகொண்டிருக்கும் பொழுது மேடையில் ஆடை ஒப்பனைகளைக் களைதல் முறையன்று என்ற பழமையை மங்கை உடைத்திருக்கிறார். சிகண்டி அம்பை ஆகிறாள். பார்வையாளர்களைத் திசை திருப்பும் நோக்கம் ஏதுமின்றி, பெண்ணியம் பனுவலில் மிளிர்கிறது. பார்வையாளர்களுக்கு 'பனித்தீ' ஓர் ஒப்பற்ற அனுபவம். வசனங்கள் மடைதிறந்த செந்தமிழ் வெள்ளம். பின்னிருக்கையில் இருந்து பார்ப்பவர்களுக்கு இசை வாத்தியங்களின் ஓசை அதிகமாக இருந்தமையால் சில வசனங்கள் புரியாமல் இருக்க வாய்ப்புள்ளது என்று தோன்றியது. 25 ஆண்டுகளுக்கு முன் உஷாராணி பனித்தீயை அரங்கேற்றி இருக்கிறார். அவர்தம் அனுபவத்தை பகிர்ந்து கொண்டது, அரங்கத்தை நெகிழ்வித்தது.

**'போரில்லாமல் அனைவரும் சமமென**
**தோழமையோடு வாழ்ந்திடுவோம்'**

என்று 'பனித்தீ' முடியும். திலகவதி அம்பை மற்றும் சிகண்டியாக வாழ்ந்தார்.

நாடகங்களுக்கு இடையே அரங்கேறிய பாடல்கள் நம் முன்னோர்கள் தலைமுறை தலைமுறையாக ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்பால் பட்ட துயரத்தையும் இடைவிடாத போராட்டத்தையும் எண்ணிப்பார்க்க வைத்தது. குறத்தி பாடல்களும் தாலாட்டும் இடம் பெற்றன.

'சைக்கிள் ஓட்டக் கத்துக்கணும் தங்கச்சி' என்ற பாடல், ஒரு வாகனம் ஓட்டக் கற்றுக்கொள்ளுதல் பெண்களுக்கு வாழ்வை எளிமைப்படுத்துவோடு அவர்கள் சுதந்திரமாக வாழத் துணை புரிகிறது என்பதை உணர்த்தியது.

'அவர் விம்மி விம்மி விம்மி விம்மியழுங் குரல் கேட்டிருப்பாய் காற்றே, துன்பக் கேணியிலே - எங்கள் பெண்கள் அழுத சொல்'

என்று நாட்டை நினைப்பாரோ எனும் பாடல் வரிகள் காற்றில் கலந்து எதிரொலித்தன.

‘ஈரம் மறுக்கப்பட்ட எல்லா கரைகளிலும் ஆயிரம் முலைகள் அமுதசுரபிகளாய் நதியும் அவ்வாறு நடந்தது’

‘கற்பு, கற்பு என்று சொல்லி கதை அளக்கும் புராணங்களைக் கேட்டால் எனக்குக் கோபம் வருதம்மா’

‘யாரு யாரு யாரு நீ? கேள்வி கேட்க யாரு நீ?’

போன்ற பாடல்கள் சமூக அரசியல் கட்டமைப்பை எதிர்க்கும் குரலாக அமைந்தது.

நாடகம் ஒரு கூட்டு முயற்சி, இந்தத் திருவிழாவும் அப்படியே நிகழ்ந்தது. குலவைக்காகப் பல தன் ஆர்வலர்கள் ஒன்று இணைந்தனர். நாடகங்கள் தொடங்குவதற்கு முன் மேடையைத் தயார் செய்தல், பார்வையாளர்களை முறையே வழிநடத்துதல், ‘தமிழ் பெண்ணிய நாடக விழா’ எனும் சட்டையை அவர்கள் அணிந்திருந்ததால் எவ்வித உதவிக்கும் எளிமையாக அவர்களை அணுக முடிந்தது. அரங்கிற்கு வெளியே புத்தக விற்பனை நடைபெற்றது. கழிவு விலையில் பல நூல்களை மக்கள் வாங்கிப் பயனடைந்தனர். குலவையில் கலந்து கொள்ள இலவச அனுமதியோடு இரு வேளை உணவும் தேனீரும் வழங்கியது, எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உண்டது விழாவின் தனிச்சிறப்பு.

நாடகங்கள் அரங்கேறும் பொழுது திரையில் அதற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் (சப்டைட்டில்ஸ்) காட்சிப்படுத்தியது பார்வையாளர்களுக்கு முழுமையான அனுபவத்தைத் தந்தது.

ஆங்கில சப்டைட்டில்களைக் கையாள்பவர், அந்த நாடகத்தை ஆழமாக உள்வாங்குதலும் ஒவ்வொரு நாடகக் கலைஞரின் வசன வேகத்திற்கு ஏற்பக் காட்சிப்படுத்தப் பயிலுதலும் இன்றியமையாதது. இந்த முயற்சி பெரும்பான்மையான நாடகங்கள் அரங்கேறிய பொழுது வெற்றி அடைந்தது எனினும் சில இடங்களில் நாடகக் கலைஞர்களின் வசனத்தைக் காட்டிலும் திரையில் ஆங்கில சப்டைட்டில்கள் முன்னதாகவோ தாமதமாகவோ தென்பட்டது.

1980 தொடங்கி மங்கையின் நாடக மேடைப் பொருட்கள், புகைப்படங்கள், அவர் குறிப்பேட்டின் சில பக்கங்கள், ஆடை வடிவமைப்பு வரைபடங்கள், கைப்படத் தோழர்கள் எழுதிய வாழ்த்துகள், அழைப்பிதழ்கள், பத்திரிகைக் கட்டுரைகள் கண்காட்சியில் இடம்பெற்றன. மட்டக்களப்பு நியாய நடை 2022 மே மாதம், இலங்கையில் நடந்த நாடுதழுவிய போராட்டத்தில் தினமும் நடையில் கலந்து கொள்வோர் பிடித்துச் சென்ற முழக்கங்களைச் சுமந்த முழு நீளச் சேலை ஒன்றும் காட்சிப்படுத்தப்பட்டது. கண்காட்சியில் நாங்க ரெடி, சிரிப்புதான் வருது, காற்று, கிரேவ் டிக்கர், பனித்தீ, ஏர்வாடி, ஸ்த்ரீ பர்வம், வாக்குமூலம், ஔவை, சஞ்சாரி, யாது தம் ஊர், பல் சான்றீரே, சுடலையம்மா, குறிஞ்சிப்பாட்டு, கறுப்பி போன்ற நாடகங்களிலிருந்து தாக்கத்தை ஏற்படுத்தும் வசனங்கள் வைக்கப்பட்டிருந்தன.

திரையில் முழு நாடகங்களைக் காண வழிவகை செய்யும் வலையொளிப் பக்கத்திற்கு இட்டுச் செல்லும் க்விக் ரெஸ்பான்ஸ் கோட் இருந்தது. நாடகக் குழுவின் பயணம் மேடைக்குப் பின் எவ்வாறு இருக்கும் என்பதை உணர இக்கண்காட்சி உதவியது. பார்வையாளர்களுக்கும் தம் உள்ளக் கருத்தை வெளிப்படுத்த இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

டீ மற்றும் சுரேன் வடிவமைத்த இந்தக் கண்காட்சி ஜூன் 6 முதல் 10 வரை அலையன்ஸ் பிரான்சிஸின் தரைத்தளத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

குலவை 2025 எண்ணற்ற வினாக்களை எழுப்பி விடைகளைக் கண்டறியும் பாதையையும் வகுத்துத் தந்துள்ளது.

இறுதி நாள் மங்கை தன் உரையில்,

**‘என்றும் புதிதாய் கற்க வேண்டும்**
**என் தோள் மீது நின்று அடுத்த தலைமுறை**
**எல்லை விரிக்க வேண்டும்’**

என்று தன் கவிதையைச் சொல்லி முடித்தார்.

மேலும் இந்த இரண்டு நாள்கள், மங்கையின் அரங்கப்பயணத்தில் இடைவெளியற்ற படைப்பூக்கத்துடன் பயணித்த மறைந்த மக்கள் **கவிஞர் இன்குலாப்,** பெண்ணிய

வரலாற்று ஆசிரியர் **வ.கீதா,** தமிழக வேர்களைத் தூரிகையால் தீட்டும் **ட்ராட்ஸ்கி மருது** ஆகியோருக்கு மரியாதை செய்யும் நிகழ்வாகவும் அமைந்தது.

குலவை - பெண்கள், க்வீர் சமூகத்தினரின் போராட்டத்தை உரக்கப் பேசியது. எதிர்ப்பை எவ்விதத் தயக்கமும் இன்றி முன்வைத்தது. வாழ்க்கையே போராட்டம் தான் எனும் நிலையில் இரண்டு நாள்கள் ஒன்றிணைந்து ஒருவரையொருவர் அரவணைத்துக் கொண்டாடித் தீர்த்த திருவிழா - குலவை.

குலவையுடன் விழா நிறைவுற்றது.

தமிழ் பெண்ணிய நாடக வெளியில் அறிவின், சமத்துவத்தின், அன்பின் ஒளி மேலும் பரவ வேண்டும் என்ற குலவையின் நோக்கம் நிறைவேறட்டும்.

♦♦♦

கட்டுரையாளர்
நந்தினி மா,

முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலைத் தமிழியல் மற்றும்
உயராய்வுத் துறை,
செல்லம்மாள் மகளிர் கல்லூரி,
கிண்டி, சென்னை - 600 032.




குலவை 2025 முகப்பு



ஔவை நாடகக் காட்சி மீட்டுருவாக்கம்


Violence, rage, addiction, headaches,
suffocation, inability to focus ....



# நல்லோர் வட்டம்

**கண. குறிஞ்சி**

சிறு துளி, பெருவெள்ளம் என்பது தமிழ்ச்சொலவடை. அதன் அடிப்படையில் 1980 ஆம் ஆண்டு சிறு அளவில் தொடங்கப்பட்டிருந்தாலும், நல்லோர் வட்டம் எனும் அமைப்பு 2000-ஆம் ஆண்டில் சென்னையைச் சார்ந்த சமூகச் செயல்பாட்டாளர் **பாலசுப்பிரமணியம்** அவர்கள் தலைமை ஏற்ற பிறகு, மாபெரும் பாய்ச்சலில் பெருவளர்ச்சி பெற்றது. அவரது விடாமுயற்சியால் தமிழகம் தழுவிய மாபெரும் விருட்சமாக நல்லோர் வட்டம் இப்பொழுது பல்வேறு கிளைகளோடு விரிவடைந்து உள்ளது.

ஓர் இலட்சிய சமுதாயம் அமைக்க இவ்வமைப்பு மேற்கொண்டு வரும் பல்வேறு பணிகளைப் பாராட்டி, மேனாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் பேசியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நம் நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சமூக அமைப்பாகத் தன் இலக்கை இது வரையறுத்துக் கொண்டுள்ளது. அதற்கேற்பப் பகுதி வாரியாக, துறை வாரியாகச் சமூகப் பார்வையுடைய அறிவார்ந்த பகுதியினரை இது ஒருங்கிணைத்து வருகிறது.

இரத்ததானம், கண்தானம், மரக்கன்று நடுதல் போன்ற பொதுவான எளிய பணிகளில் தொடங்கிய இவ்வமைப்பு, இன்று

100 செயல்பாடுகளை உள்ளடக்கிய பல்வேறு களங்களாகப் பெருகியுள்ளது. அதிலும் குறிப்பாக மாணவர்கள், இளைஞர்கள், மகளிர் ஆகியோரைச் சமூகப் பணிகளுக்கு ஈர்ப்பதைத் தனது முக்கியமான இலக்காக வைத்துள்ளது. கிராம சுயாட்சி, சுற்றுச்சூழல் மேம்பாடு, வாழ்வியல் விழிப்புணர்வு என இதன் செயல்பாடுகள் மென்மேலும் வளர்ந்து வருகிறது.

தமிழகத்திலுள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களை அணுகி, அவர்களில் பொதுநல நோக்கும் பொறுப்புணர்வும் மிக்கவர்களைத் தெரிவு செய்து, அவர்களை "மாணிக்க மாணவர்கள்" என வகைப்படுத்தி அவர்களுக்குத் தனிச்சிறப்பான பயிற்சிகளை நல்லோர் வட்டம் நல்கி வருகிறது. இன்றைய நிலையில் தமிழகத்தில் இப்படிப் பல்லாயிரக் கணக்கான மாணிக்க மாணவர்கள் பொறுப்பும், குடிமைப் பண்பும் மிக்கவர்களாக அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றனர். அதிலும குறிப்பாக அரசுப்பள்ளி மாணவர்களை மையப்படுத்தி இத்தகைய முன்னெடுப்பை நல்லோர் வட்டம் செய்து வருவது பாராட்டுதலுக்குரியது.

அதே போல் மகளிர் களம் வாயிலாகப் பெண்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் பணியும் தொடர்கிறது. "இல்லம் தேடி உள்ளம் நாடி" எனும் கோட்பாட்டின் அடிப்படையில் பல தரப்பிலும் உள்ள மகளிரைத் தனித்தனியே சந்தித்து அவர்களை ஒருங்கிணைத்து வருகிறது இவ்வமைப்பு.

இலட்சிய சமுதாயம் அமைப்பதற்கான பொறுப்புணர்வு மிக்க இளைஞர்களை வளர்த்தெடுத்து அவர்களை மாவட்ட / மண்டல / மாநில அளவிலான கட்டமைப்புகளில் களப் பொறுப்பாளர்களாக முன்நிறுத்துகிறது.

நமது நாடு, கிராமங்களை அடிப்படை அலகுகளாகக் கொண்டிருப்பதை அனைவரும் அறிவோம். கிராமங்களிலுள்ள ஊராட்சித் தலைவர்களுக்குச் சிறப்பு முகாம்கள் நடத்திக் கிராமங்களுக்கென அரசு வழங்கி வரும் பல்வேறு உதவிகள் குறித்து விழிப்புணர்வு ஊட்டி வருகிறது. மேலும் கிராம நிர்வாகம், நிதி ஒதுக்கீடு, பொருளாதாரத் திட்டமிடல் போன்றவை குறித்துக் கிராம சபை மூலம் தொடர்ந்து பயிற்றுவிக்கின்றனர். பொதுவாகக் கிராமங்கள் சுயாட்சி மிக்கவையாக மாறத்

தேவையான அடித்தளக் கட்டமைப்புப் பணிகளை இவ்வமைப்புத் தன் செல்நெறியாகக் கொண்டுள்ளது.

ஈரோட்டில் சூழலியல் பணியாற்றி வரும் "ஒளிரும் ஈரோடு" எனும் அமைப்பிற்கு முதல் முறையாக நல்லோர் வட்டம் அண்மையில் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது. அவ்விழாவில் அறிவியலாளர் **மயில்சாமி அண்ணாதுரை** அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றினார். இந்நிகழ்வில் நல்லோர் வட்டத்தைச் சார்ந்த **பாலசுப்பிரமணியம், அக்னி ஸ்டீல்ஸ் நிர்வாக இயக்குநர்கள் தங்கவேலு, சின்னுசாமி மற்றும் கேகேஎஸ்கே ரபீக், க.பழனித்துரை, கார்த்திக்** உள்ளிட்ட பல்துறை ஆளுமைகள் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தனர்.

நல்லோர் வட்டம் போன்ற அமைப்புகள் நாட்டில் பெருக வேண்டும். சனநாயக விழுமியங்கள் மிக்க ஒரு பொன்னுலகை அப்பொழுது நாம் எளிதில் கண்டடைய முடியும்.

---




நல்லோர் வட்டம் சார்பாக
டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை அவர்களிடமிருந்து
"ஒளிரும் ஈரோடு" தலைவர் சின்னுசாமி அவர்கள்
பாராட்டுப் பட்டயம் பெறுதல்.




"மாண்புமிகு மக்கள் சங்கமம்" ஈரோடு விழாவில் பங்கேற்ற ஆளுமைகள்



நிகழ்வு மேடையில் ஆளுமைகள்




"ஒளிரும் ஈரோடு" தலைவர் சின்னுசாமி அவர்கள் ஏற்புரை.

# உங்கள் மனஓசை

புதுமலரே,

சமூக அரசியல் கலை இலக்கிய இதழ் என்னும் உன் முகவரி உனக்கு முற்றிலும் பொருந்தி வரும் பொருண்மையின் ஆழத்தை ஒவ்வொரு வெளியீட்டிலும் உணர்ந்து பெருமை கொள்கிறேன்.

வாசித்தவுடன் மூடி வைத்து விட நீ எழுத்துக்களின் தொகுப்பு அன்று ;ஆவணக் காப்பகத்தில் இனி முதலிடம் உனக்குத் தான்.

வாழ்க பல்லாண்டு! வளர்க உன் பணி!

இனி ஏப்ரல்-சூன் 2025 புதுமலர் இதழ் பற்றி...

முதலில் **சிற்பி** அவர்களுடன் நேர்காணல். இது தமிழின் இன்றைய வரலாறு. 'என் வகுப்புகளில் பாடம் ஒரு பகுதி; நான் படித்தவை ஒரு பகுதி; உலக அனுபவம் ஒரு பகுதி என மூன்று கூறுகள் இருப்பதால், மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுவார்கள் 'என்னும் அவரது கூற்று இன்றைய ஆசிரியர்களுக்குப் பல பயிற்சி வகுப்புகளைப் பிழிந்திட்ட சாறு. 'வானம்பாடி என்ற பெயரை முன்மொழிந்தவர் இளமுருகு. மானுடம் பாடும் என்ற அடைமொழியை இணைத்தது நான்'

- அறிய வேண்டிய செய்தி. 'பாரதி என்ற தீபத்தில் கொளுத்திய தீப்பந்தம் பாவேந்தர்'

'முத்துலிங்கம் நவீனத் தமிழ் இலக்கியத்தின் ஒரு சிகரம்' என்பன முத்தாரங்கள்.

மண்ணுக்கேற்ற மார்க்சியம் பற்றித் **தோழர் தியாகு** கூறுவன கருத்தில் கொள்ள வேண்டியவை. 'மார்க்சியத்தின்

பெயரால் உலவி வரும் வறட்டுப் போக்குகளை' நன்றாகவே வெளிப்படுத்துகிறார். இயற்கை அறிவியலுக்கும் சமூக அறிவியலுக்குமான அடிப்படை வேறுபாட்டைக் கூர்மையாக விளக்குகிறார். மார்க்சியம் பற்றிய அறிவார்ந்த விளக்கம் இக்கட்டுரை.

ஜார்ஜ் எல் ஹார்ட் அவர்களின் உரை **பேரா.கமலக்கண்ணன்** தமிழாக்கத்தில் பொலிவு பெற்றுள்ளது. சமஸ்கிருதம் குப்தர் காலத்தில் தான் பெரும் நிலையுற்றது என்பது அறிய வேண்டிய செய்தி. புறநானூற்றுப் பாடல்களும் சங்க அகப்பாடல்களும் பிற இந்திய இலக்கிய மரபுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டு இருப்பதை ஹார்ட் தெளிவுபடுத்துகிறார். தமிழ் அசைவியக்கமுள்ள (Dynamic) மொழி என்று அவர் மொழிவதை இன்றைய தமிழுலகு நன்கு உள்வாங்க வேண்டும்.

களப்பிரர் காலம் குறித்து ஆய்வாளர் **கணியன் பாலன்** ஆழமான பல்வேறு கருத்துக்களை முன் வைக்கிறார்.இப்பொருள்மேலும் ஆய்வுக்குரியது என்பது இவற்றால் புலப்படுகிறது.

கூத்துப்பட்டறை ந.முத்துசாமி அய்யா பற்றி அவர் மாணவர் **சதீஸ்குமார்** உணர்வுப் பூர்வமாக வெளிப்படுத்தும் செய்திகள் நவீன நாடகவுலகில் அய்யா அவர்களின் சீரிய பங்கினை வெளிப்படுத்துகின்றன. அய்யாவின் மகன் நடேஷ் 'எங்க அம்மா ஒரு உழைப்புப் பேய்' என்று உரைப்பது அம்மாக்கள் பற்றிய அரும் செய்தி.

பல்கலைக்கழக நல்கைக் குழுவின் வரைவறிக்கையைத் திறம்பட அலசுகிறார் இதழாசிரியர் **கண.குறிஞ்சி** அவர்கள். தோற்றம், நெறிமுறைகள் என அறிய வேண்டிய செய்திகள், மாநிலங்கள் எதிர்ப்பு, அத்து மீறிய செயல்கள் எனக் கண்டிப்புகரையான் புற்றெடுக்கக் கருநாகம் புகுந்த கதை மாநில அரசிடம் சம்பளம் வாங்கும் ஊழியரின் அயோக்கியத்தனம் என ஆவேச அலை ஆக்கபூர்வமாக விரிகிறது. தீர்வைச் சொல்லி முடிப்பது சிறப்பு. பற்றவைக்கப்பட்ட இன்றைய தீ பற்றிய தேவையான அலசல் இந்தக் கட்டுரை.

ஜாலியன் வாலாபாக் கொடுமை குறித்த **பேராசிரியர் விஜயகுமார்** அவர்களின் மொழிபெயர்ப்புக் கட்டுரை இந்நாள் சமூகம் அறிந்து கொள்ள வேண்டிய பாடம்.

**"அறிவின்**
**அத்தனை சாளரங்களையும்**
**திறந்துவைத்து**
**உலகைப்பார் என்றது எங்கள் தமிழ்**
**ஆங்கிலம்**
**பக்கத்தில் வந்து அமர்ந்தது,**
**எங்கள் செல்வங்களுக்கு**
**உலகம்**
**உள்ளங்கைகளுக்குள் வந்து**
**உட்கார்ந்தது.**
**இதில் எதற்கு வேண்டும் மூன்றாம் மொழி?"**

**சென்னிமலை தண்டபாணி**யின் இந்தக் கேள்விக்குப் பதில் தர தேசத்தில் எவனாலும் முடியாது.

பேரா.சாய்பாபாவின் மறைவுக்குப் பிறகு அவரது மகள் மஞ்சீரா எழுதுவது கடிதமன்று; கண்ணீர்க் காவியம். இது மொழிபெயர்ப்பு என்று எவரும் கூற முன் வர மாட்டார்கள். கட்டுரையாளர் கண.குறிஞ்சி அவர்களின் மொழிபெயர்ப்பு, மஞ்சீராவின் படைப்புக்கு மேலும் சுவை கூட்டுகிறது.

அகத்தியர் பற்றிய **அறிஞர் பொ.வேல்சாமி**யின் எழுத்து தமிழில் ஆரியம் புகுத்தப்பட்ட வரலாற்றைப் புலப்படுத்தும் ஒளிவிளக்கு.

இவ்வாறு ஒவ்வொருவரின் எழுத்து பற்றி எடுத்துரைப்பதே ஒரு கட்டுரை ஆகிவிடுகிறது. புதுமலரின் பொலிவைப் புலப்படுத்த ஒவ்வொரு இதழைத் தொடர்ந்து திறனிதழ் ஒன்று வருவது தான் பொருத்தமாக இருக்குமோ!

♦♦♦

'பேரா.நாகராசன் (பணி நிறைவு)
ஈரோடு